விலை ரூபா 20.00

www.onlineuthayan.com



» சறுக்கினார் இளவரசர் பக்கம் 10



» ஆற்றில் விழுந்தது பஸ் பக்கம் 11



» இறுதியாட்டத்துக்கு மானிப்பாய் இந்து பக்கம் 23



» ஆஸி.அணி ஆக்ரோஷம் பக்கம் 24

பக்கங்கள்: 28

★

# உதயன்

சுடர் 27
கதிர் 86

வள்ளுவர் ஆண்டு 2043 மாசி 09 திங்கட்கிழமை (20/02/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# கொழும்பு இராஜதந்திரிகள் குழு டில்லியில் இரகசிய ஆலோசனை

## இந்திய ஆதரவைப்பெற அரசு பகீரதப் பிரயத்தனம்

கொழும்பு,பெப்.20

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 27ஆம்திகதி ஆரம்பமாகவுள்ளநிலையில், அந்த மாநாட்டில் இந்தியாவின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும்நோக்கில்இலங்கை அரசு இராஜதந்திர மட்டத்திலான காய் நகர்த்தல்களை என்றுமில்லாதவாறு முன்னெடுத்து வருகின்றது என நம்பகரமாகத் தெரிய வருகிறது.

ஜெனிவா மாநாட்டில் இலங்கை விவகாரம் குறித்து எவ்வாறான தொரு வகிபாகத்தை வகிப்பது தொடர்பில் இந்தியா ஆழமாகப் பரிசீலித்துவரும் தற்போதைய பரபரப்பான சூழ்நிலையில்,கொழும்பு அரசு தனது உயர்மட்ட இராஜதந்திரிகள் அடங்கியகுழுவொன்றைடில்லிக்கு அனுப்பி வைத்துள்ளது என்றும் அறிய முடிகின்றது.

டில்லியில் நிலைகொண்டுள்ளஇலங்கை இராஜதந்திரிகள் பட்டாளம் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சின் முக்கிய அதிகாரிகளைச்சந்தித்துஜெனிவா விவகாரம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளது எனஇராஜதந்திர மட்டத்திலான தகவல்கள்தெரி » 27

### மற்றொரு 'கொலைக்களம்' விரைவில் வரும்

கொழும்பு,பெப்.20

உலகையே பெரும் பரபரப்பு, திகிலில் ஆழ்த்திய இலங்கைப் போர்க் குற்றங்களை வெளிப்படுத்திய பிரிட்டன் சனல் 4 தொலைக்காட்சியின் மற்றொரு ஆவணப் படம் வெளிவரவிருக்கிறது.

இதில் மேலும் பல போர்க் குற்றங்கள் ஆதாரங்களுடன் வெளியாகவுள்ளன என்று அந்த ஆவணப் படத்தின் தயாரிப்பாளர் கூறியுள்ளார். (விரிவான செய்தி பக்கம் 17 இல்)

### 3 இந்திய மீனவர்கள் சிறை பிடிப்பு

தமிழகக் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை கஞ்சா கடத்தியதாக இலங்கை கடற்படை கைது செய்து சிறையிலடைத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. நாகபட்டினம், ஆறுக்காட்டுத்துறையைச் சேர்ந்த மனோகரன், செந்தில்குமார் மற்றும் சரவணன் ஆகிய மூவரும் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் அத்துமீறி வந்த இலங்கைக் கடற்படையினர் அவர்களைக் கைது செய்துள்ளனர். மீன்பிடித்துக் கொண்டிருந்த அவர்களுக்கு எதிராக கஞ்சா கடத்தியதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மூன்று தமிழக மீனவர்களும் தற்போது யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஏற்கெனவே 5 தமிழக மீனவர்கள் கஞ்சா கடத்தியதாகக் கூறி அங்கு சிறை வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்தச் செய்தி மேலும் கூறுகிறது.

### அரசின் தீர்மானத்தால் மக்கள் மீதே சுமை

எரிபொருள்களின் விலை உயர்வுக்கு அரசே பொறுப்பேற்கவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் பிழையான தீர்மானங்களின் விளைவாகவே இந்த நிலைமை தோன்றியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மாத்தளை மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் பொழுதே தயாசிறி ஜயசேகர இவ்வாறு தெரிவித்தார். எரிபொருள்களை இறக்குமதி செய்து கொள்வது தொடர்பில் அரசு ஈரானுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் காரணமாக தற்போது ஏனைய நாடுகளிடம் உதவியைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குற்றஞ்சுமத்தினார்.

### புனர்வாழ்வு பெறும் போராளிகள் 950 பேர்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த முன்னாள் போராளிகள் 950 பேர் வவுனியா, பூந்தோட்டம், வெலிகந்த, மருதமடு, சேனபுர ஆகிய புனர்வாழ்வு முகாம்களில் உள்ளனர் என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சந்தன ராஜகுரு தெரிவித்தார். நீதிமன்ற உத்தரவுக்கமையவே இவர்கள் புனர்வாழ்வு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டு இவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்படுகிறது. இவர்களில் 67 பெண்களும் அடங்குவதாக அவர் தெரிவித்துள்ளார்.

### கஞ்சா கடத்திய படை வீரர் கைது

அனுராதபுரம் விமானப்படை முகாமில் கடமையாற்றிய விமானப் படையைச் சேர்ந்த ஒருவர் கஞ்சா போதைப் பொருளை கடத்திய குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட விமானப் படையாளியிடம் இருந்து நான்கு கிலோ கிராம் எடையுடைய கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. சந்தேக நபர் வெல்லாவாய பிரதேசத்திலிருந்து கஞ்சா கடத்தியுள்ளதாக, வடமத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.


# தமிழர் பிரச்சினை பெரும் இக்கட்டில் சர்வதேசமே எமக்கு வேண்டும் தீர்வு

## கிளிநொச்சியில் சம்பந்தன் அறைகூவல்

கிளிநொச்சி, பெப். 20.

இலங்கை அரசுக்கு தற்போது பல்வேறு வழிகளிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஐ.நா. நிபுணர்குழு அறிக்கை, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகள்; இவற்றுக்கெல்லாம் பதிலளிக்க வேண்டிய நிர்ப்பந்தம். சர்வதேசத்தின் அழுத்தமும் வலுத்து வருகிறது.

இவ்வாறான நிலையில்



நாம் தமிழ் மக்கள் சார்பாக சர்வதேசத்திடம் கேட்பது, இந்த நாட்டில் நாம் வாழ்ந்துள்ளோம். மற்றவர்களைப்போல், அவர்களை விடவும் உரிமைகளைக் கேட்டதற்காக பெரும் அழிவு » 27

# லத்தீன் அமெரிக்கப் பயணங்கள் இலங்கைக்கு கிடைத்தது தோல்வி

கொழும்பு, பெப். 20

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தை முறியடிப்பதற்கு ஆதரவு கோரி லத்தீன் அமெரிக்க மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு அமைச்சர்கள் மட்டக்குழுக்களை இலங்கை அரசு அனுப்பியிருந்தது. எனினும், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தவிர, ஏனைய அமைச்சர்களால் இந்த முயற்சியில் அவ்வளவாக வெற்றி பெறமுடியவில்லை என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு அனுப்பப்பட்ட இலங்கையின் அமைச்சர்கள், அந்தநாடுகளின் பிரதி அமைச்சர் நிலைக்கு மேலுள்ள எவரையும் சந்திக்க முடியாமல் திரும்பி வந்துள்ளனர்.

அத்துடன், பொறுப்புக் » 27

# ஜெனிவாவில் இலங்கையைச் சிக்கவைக்க உள்நாட்டிலும் சூத்திரதாரிகள் சதி முயற்சி

## ஜனாதிபதி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.20

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு அசௌகரியமான நிலைமையை ஏற்படுத்தும் நோக்கிலேயே உள்நாட்டில் அசாதாரண நிலைமையைத் தோற்றுவிப்பதற்கு சூத்திரதாரிகளும், அரச சார்பற்ற அமைப்புகளும் முயற்சிக்கின்றன - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடவத்தையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உலக சந்தையின் நிலவரங்கள் தொடர்பில் மக்களிடம் சிலர் தவறான கருத்துகளைக் கொண்டுசெல்கின்றனர். எண்ணெய் விலை » 28

# அமெரிக்காவின் கோரிக்கையை இலங்கை தட்டிவிட முடியாது

## இராணுவ நீதிமன்றம் போலி நாடகம் என்கிறார் விக்கிரமபாகு

கொழும்பு, பெப்.20

சர்வதேசத்தின் பிடிக்குள் இருந்து தப்பிப்பிழைப்பதற்கே ஜெனிவாத் தொடர் நெருங்கும் நிலையில் இராணுவ நீதிமன்றம் என்ற போலி நாடகத்தை இலங்கை அரசு அவசர அவசரமாக அரங்கேற்றி வருகின்றது. மனித உரிமைகளை அப்பட்டமாக மீறி - தான்தோன்றித்தனமாக செயற்பட்ட ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான அரசு, போர்க்குற்ற விசாரணைக்கு ஒருபோதும் இணங்காது. சிலவேளை சரத் பொன்சேகாவும், அவருக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்களும் குற்றவாளிகளாக இனங்காணப்படலாம்.

- இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும், தெஹிவளை -கல்கிஸை மாநகரசபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

படுகொலை கலாசாரத்தை இலங்கைக்கு கற்பித்த அமெரிக்காவே படுகொலைகள் குறித்து விசாரணை நடத்துமாறு கோருவதை இலங்கை அரசு இலகுவில் தட்டிக்கழித்து விட முடியாது என்றும் அவர் கூறினார்.

சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் » 28

### ஜனாதிபதி சிவராத்திரி வாழ்த்துச் செய்தி

கொழும்பு, பெப்.20

சமூக வாழ்க்கையில் ஐக்கியத்தையும், சுபீட்சத்தையும் ஏற்படுத்துவதற்கான மனித முயற்சிகளை மகா சிவராத்திரி அடையாளப்படுத்தி நிற்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

மகா சிவராத்திரியை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் குறிப் » 28

# ஜெனிவாவில் மண்டியிடோம்: வெற்றிக்கான போராட்டம் தொடரும்

## இலங்கைக் கொடியுடன் கர்ச்சிக்கிறது இலங்கை அரசு

கொழும்பு, பெப்.20

"ஜெனிவா மாநாட்டில் தோல்வியைச் சந்திப்பதற்கு அமெரிக்கா விரும்பவில்லை. அதேபோன்றுதான் சிங்கக் கொடியைக் கையிலெடுத்த நாமும் மண்டியிடத்தயாரில்லை. வெற்றிக்கான எமது போராட்டம் தொடரும்" - என்று சூளுரைத்துள்ளார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா.

இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படும் சீனா, இந்தியா, ரஷ்யா, கியூபா, அல்ஜீரியா ஆகிய நாடுகளுக்கும் அமெரிக்கா தற்போது அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

உலகிற்கு கடன்பட்டே நாம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தோம். அந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்தவேண்டியுள்ளது. இந்நிலையில் மக்கள் நிவாரணம் கோருவது நல்லதல்ல என்றும் அவர் கூறினார்.

ஜெனிவா மாநாடு மற்றும் எரிபொருள்கள் விலையேற்றத்தால் ஏற்பட்ட பிரச்சினை உட்பட சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் அமைச்சர் சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ் » 28

### கிளிநொச்சி விபத்தில் 2 படையினர் படுகாயம்

கிளிநொச்சி, பெப். 20.

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இரண்டு இராணுவத்தினர் படுகாயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு 7.30 மணியளவில் கிளிநொச்சிப் பகுதியிலிருந்து பரந்தன் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இராணுவ வாகனம் எதிரில் வந்த டிப்பர் வாகனத்துக்கு » 27

# காலத்தின் கட்டாயத்தை உணர்ந்து ஒன்றுபடும் நேரம் வந்துவிட்டது

## நான் கட்டிய வீட்டுக்குள் வர வெட்கம் எதற்கு?
## வவுனியா கருத்தரங்கில் ஆனந்தசங்கரி

வவுனியா, பெப்.20

காலத்தின் கட்டாயத்தை உணர்ந்து நாம் அனைவரும் ஒன்று பட வேண்டிய நேரம் வந்துவிட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நான் கட்டிய வீடு. எனது வீட்டுக்குள் வர நான் வெட்கப்படவேண்டிய அவசியம் இல்லை. இவ்வாறு உரிமையுடன் கூறினார் தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் வி.ஆனந்தசங்கரி.

நேற்று முன்தினம் வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற சமகால அரசியல் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆனந்தசங்கரி இப்படிக் கூறினார்.

வன்னி மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தனின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய ஐந்து கட்சிகளும் ஒன்றாக கலந்து கொண்டன.

இந்த நிகழ்வில் மேற்படி கட்சிகளின் தலைவர்களான சம்பந்தன், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் மாவை சேனாதிராசா ஆகியோரும் உரையாற்றினர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சரவணபவன், சுமந்திரன் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றி ஆனந்தசங்கரி மேலும் கூறியதாவது:-

நாம் பிரிந்து நின்று எதனையும் சாதித்துவிடப் போவதில்லை. பட்டம்



பதவிகள் தேவையில்லை. நமது தேவை தமிழன் தமிழனாக தலை நிமிர்ந்து வாழ வேண்டும். நமது பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு வேண்டும். நமக்காக, நமது விடிவுக்காக சேவையாற்றி தலைவர்கள் உயிர் நீத்த தியாகிகள் ஆகியோரின் ஆத்மாக்கள் சாந்தியடைய வேண்டுமெனில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தினார் சங்கரி.

### சர்வதேசத்தின் கண்கள் திறந்து விட்டன - சித்தார்த்தன்

இதுவரை காலமும் பாராமுகமாக இருந்த சர்வதேச சமூகம் இப்பொழுது நம் பக்கம் பார்வை திருப்பியுள்ளது. இது நமது போராட்டங்களுக்கு கிடைத்த ஒரு வெற்றியாகவே அமைந்துள்ளது. ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை விவகாரம் ஒரு பிரேரணையாக முன்மொழியப்படவுள்ளது. இலங்கை அரசும் பதில் சொல்லியே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் நாம் விரோதங்களை மறந்து ஓர் அணியில் செயற்படவேண்டும் தமிழ் மக்களின் சக்தியை வெளிப்படுத்த இது ஒரு நல்ல தருணம் என்றார் சித்தார்த்தன். (ஒ-2)


# மு.கா. உறுப்பினர் தேசிய காங்கிரஸில் இணைவு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அக்கரைப்பற்று அமைப்பாளரும், அதி உயர்பீட உறுப்பினருமான யூ.எல். உவைஸ் தேசிய காங்கிரஸ் கட்சியில் இணையவுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயற்பாடுகளில் அதிருப்தியடைந்த நிலையில் அக்கட்சியிலிருந்து விலகி அமைச்சர் அதாஉல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் கட்சியில் உவைஸ் இணையவுள்ளார் என நம்பகரமாகத் தெரியவருகின்றது.

அமைச்சர் அதாஉல்லாவுக்கும், யூ.எல்.உவைஸுக்குமிடையில் நேற்றிரவு பேச்சு ஒன்று மிக இரகசியமாக இடம்பெற்றுள்ளது. இந்தப் பேச்சில் யூ.எல்.உவைஸ் முன்வைத்த கோரிக்கைகளை அமைச்சர் அதாஉல்லா ஏற்றுக் கொண்டுள்ளார் எனவும் உத்தியோகபூர்வ கட்சி மாற்றம் மார்ச் மாதம் அக்கரைப்பற்றில் நடைபெறவுள்ளது எனவும் அறியவருகின்றது.

இதேவேளை, தேசிய காங்கிரஸ் கட்சியில் இணையவுள்ள யூ.எல்.உவைஸிற்கு இணைப்பாளர் பதவி வழங்கப்படுவதோடு, எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கும் வாய்ப்பு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-சி)



எரிபொருள் விலையேற்றம் மற்றும் சிலாபத்தில் பொலிஸாரால் சுடப்பட்டு மீனவர் கொல்லப்பட்டமை ஆகியவற்றைக் கண்டித்து ஜே.வி.பியினர் நேற்று கொழும்பு கிரிபத்கொடையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# தலையில் வளர்ந்த 'கொம்பு' வீழ்ந்தது ஆயுள்வேத வைத்தியத்தின் மூலம்

## பல வருடங்களாக மறைந்து வாழ்ந்த ராகமவாசி மகிழ்ச்சி

கொழும்பு, பெப். 20.

இயற்கைக்கு மாறான விதத்தில் தலையின் வலப்புறத்தில் நான்கு அங்குல நீளம் கொண்ட 'கொம்பு' முளைத்ததன் காரணமாக 49 ஆண்டுகளாக சமூகத்தில் தலைகாட்ட இயலாது மறைந்து வாழ்ந்துள்ளார் ராகம வாசியான 89 வயதான இரு பிள்ளைகளின் தந்தை ஒருவர். நாவின்னையிலுள்ள பண்டாரநாயக்க ஆயுள்வேத ஆய்வு மையம் தனது புதிய தயாரிப்பான களிம்பு ஒன்றின் மூலம் அந்தக் 'கொம்பை' அகற்றி வெற்றி கண்டுள்ளது. இதனால் ஜூலியன் என்ற அந்த நபர் தற்போது மகிழ்ச்சியில் குதூகலிக்கிறார்.

அடிபட்ட வீக்கம் மற்றும் அதன் காரணமாக உருவாகும் கட்டிகளை நீக்குவதற்காக புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள களிம்பு மருந்தொன்றை அவருக்கு வழங்கியிருந்ததாகவும் இருவார காலத்தில் அந்தக் களிம்பின் மூலம் அவரது தலையில் வளர்ந்த 'கொம்பு' கழன்று வீழ்ந்ததாகவும் ஆயுள்வேத மருத்துவரான திருமதி ருவத்தி பிரீத்திகா மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

ராகம வாசியான டபிள்யூ.ஏ.ஜூலியன் என்பவர் தனியார் நிறுவனம் ஒன்றின் ஊழியர். அவரது 4ஆவது வயதில் தீராந்தி ஒன்று தலையில் மோதுண்டதால் தலையில் வீக்கம் ஏற்பட்டது. பின்னர் அது வளர ஆரம்பித்து சிறு





கட்டியொன்றின் உருவத்தைப் பெற்றது.

அந்தக் கட்டியைக் கட்டுப்படுத்தி குணமாக்க அவரது குடும்பத்தினர் வைத்தியர்கள் பலரை நாடி பல ஆண்டுகளாக முயன்றபோதிலும் அது குணமடைவதற்குப் பதிலாக மேலும் வளரவே செய்தது. அவரது 89 வயது வரையிலும் அதன் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவோ அதை அகற்றி விடுவதற்கோ எந்தவொரு மருத்துவராலும் இயலவில்லை. சத்திர சிகிச்சை மூலம் அகற்றும் அளவுக்கு அவரது வயதும் உடல் நிலையும் இடமளிக்கவில்லை.

இறுதியில் நாவின்னையிலுள்ள ஆயுள்வேத ஆராய்ச்சி மையத்துக்கு ஜூலியன் மிக இரகசியமாகச் சென்று தமது நிலையை விளக்கி, தம்மை இத்தொல்லையிலிருந்து நீக்கிக் குணப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

அவரது தலையில் சுமார் நான்கு அங்குலம் வரையில் மிருகமொன்றின் கொம்பைப் போன்று அது வளர்ந்திருந்தது. இதன் காரணமாக அவர் பெரிதும் உளத்தாக்கத்துக்கும் உள்ளாகியிருந்தார்.

ஆயுள்வேத வைத்தியரின் ஆலோசனைப்படி குடும்பத்தினரின் உதவியுடன் சுமார் இரண்டு வாரங்களாக அவர் ஒருவகைக் களிம்பை வளர்ந்திருந்த கொம்பின் அடிப்பாகம் முதல் நுனிப்பகுதி வரையில் பூசிவந்துள்ளார்.

திடீரென்று ஒரு நாள் தலையிலிருந்த கொம்பு கழன்று வீழ்ந்துள்ளது. இதனால் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போயுள்ளார் ஜூலியன்.

'கொம்பை' கையில் எடுத்துக்கொண்டு நாவின்ன ஆயுள்வேத ஆராய்ச்சி மையத்துக்குச் சென்ற அவரின் காயத்துக்கு வைத்தியர்கள் சிகிச்சையளித்து வருகின்றனர். (ஒ-22)

# பணத்தைச் சுருட்டி தமிழ் இளைஞர்களை டோஹோவில் அநாதரவாக்கியவர் கைது

## பொலிஸ் தீவிர விசாரணை; திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின

கொழும்பு, பெப்.20

இலங்கையிலிருந்து 269 பேரை கனடாவுக்கு அனுப்புவதாக ஆசைகாட்டி பலகோடி ரூபாவைச் சுருட்டிக்கொண்டு ஆபிரிக்க நாடுகளான டோஹோ மற்றும் மாலி முதலான நாடுகளுக்கு கூட்டிச்சென்று அநாதரவான நிலையில் அவர்களைக் கைவிட்ட பிரதான சந்தேக நபரான அருணகிரிநாதன் ஜெயரூபனைக் கைதுசெய்துள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் பலகோணங்களிலும் விசாரணைகளை முடுக்கிவருவதாகவும் கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஊடகவியலாளர்களுக்குத் தகவல்களை வெளியிடும்போதே குற்றப்புலனாய்வுத் திணைக்களப் பொறுப்பதிகாரி ஜனக சமிந்த மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கனடாவுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுத்தருவதாகக் கூறியே மேற்படி நபர் 269 பேரை ஆபிரிக்க நாடுகளான டோஹோவுக்கும், மாலிக்கும் அனுப்பியுள்ளார். குறித்த நபர் பற்றி கிடைத்த இரகசியத் தகவலொன்றின் மூலம் சந்தேக நபரைப் பின்தொடர்ந்த நாம் வெள்ளவத்தையிலுள்ள விடுதியொன்றில் வைத்துக் கைதுசெய்தோம்.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர் வடமராட்சி புலோலியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவரது மூத்த அண்ணனான அருணகிரிநாதன் ஜெயபரன் முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரபல உறுப்பினராக இருந்து யுத்தத்தின்போது இறந்துவிட்டார். இரண்டாவது அண்ணன் ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார். மூன்றாவது அண்ணனான ஜெயஸ்ரீதரன் பிரான்ஸ் நாட்டில் வசித்து வருகின்றார். நான்காவது அண்ணனான ஜெயபிரகாஷ் இத்தாலியில் வசித்துவருகின்றார்.

கைதுசெய்யப்பட்ட ஜெயரூபன் வவுனியா பிள்ளையார் கோயில் வீதியில் தங்கியிருந்து, யாழ்ப்பாணத்தில் அரச சார்பற்ற நிறுவனமொன்றில் கடமையாற்றிவந்துள்ளார்.

கனடாவுக்குச் செல்வதற்காக குறித்த நபரிடம் முஸ்லிம்கள் மூவரும், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 266 தமிழர்களும் தலா 5 லட்சம் ரூபா முதல் 25 லட்சம் ரூபா வரையில் கட்டணங்களாகக் கொடுத்துள்ளனர். இவர்கள் அனைவரையும் முன்னாள் விடுதலைப் புலிகள் எனக் கூறுமாறு தெரிவித்து ஆபிரிக்க நாடுகளுக்குக் கூட்டிச் சென்று தங்கவைத்துவிட்டு பின்னர் விசா காலாவதியானதும் அந்நாட்டுப் பொலிஸாரிடம் பிடிபடவைத்து, அவர்களை இலங்கைக்கு மீண்டும் நாடுகடத்த வைப்பதுடன், அவர்களிடமிருந்து பெற்ற பல கோடி ரூபா பணத்தைச் சுருட்டிக் கொண்டு வசதியான நாடொன்றுக்குச் சென்று வாழ்வதே இவரின் திட்டமாக இருந்தது.

பணத்தைக் கொடுத்தவர்கள் கனடாவுக்கு அனுப்பப்படாவிட்டால் அவர்களுக்கு மீண்டும் பணம் திருப்பி ஒப்படைக்கப்படுமென வெற்றுத்தாளில் முத்திரையை ஒட்டி கையெழுத்திட்டு பெற்றுக்கொண்டார். ஆனால், இதுவரை எவருக்கும் பணம் திருப்பி ஒப்படைக்கப்படவில்லை.

டோஹோவில் கைவிடப்பட்ட நிலையில் திறந்தவெளி தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 269 பேரில் 69 பேர் இதுவரை இலங்கைக்குத் தப்பிவந்துள்ளனர் எனவும், மிகுதிப்பேர் அந்நாட்டிலே தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் எனவும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளதாகப் பொறுப்பதிகாரி கூறினார். (ஒ-சி)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வன்னி மக்களின் ஜீவனோபாய அச்சாணியை உடைக்கலாமா?

வன்னிப் பெருநிலப் பரப்பில் இப்போது நெல் அறுவடைக்காலம். அதிக மழை வெள்ளம் காரணமாக நெல் உற்பத்தி பாதிக்கப்படலாம் என்று அச்சப்பட்டபோதிலும், விவசாயப் பெருங்குடி மக்களின் உழைப்பு வீண் போகாத அளவுக்குப் பல பிரதேசங்களில் விளைச்சல் சுமாராக இருந்ததாகக் கணிக்கப்படுகிறது. 2008ஆம் ஆண்டுக்குப் பிறகு தூர்ந்து போயிருந்த வன்னி விவசாயம், குறிப்பாக நெற்செய்கை, கடந்த பெரும்போகம் பரவாயில்லை என்று சொல்லுமளவுக்கு நிலைமை மாறியுள்ளது எனலாம்.

ஆனாலும், நெல் கொள்வனவில் மந்த நிலையும், விவசாயிகள் இட்ட முதலையேனும் பெறமுடியுமா என்ற சந்தேக நிலையும் தோன்றி உள்ளன. நெல் கொள்வனவில் அரச தரப்பு இன்னும் போதிய அக்கறை காட்டாததால், நெற்செய்கையில் ஈடுபட்டோர் "தலையில் கை வைக்கும்" சங்கடம் உருவாகியுள்ளது.

குறிப்பாக முல்லைத்தீவில், தனியார் வியாபாரிகளே பெரும் எண்ணிக்கையில் நெல் கொள்வனவில் ஈடுபட்டு வருகிறார்கள். எழுபது கிலோ கொண்ட ஒரு மூடை நெல்லை சாராசரி 1,300 ரூபாவுக்கே அவர்கள் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்கின்றனர்.

இத்தனைக்கும், ஒரு மூடை நெல்லை 1,960 ரூபா வீதம் கொள்வனவு செய்யவிருப்பதாக அரசின் அறிவித்தலோடு மட்டும், செயற்பாடு தரித்து நிற்கிறது. அதனை வாய்ப்பாக்கி, தனியார் வியாபாரிகள் முல்லை மாவட்டத்தில் கொடிகட்டிப் பறக்கிறார்கள்.

விளைந்த நெல்லை அறுவடை செய்வதற்குப் போதிய பணவசதி இல்லாததால் - கையில் பணம் இன்மையால் - தனியார் வியாபாரிகள் நிர்ணயித்த விலைக்கே விற்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் விவசாயிகள்.

அதனைச் சாதகமாக்கிக் கொண்டு, வயலில் வைத்தே தனியார் வர்த்தகர்கள் மேற்குறிப்பிட்ட விலைக்கும் மிகமிகக் குறைவான அடிமட்ட விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்து பெரும் இலாபம் ஈட்டுகிறார்கள். பாவம், விவசாயிகள், ஒரு ஏக்கர் நிலத்தில் நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு ஆகக்குறைந்தது சுமார் 43,000 ரூபா செலவிட நேரிட்டது. ஆனால் அரச தரப்பு - பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் - இன்னமும் நெல் கொள்வனவில் ஈடுபடவில்லை என்பது விவசாயிகளின் விசனம்.

கடந்த வருடப் பெரும்போகச் செய்கையின்போதும், முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பலவும், விவசாயிகள் எடுத்துச் சென்ற நெல் மூடைகளில் அதிக எண்ணிக்கையானவற்றைத் தரமற்றவை என்று தெரிவித்துக் கொள்வனவு செய்ய மறுத்தார்கள் என்பதால், மிகக் குறைந்த விலைக்குத் தனியார் வர்த்தகர்களுக்கு விற்றதாக மனம் வெதும்புகிறார்கள் முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள். எனினும், துணுக்காய்ப் பிரதேசத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே பெரும்பாலான விவசாயிகளின் நெல்லைக் கொள்வனவு செய்தன என்பது தகவல்.

கிளிநொச்சி மாவட்டத்திலும் தனியார் வியாபாரிகளே நெல் கொள்வனவில் கொடிகட்டிப் பறக்கிறார்கள். அங்கும் குறைந்த விலைக்கே தமது உற்பத்தியை வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. அறுவடைக்கான கூலி அதிகரித்திருப்பதுடன், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மிகப்பல நெற்செய்கைப் பிரதேசங்களில் இன்னமும் கொள்வனவை ஆரம்பிக்கவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார், வவுனியா மாவட்டங்களில் நெல் அறுவடை இன்னமும் பெரிய அளவில் தொடங்கவில்லை என்பதால், விற்பனையில் உள்ள தடங்கல்கள் குறித்த தகவல்கள் போதிய அளவில் வெளியாகவில்லை.

ஆனால், தென்னிலங்கை மாவட்டங்களில், நெற்கொள்வனவு சபையும், சில இடங்களில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் சீராக விவசாயிகளின் நெல்லைக் கொள்வனவு செய்து வருகின்றன. நெற்கொள்வனவு துரிதமாகவும் அமோகமாகவும் நடைபெற்று வருகிறது அதனால் மிகப் பல களஞ்சியங்களிலும் இப்போது நிறைந்துள்ள நெல்லைச் சந்தைக்கு விடுவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது. ஆகையால் தென்பகுதி விவசாயிகள் சிரமம் இன்றியும், அரசினால் நிர்ணயிக்கப்பட்ட நியாயமான விலையிலும், தமது உற்பத்தியை விற்பதற்கு வழியும் வசதியும் கிடைத்துள்ளன.

வடக்கு வாழ் விவசாயிகள், குறிப்பாகப் போரினாலும் இடப்பெயர்வினாலும், வாழ்க்கையின் எல்லைக்கே தள்ளப்பட்டவர்கள். அவர்களில் மிகப் பெரும்பாலானோர் ஏதிலிகள் என்ற வார்த்தைக்குள் இப்போதும் அடங்கக் கூடியவர்கள்.

கடந்த வருடத்திய பெரும்போகச் செய்கையின்போதும், பெருமழை மற்றும் கனதியான வெள்ளப் பெருக்கு என்பன காரணமாகவும் பெருநட்டம் அடைந்தவர்கள். அவர்களது முதன்மைத் தொழிலும் ஜீவனோபாயமும் விவசாயம் மட்டும் என்பதால், கடன்பட்டே, பெருத்த பொருளாதார கஷ்டங்களுடனேயே இம்முறை பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்டனர்.

ஆனால் சென்றவருடம் இயற்கை சோதித்ததை விட, இம்முறை அரசும் அதன் அங்கங்களும், அவற்றின் அதிகாரிகளும் வன்னி விவசாயிகளை வஞ்சித்துள்ளனர் என்பது தெள்ளத்தெளிவாகப் புலப்படுகிறது. அவர்கள் நெல்லைப் பயிர்களாக்கி, பசளையிட்டு, வெள்ளத்தை வடிந்தோடச் செய்து, கிருமிநாசனியைத் தெளித்துப் பிள்ளைகள் போன்று காத்து, நெல்மணிகளைக் கட்டிச் சுமந்து காத்திருக்கும்வேளையில், உரிய தரப்புகள் கொள்வனவு செய்வதில் காட்டிய அசமந்தத்தாலும், அசட்டைத்தனத்தாலும் அவர்கள் இப்போது கையறு நிலையில் தவிக்கிறார்கள். தனியார் வர்த்தகர்களுக்கு குறைந்த விலைகளில் விற்று நட்டம் அடைகிறார்கள்.

போரினால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கான பலவகைப்பட்ட உதவிகளையும் செய்து வருவதாகக் கூறும் அரசாங்கமும் அதன் பிரதானிகளும், ஆதரவாளர்களும், மக்களின் பிரதான ஜீவனோபாயமாக, அச்சாணியாக விளங்கும் விவசாயத்திற்கும் அதன் முதலாவது அலகான நெற்செய்கைக்கு - அதன் சந்தைப்படுத்தலுக்கு முன்னுரிமை கொடுக்கத் தவறியது ஏன்? இவர்கள் முன்னரும் வன்னியில் வாழ்ந்தவர்கள் என்பதால் வஞ்சிக்கப்பட வேண்டியவர்கள் என்ற உள்நோக்கத்துடனா?

ஒரே மக்கள், ஒரே நாடு என்ற மகுட வாசகத்தின் உண்மையான அர்த்தம், தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகளில் மட்டுமன்றி, அவர்தம் ஜீவனோபாயம் மற்றும் சராசரி மனித வாழ்க்கைக்கும் உரியதே என்ற சித்தாந்தத்துடனா?

இது, தமிழ் மக்கள் இதயங்களில் இருந்து எழும் தவிர்க்க முடியாத வினா என்பதனை அரசாங்கம் எப்போது உய்த்து, உணர்ந்து செயற்படப் போகிறது?

# யதார்த்தத்தை புரிந்துகொள்ளாத செயற்பாடுகள் தீர்வைத் தரமாட்டா

## முஸ்லிம் சிவில் சமூகம் அறிக்கை

> கடந்த காலங்களில் போரினா லும், இனக்கலவரங்களினாலும் பாதிக்கப்பட்ட, கொல்லப்பட்ட அங்கவீனமான மக்களின் அவலங் களை எமது அவலங்களாக உணர்வதற்கு அனைவரும் தவறிவிட் டோம். எனினும் தற்போது எம்மை நாமே சுயபரிசோதனை செய்து கொள்ளவேண்டியது காலத்தின் அவசியமாகும்.

யாழ்ப்பாணம், பெப்.20

யாதார்த்தை புரிந்துகொள்ளாது மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் இனரீதியான அரசியல் பாகுபாட்டுக்கும் சமூக நடைமுறை மோதலுக்கும் தீனிபோடுவதாக அமைந்துவிடும். இதனால் கடந்தகாலங்களில் நாம் தவறவிட்ட சந்தர்ப்பங்களை ஈடுசெய்ய பன்மைத்துவம், ஜனநாயகம், நீதி ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் புதிய இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டும்.-இவ்வாறு முஸ்லிம் சிவில் சமூகம் என்ற அமைப்பு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் சமூகத்தைச்சேர்ந்த 120 பேர் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

25வருடகால போர் முடிவுக்கு வந்தபின்னர் இயல்பு வாழ்வுக்குத் திரும்புதல், சமாதானம் ஏற்படுவதை உறுதிசெய்தல் என்பவறை நடைமுறைப்படுத்த இலங்கை பரந்தளவிலான சவாலை எதிர்கொண்டு வருகிறது. போரினால் பாதிக்கப்பட்டோருக்கு புனர்வாழ்வளித்தல், அத்தியாவசிய சேவைகளை தரமுயர்த்தல், தேர்தல்களை நடத்துதல், பெரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களை மேற் கொள்ளல் என்பவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் இலங்கைப் பிரச்சினைக்கு நீடித்த, அர்த்தபூர்வமான தீர்வொன்றைக் காண்பதற்குத் தடையாகவுள்ள பல பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை.

மீள் இணக்கத்துக்கான சவால் இன்னமும் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. தற்போது ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தை நாம் தவறவிடுவோமேயானால் ஒரு வரலாற்று வாய்ப்பினை இழந்துவிடுவோம்.

முஸ்லிம் அரசியல்வாதிகளும், சிவில் சமூக பிரதிநிதிகளும் சமாதானத்தைநோக்கி முன் செல்வதற்கான பொறுப்பினையும் வழிமுறைகளையும், செயல்முறைகளையும் ஏற்று வடிவமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றோம்.

கடந்த காலங்களில் போரினாலும், இனக்கலவரங்களினாலும் பாதிக்கப்பட்ட, கொல்லப்பட்ட அங்கவீனமான மக்களின் அவலங்களை எமது அவலங்களாக உணர்வதற்கு அனைவரும் தவறிவிட்டோம். எனினும் தற்போது எம்மை நாமே சுயபரிசோதனை செய்து கொள்ளவேண்டியது காலத்தின் அவசியமாகும். அதுவே மீள் இணக்கத்துக்கான வழிகளைத் திறக்கக் கூடியது.

தற்போது தமிழ்ச் சமூகத்திடமிருந்து வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள் முஸ்லிம் மக்கள் பட்ட துயர்களுக்கு பரிகாரம் செய்யும் வகையில் அமைந்துள்ளன. அத்தோடு, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் மீள் இணக்கத்துக்கான அம்சங்களைக் கொண்டிருக்கின்றன. இவற்றை அமுல்படுத்தக்கூடியதும், நாடாளுமன்றத்துக்குப் பதில் சொல்லக் கூடியதுமான பொறிமுறை ஒன்றை உருவாக்குவது அவசியம்- என்றுள்ளது.

(ங)

## தவறு அரசு மீதே

### பிரபா கணேசன் சாடல்

கொழும்பு,பெப்.20

எரிபொருள் விலையேற்றத்தினால் இன்று மக்கள் மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதை அரசு உணர்ந்து நிதானத்தை கடைப்பிடித்திருக்க வேண்டும் என்று கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில், இன்று 40 வீதம் விலையேற்றத்தை அதிகரித்த பின்னர் போக்குவரத்துக்கும், மீனவர்களுக்கும், முச்சக்கரவண்டி ஓட்டுநர்களுக்கும் மானியம் அளிப்பதன் மூலம் ஒரு போதும் அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றத்தை தடுக்க முடியாது. 23ஆம் திகதி அலரிமாளிகையில் நாடாளுமன்றத்தில் அரசாங்க தரப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் அவசரக் கூட்டத்துக்கு நானும் அழைக்கப்பட்டுள்ளேன்.

இந்தக் கூட்டத்தில் எரிபொருள் விலையேற்றத்தினால் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் அதிருப்தியை தெரிவிப்பேன்- என்றார்.

(ங)

## சட்டவிரோத சொத்து அபகரிப்பை தடுப்பதற்கு விசேட பிரிவு அமைப்பு

யாழ்ப்பாணம், பெப்.20

மக்களின் சட்ட ரீதியான சொத்துக்களை அபகரிக்க முனையும் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக குற்றப் புலனாய்வுப் பிரிவின் கீழ் விசேட விசாரணைப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாத காலத்துக்கு முன்னர் இந்தப் பிரிவு புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் இந்தப் பிரிவுக்கு பாதிக்கப்படுவோர் முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொதுமக்களின் ஏதேனும் ஒரு சொத்தை யாரேனும் ஒருவரோ அல்லது குழுவொன்றோ அபகரிக்க முனைந்தால்உடனடியாகஅது குறித்து விசாரணைப்பிரிவுக்கு பாதிக்கப்படுவோர் அறிவிக்க முடியும்.

மேலும் வீடு, வியாபாரநிலையம் மற்றும் தோட்டம்போன்ற இடங்களை அபகரிப்பதற்காக போலியாக ஆவணங்களைத் தயாரித்தல் அல்லது தயாரிக்க முனைதல் போன்ற செயற்பாடுகளில் யாரேனும் ஈடுபடுவதை அறிந்துகொண்ட பொதுமக்களும் அதுகுறித்த தகவலை தந்துதவலாம்.

பல்வேறுபட்ட வழிமுறைகள் மூலம் அச்சுறுத்தியோ அல்லது பலாத்காரமாகவோ மக்களின் சட்டபூர்வமான உரிமையுள்ள சொத்துக்களை கைவிட்டுச் செல்லுமாறு யாரேனும் வற்புறுத்தினாலும் பொதுமக்கள் அறிவிக்கலாம். மக்கள் எந்த மொழியிலும் முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.-என்றார்.

முறைப்பாடுகளைத் தெரிவிக்க வேண்டிய தொடர்பு இலக்கங்கள்-

குற்றப்புலனாய்வுத்துறைப் பிரதிப்பொலிஸ் மா அதிபர்- 011-2328138 (தொலைபேசி).

011-2326937 (தொலைநகல்)

குற்றப்புலனாய்வுத்துறை விசேட விசாரணைப் பிரிவு

011-2380380 (தொலைபேசி, தொலைநகல்). (ங-03)

## நிகழ்வுகள் இன்று

### நூல் வெளியீடு

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய ஆறுமுகநாவலர் என்ற சிறுவர்களுக்கான நூல் வெளியீட்டு விழா மாலை 4 மணிக்கு யாழ். இந்தக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள அன்பொளி கல்வி நிறுவனத்தின் ஆசிரியர் வே. அன்பழகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

(ம-13)

### பொதுக்கூட்டம்

தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரி சங்கத்தின் 21 ஆவது பெதுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி. ரம்சனா நவரத்தினம் கலந்துகொள்வார். (ம-9)

### சமயப் போட்டிகள்

மகாசிவராத்திரியை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும் சைவ சமயப் போட்டி நிகழ்வுகள் இன்று உரும்பிராய் கிழக்கு கண்ணகி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

## மின் பொறியியலாளர்களும் போராடப் போகிறார்கள்

கொழும்பு,பெப்.20

சம்பள உயர்வு வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கை மின்சாரசபை பொறியியலாளர் சங்க ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்க ஊடகப் பேச்சாளர் அஜித் விதானகே இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

சம்பள உயர்வு பற்றி பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய சாதகமான பதில் இதுவரை தமக்கு கிடைக்கப்பெறவில்லை எனவும், இதனாலேயே தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

# அபிவிருத்திப் பணிகள் வன்னியில் மந்தகதியில்

கிளிநொச்சி,பெப்.20

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வடக்கின் துரித மீட்சித்திட்டம், மீள் எழுச்சித் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் கடந்த ஆண்டில் 118 வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன் தெரிவித்தார்.

கடந்த 9 ஆம் திகதி கிளிநொச்சி அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற மேற்படி திட்டங்கள் தொடர்பான கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வடக்கின் துரித மீட்சித்திட்டம், மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் இதுவரை 188 வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இவற்றில் 118 வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.**

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் திட்டங்களின்கீழ் ஒப்பந்த வேலைகளை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரர்களும், அந்த வேலைகளை நடைமுறைப்படுத்தும் திணைக்களத் தலைவர்களும் கலந்து கொண்டனர். இதில் குறித்த திட்டங்களின் மேலதிக திட்டமிடல் பணிப்பாளர் பொறியியலாளர் ஏ.சி. வினோதராஜும் கலந்து கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய கிளிநொச்சி மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர், இந்தத் திட்டங்களின் கீழ் இதுவரை 188 வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இவற்றில் 118 வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன என்றார். பூர்த்தி செய்யப்படாத வேலைகளை வேகப்படுத்துவது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

மந்தகதியில் நடைபெற்று வரும் வேலைகளின் ஒப்பந்தக்காரர்களுக்கு இரு வாரங்களுக்கு நிபந்தனையுடனான நீடிப்பு வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்ட காலத்துக்குள் முன்னேற்றம் ஏற்படாத சந்தர்ப்பத்தில் அந்த வேலைகளை முடிவுறுத்தி, வேறு ஒப்பந்தக்காரருக்கு அந்த வேலைகளை வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (க-405)

## வீசுகின்றது துர்நாற்றம்

மன்னார், பெப்.20

மன்னார் மாவட்டச் செயலகம் சார்ந்த பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயலக வளாகத்தினுள் காணப்படுகின்ற மரங்களில் கூடு கட்டி வாழ்ந்து வரும் காகம், நீர்க்காகம், கொக்கு ஆகிய பறவைகள் வெளியேற்றுகின்ற எச்சங்கள் காரணமாகவே துர்நாற்றம் ஏற்படுகின்றது.

இதனால் அங்கு கடமையாற்றுகின்ற அலுவலர்களும், தேவைகளுக்கெனச் செல்லும் பொதுமக்களும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

மேலும் இங்கு உயிரிழக்கின்ற பறவைகளின் உடல்கள் மரங்களின் மேலும் கீழும் அகற்றப்படாமல் உள்ளதால் அவற்றிலிருந்தும் மோசமான துர்நாற்றம் வீசுகின்றது.

அத்துடன் இங்குள்ள மரங்களின் இலைகள் உட்பட்ட பகுதிகள் இந்தப் பறவைகளின் எச்சங்களினால் வெள்ளை நிறமாக மாறியுள்ளன.

மழைக் காலங்களின்போது இங்கு எழும் துர்நாற்றம் சகிக்க முடியாத அருவருப்பான சூழ்நிலையை ஏற்படுத்துகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் இது தொடர்பாகத் துரித நடவடிக்கை மேற்கொண்டு தமது அசௌகரியங்களைப் போக்குமாறு பொது மக்களும், செயலகப் பணியாளர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-12)

## காய விடுவதில் சிரமங்கள்

முல்லைத்தீவு,பெப்.20

படங்குகள் தட்டுப்பாடாக இருப்பதனால் நெல்லைக் காயவிடுவதில் விவசாயிகள் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் அறுவடை இடம்பெற்று வருகின்றது. இயந்திரத்தின் உதவியுடனேயே அறுவடை வேலைகள் இடம்பெறுகின்றன. ஆனால் அறுவடை செய்யப்பட்ட நெல்லைக் காயவிடுவதில் விவசாயிகள் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். படங்குகளின் தட்டுப்பாடு காரணமாகவே நெல்லைக் காய விடுவதில் விவசாயிகள் சிரமப்படுகின்றனர்.

மேலும் தற்போது இங்கு இடையிடையே மழைத் தூறல்களும் ஏற்படுவதால் விவசாயிகள் அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (க-500)

# வங்கிகளில் கடன் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்ளும் மக்கள்

கிளிநொச்சி,பெப்.20

போரால் அதிகம் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மக்கள் வங்கிகளில் கடனைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவர்கள் தமது வீட்டுக்குரிய ஆவணங்களை ஈடு வைத்து வங்கிகளில் பணம் பெறுவதற்கென விண்ணப்பிக்கின்ற போது, வங்கிகள் இவற்றை ஏற்றுக்கொள்ள மறுப்பதாகத் தெரியவருகின்றது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வங்கிகள் தமது கிளைகளைத் தற்போது புதிதாகத் திறப்பதில் நாட்டம் செலுத்தி வருகின்றன. இருப்பினும் அந்தப் பகுதி மக்களின் சேமிப்புக்களைப் பெறுவதில் குறியாக இருக்கும் வங்கிகள் அந்தப் பகுதி மக்களுக்குக் கடன் வழங்குவதில் இழுத்தடிப்புப் போக்கையே கடைப்பிடிக்கின்றன.

இரு மாவட்டங்களையும் சேர்ந்த மக்கள் தமது வீட்டுக்குரிய ஆவணங்களை வங்கிகளில் ஈடுவைத்துக் கடன் பெறச் செல்கின்ற போது வங்கிகள் வீட்டு ஆவணங்களை ஏற்க மறுக்கின்றன.

இதனால் மக்கள் புதிதாக வீடுகளை நிர்மாணிப்பதற்கோ அல்லது பழைய வீடுகளைத் திருத்தியமைப்பதற்கோ கடன்களைப் பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்தியக் கிளையிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது இவ்வாறான முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. இருப்பினும் எழுத்து மூலம் கிடைக்கப் பெறாததால் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதி மக்களது பெரும்பாலான காணிகளுக்கு அரசினால் அனுமதிப் பத்திரமே வழங்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு கடன் வழங்குவதில் சிக்கல் நிலைமைகள் இருக்கின்றன.

தற்போது அரச உத்தியோகத்தர்களும் இவ்வாறான சிக்கல்களால் கடன்களைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (க-5)

# மர நிழல்களின் கீழ் பாடசாலை வகுப்புக்கள்

அக்கராயன், பெப்.20

கட்டட வசதிகள் இல்லாததால் மர நிழல்களின் கீழும், தகரக் கொட்டகைகளின் கீழும் வகுப்புக்களை நடத்த வேண்டிய அவலநிலை கன்கராயன்குளம் மகா வித்தியாலயத்தில் காணப்படுகின்றது.

இங்கு சுமார் 560 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 31 ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பாடசாலை 1 ஏபி தரத்தைக் கொண்டது. தற்போது க.பொ.த. உயர்தரத்தில் கலை, வர்த்தகப் பிரிவுகள் உள்ளன. விஞ்ஞான, கணிதப் பிரிவுகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

21 வகுப்புக்களைக் கொண்ட இந்தப் பாடசாலையில் 12 வகுப்பறைகள் மட்டுமே உள்ளன. இதனால் ஏனைய வகுப்புக்கள் மர நிழல்களின் கீழும், தகரக் கொட்டகைகளின் கீழும் இடம்பெற்று வருகின்றன.

நடனம், நாடகமும் அரங்கியலும் ஆகிய வகுப்புக்களை நடத்தக் கூடிய வகுப்பறை வசதிகள் இங்கில்லை.

ஆசிரியர்கள் தங்குவதற்கான விடுதி வசதிகளும் இல்லை. 1000 பாடசாலைத் திட்டத்தின் கீழ் இந்தப் பாடசாலை உள்வாங்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் கட்டட வசதிகளைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. (க-18)

# அவல நிலையில் மாணவர்கள்

நெடுங்கேணி,பெப்.20

நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பாடங்கள் கற்பிக்கப்படாததால் இங்குள்ள மாணவர்கள் வேறு இடங்களை நாட வேண்டிய அவலநிலை காணப்படுகின்றது.

வவுனியா வடக்கிலுள்ள இந்தப் பாடசாலை 1ஏபி தரத்திலுள்ளது. இங்கு க.பொ.த. உயர்தரத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் அந்த முயற்சிகள் இன்னமும் கைகூடியதாகத் தெரியவில்லை. இதனால் இங்குள்ள மாணவர்கள் வவுனியா நகரத்தை நாட வேண்டிய அவல நிலையில் உள்ளனர். மேலும் நேர விரயத்தையும், பணச் செலவையும், போக்குவரத்துக் கஷ்டங்களையும் இந்த மாணவர்கள் எதிர்கொள்கின்றனர்.

எனவே இங்குள்ள மாணவர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு இந்தப் பாடசாலையில் க.பொ.த. உயர்தரத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-18)

# சிவராத்திரி மடம் மீண்டும் புதிய இடத்தில்



மன்னார், பெப்.20

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் அமைந்துள்ள சிவராத்திரி மடம் மீண்டும் புதிய இடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதன் திறப்பு விழாவில் மன்னார் மாவட்ட அரச அதிபர் சரத்ரவீந்திரா, இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கைலாசபிள்ளை ஆகியோர் கலந்து கொண்டதுடன் மடத்தையும் திறந்து வைத்தார்கள்.

இன்று சிவராத்திரியை முன்னிட்டு திருக்கேதீஸ்வரத்தில் அதிக எண்ணிக்கையான அடியவர்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவர்களை எதிர்பார்த்து ஆலய நிர்வாகத்தினர், தொண்டர்கள் ஆகியோருடன் மடங்களும் தயார் நிலையில் உள்ளன.

சிவராத்திரி மடத்தில் நேற்றைய தினம் ஆரம்பமான அன்னதான நிகழ்வு நாளைய தினம் செவ்வாய்க்கிழமை நண்பகல் வரை இடம் பெறுவதற்கான ஏற்பாடுகளை அன்னதான சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

இதற்கு இன மத பேதமின்றி அரச, அரச சார்பற்ற உத்தியோகத்தவர்கள் நிதி உதவிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (க-86)

# பாராட்டு விழா

அக்கராயன், பெப்.20

ஓய்வுபெற்ற முன்னாள் துணுக்காய் கல்விப் பணிப்பாளர் மேகநாதனுக்குச் சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் இடம்பெற்றுள்ளது.

துணுக்காய் வலயக் கல்விப் பணிமனையில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.ஜெயபாலன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பாராட்டுரைகளைத் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி லூட்ஸ் மாலினி வெனிற்றன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நிகழ்த்தினர்.

மக்கள் மீள்குடியமரத் தொடங்கிய போது எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் பாடசாலைகளை இயங்க வைப்பதில் முன்னாள் கல்விப் பணிப்பாளர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாகக் கல்விப் பணிப்பாளர் திருமதி லூட்ஸ் மாலினி வெனிற்றன் தெரிவித்தார்.

ஏற்புரையை ஓய்வுபெற்றுச் செல்லும் முன்னாள் கல்விப்பணிப்பாளர் த.மேகநாதன் ஆற்றினார். (க-410)

# விடாமுயற்சியால் வெற்றி கிடைக்கும்

## முல்லை. கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

வவுனியா.பெப்.20

மாணவர்கள் விடாமுயற்சியுடன் போட்டிகளில் ஈடுபட்டால் வெற்றி பெறுவது உறுதி.இவ்வாறு தெரிவித்தார் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.வரதராச மூர்த்தி

கதிர்காமர் நலன்புரிப் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவர் இதனைத் தெரிவித்தார்.

பலத்த சிரமத்தின் மத்தியிலும், எவ்வித வசதிகளும் அற்ற நிலையிலும் இன்று இப்போட்டியை நன்றாக நடத்தி முடித்துள்ளீர்கள்.

முல்லைத்தீவு வலயத்தில் தற்போது மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளுக்கு நிகராக இப்போட்டிகள் இடம்பெற்றமையை இட்டு நான் நிறைவடைகின்றேன்.


விளையாட்டானது ஒரு மாணவனை நற்பண்புள்ளவனாகவும், நற்பிரஜையாகவும் உருவாக்குகின்றது. அது மட்டுமல்ல வெற்றி தோல்விகளைச் சரிசமமாக மதிக்கக்கூடிய நிலையைத் தோற்றுவிக்கின்றது.

இன்று போட்டிகளில் பங்குபற்றித் திறமைகளை வெளிக்காட்டியது போல எதிர்காலங்களில் இடம் பெறவுள்ள கோட்ட, வலய மாவட்டப் போட்டிகளில் வெற்றி பெற்று அடுத்த கட்டப் போட்டிகளில் வெற்றி பெற முயற்சியும், பயிற்சியும்,மேற்கொள்ள வேண்டும்.

தொடர்ச்சியான பயிற்சிகளை மேற்கொண்டு போட்டிகளில் பங்குபற்றுவதன் மூலமே எந்தப் போட்டிகளிலும் வெற்றி பெற முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் கதிர்காமர் நலன்புரி நிலைய இராணுவ இணைப்பாளர் அபயக்கோன், முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் ஆகியோர் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களை வழங்கிக் கௌரவித்தனர்.

முல்லைத்தீவு வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மைக்கல் திலகராஜா, உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் டி.எம்.டிலான் ஆகியோரும் கலந்து கொண்டனர். (க-400)



வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் அண்மையில் மகாகும்பாபிசேகம் இடம்பெற்றது. இதில் கலந்துகொள்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வருகை தந்திருந்தார். இதன்போது இவ்வாலய பிரதம குருக்கள் ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் மற்றும் சிவாச்சாரியார்கள் அனைவரும் ஜனாதிபதிக்குத் தமது ஆசீர்வாதத்தை வழங்கினர். பிரதம குருக்கள் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து ஜனாதிபதியைக் கௌரவித்தார். இதில் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள சிவலிங்கப் பெருமானுக்கும் அம்மனுக்கும் கும்பாபிசேக வைபவத்தின்போது சாத்துவதற்குரிய ஆபரணங்களையும் பட்டு அங்கவஸ்திரங்களையும் ஜனாதிபதி பிரதம குருக்களிடம் வழங்கினார். மயூரபதி பத்திரகாளி அம்மன் தர்மகார்த்தா பி.சுந்தரலிங்கம், கதிர்காமயாத்திரிகர் தொண்டர் சபைத் தலைவர் எஸ்.ரி.எஸ்.அருளானந்தன் மற்றும் சிவஸ்ரீ ந.ரங்கநாதச் சிவாச்சாரியார், சிவஸ்ரீ கு.உமாசங்கர் சிவாச்சாரியார், சிவஸ்ரீ இ.நாகநாத சிவாச்சாரியார், சிவஸ்ரீ தி.கல்யாண சுந்தர சிவாச்சாரியார் ஆகியோர் ஜனாதிபதியுடன் உள்ளனர். (ம)

## 12 வருடங்களின் பின் விடுதலை

யாழ்ப்பாணம், பெப்.20

12 வருடங்களுக்கு முன்னர் வைத்தியசாலையின் பொருள்கள் சிலவற்றைத் திருடினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான குற்றம் நிரூபிக்க முடியாததனால் அவர் கடந்த வாரம் விடுதலை செய்யப்பட்டார்.

குருநகரைச் சேர்ந்த குடும்பஸ்தரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டார்.

குருநகர் சின்ன ஆஸ்பத்திரியில் 2000 ஆம் ஆண்டு ஊழியராக வேலை செய்த போதே இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

ரியூப் லைற் உட்பட சிறு பொருள்களைத் திருடினார் என்று சந்தேக நபர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

அதனை அடுத்து அவர் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தார்.

2011 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மீண்டும் சின்ன ஆஸ்பத் திரியில் வேலை செய்வதற்குச் சென்றார்.

அதன்போது அவர் மீதான குற்றச்சாட்டு சம்பந்தமாக நீதிமன்ற அறிக்கையை சமர்ப்பிக்கும் படி கேட்கப்பட்டது.

அதனால் அவர் அது பற்றி யாழ். பொலிஸில் விசாரித்த போது பொலிஸார் அவரைக் கைது செய்து மறுநாள் யாழ்.நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி ஜெர்னி மதுரநாயகம் ஆஜராகியிருந்தார். விசாரணையின் போது சந்தேக நபர் திருடியதற்கான எந்த ஆதாரமும் இருக்கவில்லை.

நீண்டகாலமாக இருந்த சாட்சியங்களும் முன்பின் முரணாக இருந்தன.

அதனால் சந்தேகநபர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால் அவர் குற்றமற்றவர் என இனங்கண்டு மன்று அவரை விடுதலை செய்தது. (ஒ-4)

## இளைஞர்கள் அடாவடி

யாழ்ப்பாணம், பெப்.20

யாழ். புனித ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாகவுள்ள கேணியின் கட்டுக்களில் தினமும் ஒன்று கூடும் இளைஞர் குழு வீதியில் செல்லும் இளம் பெண்களிடமும் பாடசாலை மாணவிகளுடனும் சேஷ்டைகளில் ஈடுபடுவதாகப் பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கும்பல் பிளாஸ்ரிக் பூக்கள் விற்பனை செய்வதுபோல் அங்கு நிற்பதாகவும் அந்தவீதியால் செல்வோரிடம் கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதாகவும் கூறப்படுகிறது.

இவ்விடயத்தில் உரியவர்கள் நடவடிக்கை எடுத்து இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வீதியால் செல்வோர் கேட்கின்றனர். (ம-288)

# பாதுகாப்பு நிலையத்தின் சேவை நேரத்தை நீடிக்குக

குருநகர், பெப்.20

யாழ். போதனா வைத்தியசாலையினுள் இயங்கி வரும் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தின் நேரத்தை நீடிக்குமாறு பயனாளிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்படுகிறது.

**தூர இடங்களுக்குச் செல்வோர் இங்கு சைக்கிள்களை விட்டுச் செல்வதால் பெரும் சிரமம் அடைகின்றனர்.**

யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்தின் அனுமதி பெற்று இயங்கி வரும் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பகுதியின் அருகில் இயங்கி வருகிறது.

இந்தப் பாதுகாப்பு நிலையம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை மட்டுமே திறந்திருக்கும் என அறிவித்தல் பலகையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் அரச ஊழியர்கள், தனியார் நிறுவனங்களில் சேவைபுரியும் ஊழியர்கள், வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுக்கு சிகிச்சை பெறவரும் நோயாளர்கள், யாழ். போதனா வைத்தியசாலை விடுதிகளில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களைப் பார்வையிட வரும் பொதுமக்கள் ஆகியோர் தமது சைக்கிள்களை பாதுகாப்பாக விட்டுச்செல்கிறார்கள்.

அரச ஊழியர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் கடமைபுரியும் ஊழியர்கள் பலர் யாழ்ப்பாணத்தின் தூர இடங்களில் சேவைபுரிபவர்களாகவும் உள்ளனர். இவர்களில் சிலர் தமது கடமையை முடித்து மாலை நேரங்களில் 6மணிக்குப் பின்னரே வருகைதந்து தமது சைக்கிள்களை எடுக்கச் செல்கின்றனர். இந்த நிலையில் குறித்த பாதுகாப்பு நிலையம் மூடப்பட்டு விடுவதால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு தற்போது காலை 6மணி தொடக்கம் இரவு 9மணிவரை இயங்குகிறது. எனவே இப்பாதுகாப்பு நிலையத்தின் சேவையையும் நீடித்து இப்பாதுகாப்பு நிலையத்தை திறந்து வைத்திருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-51)

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறப்பு



யாழ்ப்பாணம், பெப்.20

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைமை அலுவலகத் திறப்பு விழா நிகழ்வு யாழ்ப்பாணம் கண்டி வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

சங்கத் தலைவர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சிவலிங்கம் சத்தியசீலன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு தலைமை அலுவலகத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வட மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளின் அதிபர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள், யாழ். கல்வியியற் கல்லூரி பிரதி முதல்வர் மற்றும் சங்கத்தின் தாய்ச் சங்க சிரேஷ்ட உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**கடந்த காலத்தில் ஆசிரியர் நலனில் அக்கறை கொண்டு செயற்பட்டதைப் போன்று தொடர்ந்தும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது பணியை முன்னெடுக்க வேண்டும் என்று நேற்று இடம்பெற்ற திறப்பு விழா நிகழ்வில் விருந்தினர்களால் சுட்டிக் காட்டப்பட்டது.**

ஆசிரியர்களுக்கான விசேட நாள்காட்டியும் சங்கத்தால் இந்த நிகழ்வின் போது வெளியிட்டு வைக்கப்பட்டது.

சங்கத்தின் சிரேஷ்ட ஆலோசகர் த.மகாசிவம் விசேட நாள்காட்டியை வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனுக்கு வழங்கி வெளியிட்டு வைத்தார்.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய விருந்தினர்கள் கடந்த காலத்தில் ஆசிரியர் நலனில் அக்கறை கொண்டு செயற்பட்டதைப் போல தொடர்ந்தும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது பணியை முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். (ம-3)

## அன்பளிப்புப் பொருள்கள் பதிவு செய்யப்படவேண்டும்

யாழ்ப்பாணம், பெப்.20

வைத்தியசாலைகளுக்கு அன்பளிப்பாக கிடைக்கும் பொருள்கள் குறித்த விவரங்கள் அன்பளிப்புப் பதிவேட்டில் உடன் பதிவு செய்யப்படவேண்டும் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நடைபெற்ற மாதாந்தக் கலந்துரையாடலின் போது கூறினார்.

**தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் பாவனைக்கென தற்போதுள்ள அம்புலன்சுடன் மேலும் ஒரு அம்பு லன்ஸ் வாகனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுகிறது.**

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் பெப்ரவரி மாதத்துக்கான மாதாந்தக் கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது. இதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

எவரிடமிருந்தும் அன்பளிப்பாக கிடைக்கும் எந்தப் பொருளுக்கும் அன்பளிப்புப் பதிவேட்டில் உரியவரின் பெயர், அன்பளிப்பாக கிடைத்த பொருளின் பெயர், அதன் எண்ணிக்கை அந்தப் பொருள் கிடைத்த திகதி போன்ற விவரங்களுடன் பதியப்பட வேண்டும். அன்பளிப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்படுவதுடன் அப்பொருள் அதற்கென வைக்கப் பட்டுள்ள பதிவேட்டுப் புத்தகங்களிலும் பதிவு செய்யப் பட வேண்டும்.

இதேவேளை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் பாவனைக்கென தற்போதுள்ள அம்புலன்சுடன் மேலும் ஒரு அம்புலன்ஸ் வாகனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-300)

## ஒரு வழிப்பாதையை மீறினால் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ். நகரில் சில வீதிகள் ஒரு வழிப் பாதையாக அறிவிக்கப்பட்டும் அதனைச் மீறிச் செயற்பட்டு வருவோர் மீது பொலிஸார் கடும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மின்சார நிலைய வீதி கன்னாதிட்டி சந்தியில் இருந்து வண்ணை சிவன் ஆலயத்துக்கு செல்லும் வீதி என்பன ஒருவழிப் பாதையாக அறிவிக்கப்பட்டு அதற்கான ஒரு வழிப் பயணக் குறியீடுகளும் போடப்பட்டுள்ளன.

இந்த ஒரு வழிப் பாதையை மீறிப் பயணம் செய்வோர் மீது பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ம-17)

## கூட்டுறவாளரின் உருவப்படம் திரைநீக்கம்

யாழ். மாவட்டக் கூட்டுறவு சபையின் மூத்த கூட்டுறவாளர்கள் இருவரின் திருவுருவப் படங்கள் சபை மண்டபத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

சபையின் முதலாவது தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான காலம் சென்ற எம்.சிவமகாராஜா, சபையின் முன்னாள் செயலாளர் காலஞ்சென்ற எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோரின் திருவுருவப் படங்களே திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

சபையின் ஊழியர் நலன்புரி சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடல் கடந்த சனிக்கிழமை சங்கத் தலைவர் என்.ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சபையின் தலைவர் ஆர். ராஜாராம், சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தித் தலைவர் எஸ். இலகுநாதன் ஆகியோர் காலஞ்சென்ற கூட்டுறவாளர்களின் திருவுருவப் படங்களைத் திரைநீக்கம் செய்து வைத்தனர். (ம-17)

# குப்பைகளால் நிறைந்துள்ள கரைச்சி இந்து மயானம்

பண்டத்தரிப்பு,பெப். 20

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையினரால் பிரதேச குப்பைகள் கொட்டப்படுகின்ற கரைச்சி மயானம் குப்பைகளால் நிரம்பியதைத் தொடர்ந்து பிரதேச குப்பைகளைக் கொட்ட மாற்று இடம் இன்னமும் ஒழுங்கு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மயான அபிவிருத்திக் குழுவினரால் மயானத்தில் தொடர்ந்து குப்பைகளைக் கொட்ட வேண்டாம் எனப் பிரதேச சபைக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து பிரதேச சபையால் பிரதேச செயலகத்துக்குப் பொருத்தமான வேறு இடத்தை ஏற்பாடு செய்து தரும்படி கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

பிரதேச சபையின் கோரிக்கைக்கு அமைவாகப் பிரதேச செயலகத்தால் இரு இடங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

அராலி கடற்கரைப் பகுதியில் உள்ள இடம் அதிகாரிகளால் பார்வையிடப்பட்டு அவ்விடத்தை அளந்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில் பிரதேச சபை குப்பை கொட்டப் பொருத்தமான இடம் இல்லாததால் கழிவகற்றுவதில் சிரமங்களை எதிர்நோக்கி வந்ததாகப் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மக்களாலும், சுகாதாரப் பகுதியினராலும், வட்டுக்கோட்டைப் பொலிஸாராலும் குப்பைகளை அகற்றும்படியும் குப்பைகள் தேங்கி கிடப்பதாகவும் பிரதேசசபைக்கு பல முறைப்பாடுகள் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து பிரதேச சபைத் தலைவரால், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், பிரதேச செயலர் ஆகியோருக்கு விடயம் அறிவிக்கப்பட்டு குப்பை களைக் கொட்டத் தற்காலிக இடம் ஏற்பாடு செய்து தரும்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பொன்னாலை கடற்கரைப் பகுதியில் உள்ள ஒரு இடம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் மற்றும் அதிகாரிகளால் நேரில் சென்று பார்வையிடப்பட்டு அப் பகுதி சதுப்பு நிலம் என காரணம் காட்டப்பட்டு நிராகரிக்கப்பட்டுள்ளது.

குப்பை அகற்ற வழி இல்லாமல் இருந்த பிரதேச சபையால் ஏற்கனவே கிராம சேவையாளர் களால் குப்பை சேகரிப்புக் கென ஒதுக்கப்பட்ட தொல் புரம், பத்தானைக்கேணியடி என்ற இடத்தில் தற்காலிக ஏற்பாடாக குப்பைகளைக் கொட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் அப்பகுதி மக்கள் பிரதேசசபைத் தலைவருக்கு நேரில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து குறித்த இடத்துக்குச் சென்ற பிரதேச சபைத்தலைவர் உடனடியாக குப்பைகளை அவ்விடத்திலிருந்து அகற்ற உத்தரவிட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து இர வோடு இரவாக கிராம மக்களின் உதவியுடன் பிரதேச சபையால் குப்பைகள் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டன என்றும் கூறப்படுகிறது. (ம-130)

## வலி.மேற்கில் முறையான திண்மக் கழிவகற்றல்

யாழ்ப்பாணம், பெப்.20

முறையான திண்மக் கழிவு அகற்றல் உரிய திட்டத்தின் கீழ் வலி.மேற்கில் இடம்பெற்று வருகிறது.

இதற்காக கரைச்சி மயானப் பகுதி தெரிவு செய்யப்பட்டுத் திண்மக் கழிவுகள் அகற்றப்படுகின்றன.

சங்கானை மற்றும் சுழிபுரம் பிரதேச மக்களும் வர்த்தகர்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். குடாவில் டெங்கு அபாயம் தலை விரித்தாடுகிறது. அராலி- வட்டுக்கோட்டை வீதியில் பரவலாக திண்மக் கழிவுகள் வீதியோரம் கொட்டப்படுகின்றன.

இதனால் காக்கைதீவு கடல்ச் சூழல் மாசுபட்டுள்ளது. காக்கைதீவு, அராலி, நவாலி என்பனவும் திண்மக் கழிவுகளால் நிரம்பி வழிகிறது.

சங்கானையில் எமது சபையால் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளை பொருத்தமான தொழில்நுட்பத்தின் பிரகாரம் அகற்றி வருகிறோம்.

இதனால் எமது பிரதேசத்தில் டெங்கு அபாயம் குறைகிறது.

வலி.மேற்கு 25 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பரந்த பிரதேசம். மக்கள் சேதன திண்மக் கழிவுகளை வீட்டுக்குள் புதைத்து பசளையாக்கலாம்.

வடக்கில் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் இது வரை 5 திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. ஏனைய திட்டங்கள் இவ்வாண்டு இறுதியில் முடிவுறுத்தப்படும் என்று முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது என்றார். (ம)

## அறுவடையை எதிர்பார்த்து பாடசாலைப் போட்டிகள்

தென்மராட்சி, பெப் 20

யாழ். மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகள் விளையாட்டுப் போட்டிகள் நடத்த நெல் அறுவடையைப் பார்த்துக் காத்திருப்பதாக தெரியவருகிறது.

கல்வி அமைச்சின் சுற்று நிருபப் பிரகாரம் கல்வியாண்டின் முதல் தவணைக்குள் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி முடிக்கப்பட வேண்டும்.

மாவட்டத்தில் பல பாடசாலைகளுக்கு விளையாட்டு மைதானம் இல்லாததால் வயல்வெளிகளில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றன.

இந்த நிலையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்குரிய சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் போட்டிகளை நடத்துவதற்கு மைதானமாகப் பயன்படுத்தும் வயல்களில் இன்னமும் நெல் அறுவடை முடிவடையவில்லை. இதனால் போட்டிகள் நடத்த முடியாது உள்ளதாகவும் நெல் அறுவடை முடிவடைந்த பின்னர் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார் செய்ய வேண்டியுள்ளதாக அதிபர்கள் கூறுகின்றனர். (ம-9)

## பளையில் நவீன வசதி கொண்ட எரிபொருள் நிலையம் இல்லை

### வாகனச் சாரதிகள் சிரமத்தில்

தென்மராட்சி, பெப் 20

பளை நகர்ப் பகுதியில் வசதிகளுடன் கூடிய எரிபொருள் நிரப்பு நிலையம் இல்லாதது குறித்து வாகனச் சாரதிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் அங்கு எரிபொருள் நிரப்பு நிலையம் நடத்தப்படுகின்ற போதிலும் எரிபொருள்கள் அளவு கொள்கலன்கள் மூலம் வழங்கப்படுவதால் வாகனங்களுக்கு போதிய எரிபொருள் நிரப்புவதில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இது தொடர்பாகப் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.மார்கண்டுவிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது,

யுத்த வேளையில் பளை நகர்ப் பகுதியில் உள்ள சங்கத்தின் எரிபொருள் நிலையம் பலத்த சேதங்களுக்கு இலக்காகியது. இந்த நிலையில் மக்களுக்கு தற்காலிகமாக எரிபொருள் வழங்கும் சேவை நடத்தி வருகின்றோம்.

கடந்த வாரம் சங்கப் பிரதிநிதிகள் கொண்ட குழு எரிபொருள் அமைச்சரை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடியதையடுத்து 15 மில்லியன் ரூபா செலவில் பளை நகர்ப் பகுதியில் நவீனமுறையிலான எரிபொருள் நிலையம் ஒன்றை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்வதாகவும் இந்த நிதியில் முதற் கட்டமாக 7.5. மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள்ளதாகவும் மிகுதியைச் சங்கம் பொறுப்பேற்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

**அனுமதி கிடைத்ததும் நகர்ப் பகுதி யில் நவீன வசதிகளுடன் கூடிய எரிபொருள் நிலையம் இவ்வருட இறுதிக்குள் அமைக்கப்படும்.**

இதற்கான அனுமதி கிடைத்ததும் நகர்ப் பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய எரிபொருள் நிலையம் இவ்வருட இறுதிக்குள் அமைக்கப்படும். புதிய எரிபொருள் நிலையம் தற்போது எரிபொருள் நிலையம் அமைந்துள்ள பகுதியில் அமையவுள்ளது. அதுவரை தற்காலிகமாக தற்போது இயங்கும் எரிபொருள் நிலையம் தொடர்ந்து இயங்கும். - என்று தெரிவித்தார்.(ம-9)



பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையின் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை பேரவையின் மண்டபத்தில் இடம்பெற்றது. பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தலைவர் எவ்.டி அன்ரன் பயனாளி ஒருவருக்கு சைக்கிள் வழங்குகிறார். அங்கு இடம்பெற்ற அழகுக்கலைக் கண்காட்சியை விருந்தினர் பார்வையிடுகின்றனர். (ம-9)

## வடமராட்சி வலயத்தில் நான்கு ஆரம்பப் பிரிவுகள்

பருத்தித்துறை,பெப்.20

வடமராட்சி கல்வி வலயத்தில் 4 ஆரம்பப் பிரிவு வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆயிரம் பாடசாலை திட்டத்தின் கீழ் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுத்துறை மகா வித்தியாலயம், ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை ஆகியன உள்வாங்கப்படவுள்ளதையடுத்து பாடசாலைகளில் இயங்கிவரும் ஆரம்பப் பிரிவு வகுப்புக்களை தனிப் பாடசாலைகளாக இயங்க வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-190)

## பச்சிலைப்பள்ளி மக்களுக்கு உதவவுள்ள 'தென்னங்கீற்று'

தென்மராட்சி, பெப் 20

லண்டனில் உள்ள பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தினர் கடந்த காலங்களில் பல்வேறு பாதிப்புக்கு உள்ளாகிய பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 'தென்னங்கீற்று' என்னும் மாபெரும் கலை நிகழ்வை லண்டனில் உள்ள லான்பிராஸ் பாடசாலையில் நடத்தவுள்ளனர்.

இந்தக் கலை நிகழ்வு மூலம் கிடைக்கும் முழு நிதியையும் பச்சிலைப் பள்ளி அபிவிருத்திப் பேரவை ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவுள்ளதாக லண்டன் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் நிறுவுநர் புலோப்பளையூர் த.இரத்தினம் தெரிவித்துள்ளார்.

இந்தச் சங்கம் லண்டனில் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் ஜூன் மாதம் இரண்டு ஆண்டுகளைப் பூர்த்தி செய்கிறது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி வாழ் மக்களுக்காக நடத்தப்படும் கலை நிகழ்வுக்கு லண்டனில் உள்ள பச்சிலைப் பள்ளி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாகவும் கலை நிகழ்வில் கிடைக்கும் நிதி மூலம் மீளக் குடியமர்ந்துள்ள பல குடும்பங்களின் வாழ்வா தாரத் திட்டத்திற்கு பச்சிலைப் பள்ளி அபிவிருத்திப் பேரவை ஊடாக உதவிகள் வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## நுளம்பு ஒழிப்பில் முதலிடம்

தென்மராட்சி, பெப் 20

இலங்கை அரசால் கடந்த மாதம் நடத்தப்பட்ட தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தில் நுளம்பு ஒழிப்புத் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த ஜனவரி 16 தொடக்கம் 22 வரையான காலப் பகுதியில் இலங்கை முழுவதும் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் ஊடாக தேசிய நுளம்பு ஒழிப்பு வாரம் அனுஷ்டிக்கப்பட்டு மக்களுக்கு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த செயற்பாடுகளை மேற்கொண்டதில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 17 சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் 17 ஆயிரத்துக்கு அதிகமான வீடுகளுக்குச் சென்று விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

**யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரி சுகாதார வைத் திய அதிகாரி பிரிவினர் ஒரு வார காலத்தினுள் 8ஆயிரத்து 700 இற்கு மேற்பட்ட வீடுகளுக்குச் சென்று மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி யாழ். மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.**

இதில் யாழ். மாவட்டம் தேசிய அளவில் முதலிடத்தைப் பெற்றது.

யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் ஒரு வார காலத்தினுள் 8ஆயிரத்து 700 இற்கு மேற்பட்ட வீடுகளுக்குச் சென்று மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியமையால் யாழ். மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த சாவகச்சேரி பொலிஸார், சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள வணிகர் மன்றங்கள், கூட்டுறவு அமைப்புக்கள் போன்றோர் வழங்கிய ஒத்துழைப்பால் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு முதலிடத்தைப் பெற முடிந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# ஆக்கிரமிப்புக்களை தடுக்க அனைவரும் இணைவோம்

## அரியநேத்திரன் எம்.பி. கூறுகிறார்

> நாங்கள் அபிவிருத்திக்காக நாடாளுமன்றம் செல்லவில்லை. வடக்கு, கிழக்கு இணைந்த மக்கள்– தமிழன் தமிழனாக வாழ வேண்டும் என்பதற்காகவே இன்று நாங்கள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றோம்.

எருவில்,பெப்.20

தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் ஒருபக்கம் பேசிக்கொண்டு வடக்கு, கிழக்கில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. இவ்வாறான ஆக்கிரமிப்புகளை வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் கட்சி வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு செயற்படுவதன்மூலமே தடுத்து நிறுத்தமுடியும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மண்முனைப் பற்று கல்விக் கோட்டத்துக்குட்பட்ட கிராண்குளம் சரஸ்வதி வித்தியாலத்தில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தமட்டில் நாங்கள் அபிவிருத்திக்காக நாடாளுமன்றம் செல்லவில்லை. வடக்கு, கிழக்கு இணைந்த மக்கள் தமிழன் தமிழனாக வாழ வேண்டும் என்பதற்காகவே இன்று நாங்கள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்துக்கொண்டிருக்கின்றோம்.

இன்று ஒரு பக்கம் பேச்சு நடந்துகொண்டிருக்கின்றது. மறுபக்கம் வடக்கு, கிழக்கிலே ஆக்கிரமிப்பு நடந்துகொண்டிருக்கின்றது. இந்தத் தடைகளை தாண்டவேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றோம். 62 வருடங்களாக தமிழ் மக்களுக்கான உரிமை கிடைக்கவில்லை. ஆனால் சர்வதேசத்தின் மூலம் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வு வேண்டும் என்பதை இன்று சர்வதேசம் ஏற்றுக்கொண்டிருக்கின்றது. அதன் காரணமாகத்தான் இலங்கை அரசுடன் நாங் கள் பேசிக்கொண்டிருக்கின்றோம்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பெயரைக் கெடுக்கவேண்டுமென்று அரசில் இருக்கின்றவர்கள் அழுத்தம் கொடுக்கின்றார்கள். அவர்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சிலிருந்து நீக்கிவிட்டு தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கொடுக்க முடியாது. அவ்வாறு கொடுக்கின்ற தீர்வை வடக்கு, கிழக்கு மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். எப்படியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அந்தக் குழியில் இழுக்கவேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கின்றார்கள். நாங்களும் எமது முடிவில் உறுதியாக இருக்கின்றோம்.

எங்களை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலே இழுப்பதற்காக சர்வதேச ரீதியாக அரசு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. எமது விடுதலைப் போராட்டம் சர்வதேசத்துக்குச் சென்றிருக்கின்றது. சர்வதேசத்தின் மத்தியஸ்தத்தின் மூலம் எங்களுக்கு ஒரு தீர்வு வரவேண்டும் என்பது தான் எங்கள் எதிர்பார்ப்பாகும். அதற்காக நாங்கள் தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் உழைப்போம். அதற்காக தமிழ் மக்கள் அரசியல் கட்சி பேதமற்று அனைவரும் ஒன்றுபட வேண்டும் - என்றார். (ச-31)

# தமிழ்மொழி மீது ஏன் கொலைவெறி?

எருவில்,பெப்.20




அண்மையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த சர்வமதப் பேரவை அங்கத்தவர்கள், தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் தெற்கிலுள்ள சர்வமத பேரவை அங்கத்தவர்களையும் பிரதேச மக்களையும் சந்திக்கச் சென்றனர். மாத்தறை பொது வைத்தியசாலை, ஹிக்கடுவை தேசிய பூங்கா ஆகியவற்றுக்கு இவர்கள் சென்றபோது கண்ணுற்ற அறிவிப்பு பலகையே மேலுள்ளது.

'மாத்தறை பொது- வைத்தியசாலை' என்பதற்குப் பதிலாக 'மாததற போது வைத்தியசாலை' என்றும், 'ஹிக்கடுவை தேசிய பூங்கா' என்பதற்குப் பதிலாக 'ஹிக்கடுவை தேசிய முங்கா' என்றும் அதில் எழுதப்பட்டிருந்தமையைக் கண்டு அரச கரும மொழிகளுக்கான அமைச்சு ஒன்று இருந்தும் இவ்வாறான வெளிப்படையான தவறுகளைத் திருத்தாமல் இருப்பது கவலைக்குரியதே என்று அவர்கள் விசனம் தெரிவித்தனர். (ச-31)

# அறுவடை செய்யப்பட்ட நெல்லை கொள்வனவு செய்யத் தயக்கம்

## அரச அதிபர் கவலை

அக்கரைப்பற்று, பெப்.20

அம்பாறை மாவட்டத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லைக் கொள்வனவு செய்வதில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், நெல் சந்தைப்படுத்தும் சபையும் உற்சாகமின்றிக் காணப்படுகின்றன என்று மாவட்ட அரச அதிபர் நீல் டீ. அல்விஸ் கவலை தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்காகப் போதியளவு நிதி கிடைத்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, நிதியமைச்சின் செயலாளர் ஆகியோர் உடனடியாக நெல்லைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தன்னைப் பணித்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

எனவே, இதற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் நெல் சந்தைப்படுத்தும் சபையும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தம்புள்ளவில் சடலங்கள் மீட்பு

தம்புள்ளை,பெப்.20

தம்புள்ள பிரதான விளையாட்டு மைதானத்துக்கு அண்மையில் இரண்டு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கண்டெடுக்கப்பட்டுள்ள இந்தச் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புள்ளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இருளில் மூழ்கும் கல்முனை நகரம்

கல்முனை நகரில் வீதியோர மின் விளக்குகள் இல்லாமையால் பல தமிழ்ப் பிரதேசங்கள் இருளில் மூழ்கியுள்ளன என்று அப்பிரதேச கல்விமான்களும், புத்திஜீவிகளும் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த மாநகரசபைத் தேர்தலின்போது கல்முனைப் பிரதேசத்தில் ஒரு உறுப்பினர் கூட மாநகரசபைக்குத் தெரிவு செய்யப்படாமையால் எந்த அபிவிருத்தி வேலைகளும் செய்யப்படாமல் இருப்பதைக் காணமுடிகின்றது. எனவே, இது தொடர்பாக உரியவர்கள் கவனத்தில் எடுத்து கல்முனை தமிழ்ப் பிரதேசங்களையும் இரவில் ஒளியுள்ள பிரதேசமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.- (ச)



காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பயனாளிகளுக்கு மண்ணெண்ணெய் நிவாரண முத்திரை நேற்று ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா கலந்து கொண்டு பயனாளி ஒருவருக்கு முத்திரை வழங்குகின்றார்.

# தோட்டத் தொழிலாளருக்கு இருபது நாள்கள் வேலை

ராகலை,பெப்.20

ராகலை 'புறூக்சைட்' தோட்டத் தொழிலாளர்களுக்கு அடுத்த மூன்று மாதங்களுக்குள் 20 நாள்கள் வேலை வழங்க வேண்டும். நுவரெலியா உதவித் தொழில் ஆணையாளர் முன்னிலையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தோட்ட நிர்வாகம் தொழிலாளிகளுக்கு 15 நாள் வேலை வழங்கத் தீர்மானித்ததை எதிர்த்து 700 தொழிலாளர்கள் கடந்த திங்கட்கிழமை வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

இதையடுத்து நிர்வாகத்துக்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது 20 நாள்கள் வேலை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் கூறுகையில்;

தொழிலாளிகளின் உரிமைப் போராட்டங்களுக்கு இணைந்து குரல் கொடுத்து போராடுவதை ஐக்கிய தேசியக் கட்சியும், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் நட்புறவோடும் சகல தொழிற்சங்கங்களையும் அரவணைத்து செல்வதை எவராலும் தடுக்க முடியாது. யார் பகிஷ்கரித்தாலும் தொழிலாளர்களின் உரிமைகளை விட்டுக் கொடுப்பதற்கு நாம் தயாரில்லை.

தொழிலாளர்களுக்கு சாதகமாக செயல்படுவதாலேயே சில சந்தர்ப்பவாத சுயநலவாதிகளுக்கு காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கு எதிரான அநீதியை தட்டிக் கேட்பதற்கு சகல தொழிற்சங்கங்களுக்கும் உரிமையுள்ளது. புறூக்சைட் தோட்ட தொழிலாளர்கள் எந்த சங்கத்துக்கும் அடிமை சாசனம் எழுதிக் கொடுக்கவில்லை. அவர்களை எவராவது அடிமைகளைப் போல நடத்த முற்பட்டால் அதற்கு இடமளிக்க மாட்டோம். -என்றார். (ச)

# எரிபொருள் விலை உயர்வு; வேலை நிறுத்தமும் வெற்றி

## ஊவா மாகாணசபை உறுப்பினர் அறிக்கை

எரிபொருள் விலை ஏற்றத்தை ஆட்சேபித்து பெருந்தோட்டத்துறையினர் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டம் வெற்றியை அளித்துள்ளது என்று ஊவா மாகாண சபை உறுப்பினர் கே.வேலாயுதம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்துடன் இணைந்து பல தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 70 சதவீதத்துக்கு அதிகமான தொழிலாளர்கள் போராட்டத்தில் இணைந்து கொண்டனர்.

அரசு சார்பான தொழிற்சங்கங்களைச் சேர்ந்த சிறு குழுவினரே வேலையில் ஈடுபட்டிருந்தபோதும் அதிகமான அரச சார்பான தொழிற்சங்கங்களும் வேலைநிறுத்தத்தில் பங்கேற்றுக் கொண்டமை பாராட்டுதலுக்குரியதாகும். பெருந்தோட்டத் துறையில் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டம் அரசுக்கு எமது துயரத்தை வெளிப்படுத்தும் எதிர்ப்பு நடவடிக்கையாகும். எதிர்ப்பால் எரிபொருள் விலையைக் குறைக்க முடியாது என்று அரசு 5 லட்சம் தொழிலாளர்களுக்கு எரிபொருள் மானியம்வழங்கப் போவதாகவும் சில தொழிற்சங்கங்கள் பிரசாரத்தை மேற்கொண்டுள்ளது.தொழிலாளர்கள் அதை ஒரு பொருட்டாக கருதாமலேயே பொது அடிப்படையில் அணி திரண்டு போராட்டத்தில் கலந்து கொண்டமை தொழிலாளிகளின் ஜனநாயக போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாகும்.

ஏற்கனவே கோதுமை மாவையும், அரிசியையும் மானிய அடிப்படையில் தொழிலாளிகளுக்கு வழங்கப்போவதாக கூறி ஏமாற்றியவர்கள் தற்போது 5 லட்சம் தொழிலாளர்களுக்கு எரிபொருள் வழங்கப் போவதாக தெரிவித்திருப்பது அப்பட்டமான பொய்யாகும்.-என்றுள்ளது.

# மரண அறிவித்தல்



## திருமதி சுப்பிரமணியம் யோகம்

வட்டுக்கோட்டை, அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் யோகம் நேற்றுமுன் தினம்(18.02.2012) சனிக்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (புறாக்கூட்டு மணியம்)- பொற்கொடி தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்ற வர்களான கிருஷ்ணபிள்ளை- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சுப்பிரமணியத்தின் (ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார், முதலியார்கமம், மாங்குளம்) அன்பு மனைவியும், பத்மாவதி, காலஞ்சென்றவர்களான எதிர்வீரசிங்கம், லட்சுமி, சுருதி, கேசரி, ஜெயம், பசுபதிநாயகி, முருகையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகராணி, லில்லிராணி, கிமாலராணி, நேசராஜன் (நேயன் பல்பொருள் வாணிபம், சித்தன்கேணி), பிரேமராணி, மகாராஜன், சண்முகராஜன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயும், விசாகப் பெருமாள், ஜெயரட்ணம், விமலநாதன், மனோராணி, பரமலிங்கம், கலாவதி, உமையாள் ஆகியோரின் அன்பு மாமியும், கிருஷ்ணகுமாரன் (தாதிய உத்தியோகஸ்தர், யாழ். போதனா வைத்தியசாலை), ஜெயகௌரி (ஆஸ்திரேலியா), ராகுலன் (ஓமான்), ஜெயலக்சுமி, ஜெயறஞ்சினி, கோகுலன், கௌசல்யா (முகாமைத்துவ உதவியாளர், வலி.மேற்குப் பிரதேசசபை), பார்த்தீபன் (லண்டன்), மேனன்(ஓமான்), மிதிலா (வவுனியா, தேசியக் கல்வியற்கல்லூரி), சிவானுயா (முகாமைத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்), தனுசியா, நிவேதா, உமா (பிரான்பற்று பிரதேச குடும்பநல உத்தியோகஸ்தர்), ரதி, சிவகாமி, மயூரா, சங்கவி, சுகாசினி, தாரகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி.சுப்பிரமணியம்
(கணவர்).

பொன்னகம்,
சித்தன்கேணி.

## காய்ச்சலுக்கு சிகிச்சை ஆசிரியர் சாவு

யாழ்ப்பாணம், பெப்.20

ஆசிரியரான இளம் குடும்பஸ்தர் ஒருவர் காய்ச்சலில் பாதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்றைய தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

நாவாந்துறை வடக்கைச் சேர்ந்த யோன் கிலெமன்ரைன் (வயது-31) என்ற ஒரு குழந்தையின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 10 நாள்கள் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். எனினும் நோய் தொடர்பில் மேலதிக பரிசோதனைக்காக மற்றும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இந்த மரணம் நிகழ்ந்துள்ளது.

மரணமான யோன் கிலெமன்ரைன் மன்னார் புனித சவேரியார் கல்லூரி ஆசிரியர் ஆவார். (ஒ-323)

## யாழ். நகரில் கண்டபடி வாகனங்களை நிறுத்தாதீர்!

யாழ்ப்பாணம், பெப்.20

யாழ். நகரில் பொது இடங்களில் வாகனங்களை நிறுத்த வேண்டாம் என யாழ். பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொறுப்பதிகாரி அறிவுறுத்தி வருகின்றார்.

குறிப்பாக ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, கே.கே.எஸ் வீதி, மின்சார நிலைய வீதி போன்ற முக்கிய வீதிகளில் வாகனங்கள் தரிப்பிடத்தைத் தவிர்த்து ஒதுக்கப்பட்ட இடங்களிலேயே வாகனங்கள் நிறுத்த வேண்டும் என்றும்-

இதனை மீறி வாகனங்களை வீதியோரத்தில் நிறுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-17)

## முதலாம் வருட நினைவஞ்சலி



மண்ணில் 02★10★1945
விண்ணில் 20★02★2011

அமரர்
தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்

*நீங்கள் எம்மை விட்டுப் பிரியவில்லை*
*கண்ணின் மணியாய் எம்முடனுள்ளீர்கள்*
*பார்த்துப் பார்த்து எம் அறுவரைப் பக்குவமாய்*
*நீங்கள் வளர்த்த பாசமுண்டு*
*நித்தம் நித்தம் எம் நெஞ்சில் நீங்கள் தந்த நேர்மையுண்டு*
*அகிலத்தில் நாம் வாழ நீங்கள் கூறிய நல்லறிவுரைகளுண்டு*
*உள்ளத்தில் நிறைந்தவரே உதிரத்தில் கலந்தவரே*
*விதி வரைந்த பாதையிலே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்*
*மூச்சோடு கலந்த உங்கள் நினைவு*
*எங்கள் மூச்சு உள்ளவரை நிலைக்கும்*

த.மு: இராஜவீதி, அச்சுவேலி.
நி.மு: பலாலி கிழக்கு, பலாலி.
தொ.பே: 0779012385

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## தம்பு குமாரவேல்



(ஓய்வுபெற்ற விவசாயப் பணிப்பாளர், விவசாயத் திணைக்களம், ஓய்வு பெற்ற விவசாய உத்தியோகத்தர் CARE International)

அராலி மேற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கல்லூரி வீதி வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட தம்பு குமாரவேல் நேற்றுமுன்தினம் (18.02.2012) சனிக்கிழமை முருகனடி சேர்ந்தார்.

அன்னார் அராலி மேற்கு காலஞ்சென்றவர்களான தம்பு - மாணிக்கவள்ளி தம்பதியரின் மூத்த மகனும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சபாநாயகம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கனகலட்சுமியின் அன்புக் கணவரும் Dr. பராசக்தி (USA), சிறிஸ்கந்தா (மின்சாரசபை, திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஈஸ்வரக்குமார் (USA), பிறேமதா (ஆசிரியை, திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான வள்ளிநாயகி, குழந்தைவேல் மற்றும் ஆறுமுகம் (இளைப்பாறிய பொறியியலாளர், zambia) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் (Postal Department), திருச்சிற்றம்பலம் மற்றும் சிதம்பரப்பிள்ளை (இளைப்பாறிய உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி), சுகிர்தலட்சுமி (இளைப்பாறிய ஆசிரியை), பரிமளாதேவி, காலஞ்சென்ற தில்லைநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் Dr. சிவகாமி- Bhat, பாலசுப்பிரமணியம், தங்கா - பாஸ்கரன், உமையாள் (கல்வித் திணைக்களம்), நகுலேஸ்வரன், ஆனந்தி - ஜெகதீஸ்வரன் (ரகு) ஆகியோரின் அன்புப் பெரியமாமாவும் சுதா- சிவபாலன், சுபேந்திரன் - Dr. காயத்ரி, Dr. விஜயலட்சுமி - அன்றூ Buritt, ஜெயந்திரன் (தினக்குரல்)- வனஜா, ஞானலட்சுமி - Dr. லோகநாதன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் தினேஷ், பிரவீணா, சேயோன், ஜெயகாந்தன், சங்கவி, ஜெயப்பிரியா, விசாகன், ஜெயதீபா, ஹரிசியாம், நதீஸன், அஸ்வின், ஜெயபிரகாஷ், ஆறுஜன், ஜனகஜன், பிரவின், அபிசனா ஆகியோரின் அன்பு பெரிய தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2012) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கொத்துத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்லூரி வீதி, வட்டுக்கோட்டை.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## வீடு விற்பனைக்கு

யாழ். நகர் கொட்டடியில் சுமார் 3 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு- 0772279219

## வான் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 56- XXXX தொடரிலக்கமுடைய டொல்பின் வான் (சகல வசதிகளும் உண்டு) விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0770201529

# மரண அறிவித்தல்

## மரியான் சொலமன் அல்பேட் *(எட்வேட்)*



குருநகரைப் பிறப்பிடமாகவும், 82, மவுண்ட் கார்மேல் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மரியான் சொலமன் அல்பேட் (எட்வேட்) (15.02.2012) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி சீதா சிற்றின் (ராசாத்தியம்மாவின்) அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான மரியான் சொலமன் - எலிசபேத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர் களான அண்ணாவியார் பபிலோன் செபமாலை சின்னத்துரை - றெஜினா அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான M.S. பிரான்சிஸ் சேவியர், M.S. ஜேசுநாயகம், M.S.பேரின்பநாயகம் (முன்னாள் உதவி மேயர், யாழ். மாநகர சபை, முன்னாள் மாநரகசபை உறுப்பினர்), M.S.சிலுவைதாசன் மற்றும் M.S.ஜேம்ஸ், M.S.மரியதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செறிங்ரன் (நோர்வே), மார்ஷல் (நோர்வே), சுமித்திரா (பிரான்ஸ்), காந்திமதி(நோர்வே), விஷாந்தினி (ஆசிரியர், யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரி), கௌசலா (ஆசிரியர், யாழ். அச்சுவேலி மகளிர் கல்லூரி), ஜீவலக்ஷினி(கல்விசார் தாபனக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், டிலிஷியா, அன்பரசி, கிறிஸ்ரியன் கிளெனி, சுரேஸ், சுதாகர் ஆகியோரின் அன்பு மாமனும், கெவின், வனசா, மார்க்கூஸ், பெனி, விக்ரோறியா, ஜொகன்னா, மத்தியூ, யுவக்கீம் எவோஞ்சலி, மத்தியாஸ், பென்ஞமின், கபிரியேல் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (20.02.2012) பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 3.00 மணிக்கு நல்லடக்கத்துக்காக கானான் சேமக்காலை, இராசவீதி, கோப்பாய்க்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

82. மவுண்ட் கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## ஈழத்துச் சிதம்பரத்தில் சிவராத்திரி விழா

காரைநகர், பெப்.20

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் சிவராத்திரி விழா இந்த முறை காரைநகர் ஈழத்துச்சிதம்பரத்தில் இடம்பெற உள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள கலாசார உத்தியோகஸ்தர் எஸ். உதயபாலன் தலைமையில் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணி தொடக்கம் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தில் சிறப்புச் சொற்பொழிவுகள் மற்றும் காரைநகர் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ஒ-250)

## T.C. *யோண்கிலெமன்ரைன்*



*(ஆசிரியர், புனித சவேரியார் கல்லூரி, மன்னார்)*

27, சேமக்காலை வீதி, நாவாந்துறை வடக்கைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வதிவிடமாகவும் கொண்ட T.C. யோண்கிலெமன்ரைன் நேற்று (19.02.2012) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் போதகர் கிறிஸ்ரி - மரியம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் செலஸ்ரினாவின் அன்புக் கணவரும் J.C. பிறின்ஸ் அன்டசனின் அன்புத் தந்தையும் T.C. மேரி ஆன், T.C. அன்று ஆகியோரின் சகோதரனும் சூசையப்பு - விக்ரோ ரியா தம்பதியரின் பாசமிகு மருமகனும் அருட்சகோதரி ஜெப சீலி (பெரு), அல்பிரட் (கட்டார்), அருட்தந்தை SA, பொன்சியன் (சரஸ்வதி மகாவித்தியாலயம், திருகோணமலை), அமலசீலி, சிசிலியம்மா, அருட்சகோதரி நிதர்சனா (கார்மேல் மடம், கல்முனை), சில்வெஸ்ரர் (மன்னார், கருங்கண்டல் மகா வித்தியாலயம்), மரியரோசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

27, சேமக்காலை வீதி,
நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்
தோமஸ்கிறிஸ்ரி
*(தந்தை)*


## 72 மணி நேரத்தில் வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் பொதிகள் உங்கள் வீட்டிற்கே வந்து ஏற்றுக்கொள்ளப்படும். (Door to Door Service)
- சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
- 24 மணி நேரத்தில் விநியோகிக்கும் சேவை. (TDD Service)

கடவுச்சீட்டு புதுப்பித்தல்
சகல நாடுகளுக்குமான வீசா விண்ணப்பம்

உலகின் அனைத்து முன்னணி கூரியர் சேவை நிறுவனங்களினதும் சேவைகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

DHL UPS SKYNET FedEx Express AGE

**Arrul Global Express**
International Courier & Cargo Service

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ் T.P : 021 222 6113

# 1 நிமிடம்; ஏவுகணைகள் 4




டமஸ்கஸ்,பெப்20

சிரியா ஜனாதிபதிக்கு எதிராக ஐ.நா சபையில் தீர்மானம் நிறைவேற்றிய நிலையில் அந்தநாட்டு பொதுமக்கள் மீது நிமிடத்திற்கு 4 ஏவுகணைகளை வீசி இராணுவம் கடுமையான தாக்குதலை நடத்தி வருகிறது.

சிரியாவில் பொதுமக்களுக்கு எதிரான தாக்குதலை முடிவுக்கு கொண்டு வர அரபு நாடுகள் பல்வேறு சமரச திட்டங்களை கொண்டு வந்தன. ஜனாதிபதி அசாத்தை பதவி நீக்கம் செய்து அங்கு விரைவில் தேர்தல் நடத்த வலியுறுத்தப்பட்டது. ஆனால் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளின் ஒத்துழைப்புடன் இவை முறியடிக்கப்பட்டன.

இதனையடுத்து சிரியாவில் மனித உரிமைகள் மீறப்படும் நிலைமை மற்றும் பொது மக்கள் மீது தாக்குதல் என்பவற்றைக் கண்டிக்கும் தீர்மானம் ஐ.நா. பொதுச் சபையில் கொண்டுவரப்பட்டது.

பின்னர் அது வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. பொதுச் சபையில் உள்ள 193 நாடுளில் தீர்மானத்தை ஆதரித்து 137 நாடுகள் வாக்களித்தன. 17 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. தீர்மானத்துக்கு எதிராக சீனா, ரஷ்யா, ஈரான், வெனிசூலா, வடகொரியா உள்ளிட்ட 12 நாடுகள் வாக்களித்தன.

சிரியாவுக்கு எதிராக ஐ.நா. சபையில் தீர்மானம் நிறை வேற்றிய நிலையிலும் இராணுவத் தாக்குதல் நிறுத்தப்படவில்லை. மாறாக நேற்று முன்தினம் சிரியா இராணுவத்தினர் கடுமையான தாக்குதலை தொடுத்தனர்.

ஜனாதிபதி அசாத்துக்கு எதிர்ப்பு நிலவும் ஹோம்ஸ் மாகாணத்தில் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் கண்மூடித்தனமாக ஏவுகணைக் குண்டுகளை வீசினார்கள். அங்குள்ள கால்டியா, பாய்யாடா ஆகிய இடங்களில் உள்ள வீடுகள் மீது குண்டுகள் விழுந்தன. இதுவரையில் இல்லாத வகையில் இராணுவத்தினர் தாக்குவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இது பற்றி சிரியா கிளர்ச்சி இயக்க தளபதி ஹாதி அப்துல்லா கூறுகையில், கடந்த 14 நாள்களில் இல்லாத அளவில் கலவரம் வெடித்துள்ளது. இதுவரையில் இப்படியொரு தாக்குதலை பார்க்கவில்லை. நிமிடத்துக்கு 4 ஏவுகணைகள் வீசப்படுகின்றன.- என்றார்.

மேலும் பாபா அம்ரி, இன் ஷாத் ஆகிய மாவட்டங்களிலும் இராணுவத்தினர் தாக்குதல் நடத்துவதாக அங்கு வசிக்கும் மக்கள் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்துள்ளனர்.

இத்துடன் ஹோம்ஸ் நகர் மீது வழக்கத்துக்கு மாறாக ஏராளமான போர் விமானங்களும், உளவு விமானங்களும் பறந்தபடி இருந்தன என்று ஒருவர் தெரிவித்தார். இராணுவத்தின் இந்த தாக் குதலில் எத்தனை பேர் உயிரிழந்தனர் என்ற விவரம் உடனடியாக தெரியவில்லை. (ங)

## கனடாவின் காதலன் அமெரிக்காவேதான்



கனடாவின் காதலன் யார் தெரியுமா? உலகச் சண்டியன் அமெரிக்காவேதான். ஆய்வொன்றின் மூலமே கனடாவின் காதலன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

கனடாவை நேசிக்கும் நாடுகளைப்பற்றி கடந்த இருபது ஆண்டுகளாக நடத்து வந்த 'புதிய ஹலப்' என்ற இந்த ஆய்வின் முடிவில் அமெரிக்கா முதலிடத்தைப் பெற்றுள்ளது. கடந்த 1987 மற்றும் 1989 ஆம் ஆண்டு 93 சதவீதமான அமெரிக்க மக்கள் கனடாவை நேசித்தனர்.

தற்போது அந்த வீதம் அதிகரித்து 96% பேர் கனடாவை நேசிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டு கேல்கரியில் உள்ள குழாய் எரிவாயு திட்டத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தடைவிதித்தாலும் இரண்டு நாடுகளிடையே தொழில் ஒப்பந்தங்களில் சில பிரச்சினைகள் இருந்தபோதிலும் அமெரிக்க மக்களின் அன்பு மட்டும் குறையாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவின் சுற்றுப்புறச் சூழல் துறையின் அமைச்சரான பீட்டர் கெண்ட், அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டனிடம், கனடா உலக வெப்பமயமாதலை எதிர்ப்பதில் அமெரிக்காவுடன் இணைந்து செயல்படும் என்று தெரிவித்த சில மணிநேரங்கள் கழித்து இந்த ஹலப் ஆய்வு முடிவு வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

சில கருத்து வேறுபாடுகள் இரண்டு நாடுகளுக்கிடையே இருந்த போதிலும், கனடாவை அமெரிக்க மக்கள் காதலிப்பதற்குக் காரணம், கனடாவின் பொருளாதாரம் சிறப்பாக உள்ளமைதான். மேலும் கனடிய மக்கள் அமெரிக்க தூதரகங்களை ஒருபோதும் தாக்கியதும் இல்லை ஏவுகணைகளை அனுப்பியதில்லை.

போதைக் குற்றங்களால் அல்லது வேறு அமைப்புசார்ந்த குற்றங்களால் பிரச்சினை எதுமில்லை. எனவே அமெரிக்க மக்கள் உண்மையாகவே கனடாவை நேசிக்கின்றனர். (ங)

## கைகொடுக்கும் சீனா



சிரியாவுக்கு எதிராக ஐ.நாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, சிரியா ஜனாதிபதி அசாத்தை சீன வெளிவிவகாரத்துறை துணை அமைச்சர்ஜாய் ஜுன் சந்தித்து பேச்சு நடத்தினார்.

அவர் சிரியா வெளிவிவகாரத்துறை துணை அமைச்சர் பைசல் மெக்தத்தையும், ஜனாதிபதி அசாத்தையும் சந்தித்துப் பேசினார்.

இதன்பின்னர் ஜுன் அளித்த பேட்டியில், சிரியாவில் ''அனைத்துத் தரப்பினரும் தங்கள் வன்முறைகளை உடனடியாக நிறுத்த வேண்டும்.

அதேநேரம் ஜனாதிபதி அறிவித்துள்ள புதிய அரசியல் அமைப்புச் சட்டத்துக்கான பொது வாக் கெடுப்பு மற்றும் அதைத் தொடர்ந்த நாடாளுமன்ற தேர்தல்கள் நாட்டில் அமைதியைக் கொண்டு வரும் என நம்புகிறோம்''.- என்றார். (ங)

## இணையத் தாக்குதல்

இணையம் மூலம் உருவாகும் அரசுக்கு எதிரான போராட்டங்களை ஒடுக்குவதற்காக புதுவித தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தி உள்ளனர்.

சிரியாவில் அரசுக்கு எதிராக கடந்தாண்டு மார்ச் மாதம் முதல் போராட்டம் நடந்து வருகிறது. கடந்தாண்டு டிசம்பர் மாதம் முதல் நூற்றுக்கணக்கான அரசு எதிர்ப்பாளர்களின் கணினிகள் பழுதடைந்திருக்கின்றன.

ஜனாதிபதி அசாத்தின் ஆதரவாளர்கள் ஒருவித வைரஸ் மூலம் எதிர்ப்பாளர்களின் இணைய முகவரிகளை களவாடுகின்றனர். இந்த முகவரி மற்றும் கட வுச்சொற்களை உப யோகித்து 'சட்டிங்' செய்கின்றனர். 'சட்டிங்' செய்யும் நபர்களுக்கு நண்பர்கள் போன்று பழகி, பிறகு வைரஸ்களை அவர்களுக்கு அனுப்பி விடுகின்றனர். எனவே இந்த வைரஸ் மூலம் கணினி பாதிப்புக்குள்ளாகிறது. (ங)

## வீடுகளுக்குள் பெருகும் புகைப் பழக்கம்

புகை, மது கெடுதல் என்று தெரிந்தாலும் பிரசாரம் செய்யப்பட்டாலும் விற்பனை எவ்வித குறைவும் இல்லாமல் தான் நடைபெறுகின்றது.

பொது இடங்களில் புகை பிடிக்க சில நாடுகளில் தடை உள்ளது. ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் இந்த தடையால் மக்களிடம் புகை பழக்கம் குறைந்துள்ளதா என்று சர்வதேச புகையிலை கட்டுப்பாடு வாரியம் சமீபத்தில் ஆய்வு நடத் தியது. தடை விதிக்கப்படும் முன்பு கருத்துக் கணிப்பு களில் கிடைத்த விவரங்களும் ஆராயப்பட்டன. இதில் தெரியவந்த தகவல்கள் பற்றி வாரிய அதிகாரிகள் கூறியதாவது: பொது இடங்களில் புகை பிடிக்கத் தடை விதிப்பது நேர் மற்றும் எதிர்மறை விளைவுகளை சம அளவில் ஏற்படுத்துகிறது. பொது இடங்களில் புகை பிடிக்க தடை இருப்பதால், வீடுகளில் புகை பிடிப்பது அதிகரித்திருக்கிறதா என்றும் ஆய்வு நடத்தப்பட்டது. தடைக்கு பிறகு வீட்டில் புகை பிடிப்போரின் எண்ணிக்கை அயர்லாந்தில் 25 சதவீதமும், பிரான்சில் 17 சதவீதமும், ஜேர்மனியில் 38 சதவீதமும், நெதர் லாந்தில் 28 சதவீதமும் அதிகரித்துள்ளது.

பொது இடத்தில் புகை பிடிக்க முடியாது என்பதால், வீட்டில் அதிகம் சிகரெட் பிடிக்கின்றனர். இதனால் வீட்டில் இருக்கும் குழந்தைகள், பெரியவர்கள், பெண்கள் ஆகியோர் சிகரெட் புகையைச் சுவாசிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (ங)

## அமெரிக்க நாடாளுமன்றத்தை தகர்க்க முயன்றவர் கைது



வாஷிங்டன்,பெப்.20

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் நாடாளு மன்றத்தை தகர்க்க சதித் திட்டம் தீட்டிய மர்மநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

மொராக்கோவை சேர்ந்த அமின் எல் கலீப்பி (வயது-29) வாஷிங்டன் நாடாளு மன் றத்தை தகர்க்க சதித் திட்டம் தீட்டி, தற்கொலைத் தாக்குதல் நடத்த தருணம் பார்த்திருந்தார்.

எனினும் சரியான நேரத் தில் இவரை பொலிஸார் கைது செய்ததால் பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டது.

இவர் அமெரிக் காவின் விர்ஜினியா மாநிலத்தில் ஆர்லிங்டன் பகுதியில் தீவிர வாதிகளுடன் சேர்ந்து பல சதித் திட்டங்களை தீட்டியதும், பல இடங்களில் வெடி குண்டு தாக்குதல் நடத்த திட்டமிட்டதும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இது குறித்து இவர் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஒரு வருடமாக இவரது நடமாட்டத்தை பொலிஸார் கண்காணித்து வந்தனர். இந்நிலை யில் இவர் தன்னுடைய உடலில் சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளை கட்டிக் கொண்டு நாடாளுமன்றக் கட்டடத்தின் அரு கில் சுற் றிய போது, எப். பி.ஐ அதி காரிகளும், பொலிஸாரும் அவரை சுற்றிவளைத்து கைது செய்தனர். இதுகுறித்து எப்.பி.ஐ. உதவி இயக்குனர் மெக்ஜன் கின் கூறுகையில், அமினுக் கும் அல்கெய்தா தீவிரவாதி இயக்கத்துக்குமானதொடர்பு குறித்து தீவிர விசாரணை நடத்தவுள்ளோம்- என்றார். (ங)



மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரின் கீடா மாவட்டத்தில் சட்ட விரோதமாகக் கடத்தப்பட இருந்த புலித்தோலை கடந்தவாரம் மலேசியத் தேசிய வன உயிரியல் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். (ங)

# முன்னேறும் ஈரான் கப்பல்கள்

## மத்திய தரைக் கடற்பகுதிக்குள் நேற்று நுழைந்தன

**இஸ்லாமியப் புரட்சிக்குப் பின் இரண்டாவது முறையாக ஈரான் போர்க் கப்பல்கள், மத்திய தரைக் கடலுக்குச் சென்றுள்ளன. இது அமெரிக்காவுக்கு சினத்தை மூட்டும் என்று கருதப்படுகிறது.**



தெஹ்ரான், பெப்.20

ஈரான் நாட்டைச் சேர்ந்த போர்க் கப்பல்கள் சுயெஸ் கால்வாயைக் கடந்து மத்திய தரைக் கடல் பகுதிக்கு நேற்று முன்தினம் சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதையடுத்து ஈரான், இஸ்ரேல் இடையேயான பதற்றம் அதிகரித்துள்ளது. இதற்கிடையில் ஈரானின் அணு ஆயுதத் தயாரிப்பு, மத்திய ஆசியாவில் பனிப் போரை உருவாக்கும் என்று பிரிட்டன் வெளிவிவகாரத் துறை அமைச்சர் வில்லியம் ஹெறாக் எச்சரித்துள்ளார்.

இந்தியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் சமீபத்தில் நடந்த வெடி குண்டுத் தாக்குதல்கள், ஜோர்ஜியாவில் தாக்குதலுக்கான முயற்சி என்பவற்றின் பின்னணியில் ஈரானே இருப்பதாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டி வருகிறது.


இந்த நிலையில் ஈரானின் ஐ.ஆர்.என்.ஏ. செய்தி நிறுவனம் நேற்று வெளியிட்ட செய்தியில், ''ஈரான் நாட்டின் 'ஷாகித் காண்டி' மற்றும் 'கார்க்' ஆகிய போர்க் கப்பல்கள் சுயெஸ் கால்வாயைக் கடந்து மத்திய தரைக் கடலுக்குச் சென்றுள்ளன'' - என்று தெரிவித்துள்ளது.

ஈரானியக் கடற்படைத் தளபதி ஹபீபுல்லா சயாரி இது குறித்துக் கூறுகையில், ''கடந்த 1979 ஆம் ஆண்டில் ஈரானில் நிகழ்ந்த இஸ்லாமியப் புரட்சிக்குப் பின் இரண்டாவது முறையாக ஈரானியப் போர்க் கப்பல்கள், மத்திய தரைக் கடற்பகுதிக்குச் சென்றுள்ளன. இந்த நடவடிக்கை அண்டை நாடுகளுக்கு ஈரானின் வலிமை, நட்பு மற்றும் அமைதி விருப்பம் என்பவற்றை வெளிக்காட்டும்''- என்றார்.

எனினும் எத்தனை கப்பல்கள் மத்திய தரைக் கடலுக்குச் சென்றுள்ளன என்பது பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை. இந்த நிலையில் ஈரானின் அணு ஆயுதத் தயாரிப்புக் குறித்து நேற்று முன்தினம் பேட்டியளித்த பிரிட்டன் வெளிவிவகாரத் துறை அமைச்சர் வில்லியம் ஹெறாக், ''ஈரான் அணு ஆயுதத்தைத் தயாரிக்கத் தொடங்கினால் மத்திய ஆசியாவில் பிற நாடுகளும் அதற்கு ஆசைப்படும். இதனால் அந்த மண்டலத்தில் பனிப் போர் ஏற்படும்''- என்றார்.

இதற்கிடையில் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் நேற்று பேட்டியளித்த அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனெட்டா, .

''ஹோர்முஸ் நீரிணை சர்வதேசத்துக்கு உரியது. அதை மூடுவதற்கு ஈரான் முயன்றால் அதைத் தடுக்க அனைத்து வழிகளையும் அமெரிக்கா பிரயோகிக்கும்'' என்று எச்சரிக்கை விடுத்துள்ளார். (ங)




அமெரிக்காவின் அச்சுறுத்தலையும் மீறித் தன்னுடைய போர்க் கப்பல்களை ஈரான் மத்திய தரைக் கடல் பகுதிக்கு நகர்த்திய பின்னர் வெளி வந்த கார்ட்டூன்.

# சறுக்கினார் இளவரசர்



மகளுடன் பனிச்சறுக்கில் ஈடுபடும் இளவரசர்

பனிச் சறுக்கு விளையாடும் போது, பனிப் பாறைகளில் சிக்கி, நெதர்லாந்து இளவரசர் ஜோகன் பிரிசோ படுகாயமடைந்துள்ளார்.

நெதர்லாந்து இளவரசர் ஜோகன் பிரிசோ(வயது 43) தனது குடும்பத்தினருடன் ஒஸ்ரியாவுக்குச் சுற்றுப்பயணம் சென்றிருந்தார்.

தற்போது,ஒஸ்ரியாவில் குளிர்காலம் நிலவுவதால் கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. அங்குள்ள ஆல்ப்ஸ் மலை முழுவதும் பனி படர்ந்துள்ளது.

இந்த நிலையில் இளவரசர் பிரிசோ, அங்குள்ள லெக் பகுதியில் பனிச் சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டார்.

அப்போது 40 மீற்றர் நீளம், 30 மீற்றர் அகலம் கொண்ட பனிப்பாறை சரிந்ததில், இளவரசர் பிரிசோ சிக்கினார். பனிக்கட்டிக்குள் புதைந்த அவரை மீட்பு குழுவினர் தோண்டி எடுத்து மீட்டனர்.

15 நிமிடங்கள் வரை இளவரசர் பனிக்கட்டிக்குள் சிக்கியதில் பனிப்பாறைகள் தாக்கி, அவருக்கு படுகாயம் ஏற்பட்டது. உடனே அவரை வைத்தியசாலையில் சேர்த்தனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இளவரசர் ஜோகன் பிரிசோவின் உடல்நிலை சீரடைந்துள்ளது என்றாலும், அவர் அபாயக்கட்டத்தை தாண்டவில்லை என்று நெதர்லாந்து அரசு தெரிவித்துள்ளது.

# ஒபாமாவின் ஆலோசகர் ஓடுகிறார் இஸ்ரேலுக்கு



நியூயோர்க்,பெப்.20

''ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரித்து வருகிறது'' என்று அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் குற்றம் சாட்டி வருகின்றன. இதைத் தொடர்ந்தும் ஈரான் மறுத்து வருகிறது.

இந்த நிலையில் சமீபத்தில் தாய்லாந்தில் நடைபெற்ற குண்டுவெடிப்பு தாக்குதல்களுக்கு ஈரான்தான் காரணம் என இஸ்ரேல் குற்றஞ்சாட்டுகிறது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான ரொம் டோனிலோன் அவசர பயணமாக நேற்று இஸ்ரேல் புறப்பட்டுச் சென்றார்.

இதேவேளை, மத்திய தரைக் கடற்பகுதிக்குள் ஈரானியக் கப்பல்கள் நுழைந்த நிலையில் அமெரிக் கப் பாதுகாப்பு ஆலோசகரின் இஸ்ரேல் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (ங)

# இது முள்ளிவாய்க்கால் அல்ல...



ஹொண்டூரஸ் நாட்டில் சிறைச்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 400 இற்கும் அதிகமான கைதிகள் எரிந்து உயிரிழந்தனர். இவர்களின் சடலங்கள் இனங்காணப்பட்டு நேற்று முன்தினம் அடக்கம் செய்யப்பட்டன. இனங்காண்பதற்காக அடுக்கி வைக்கப்பட்டுள்ள சடலங்கள். இவற்றைப் பார்க்கும் போது முள்ளிவாய்க்கால் உடலங்களே ஞாபகத்துக்கு வருகின்றன.

## புதிய கர்தினால்கள்

வத்திக்கான், பெப்.20

22 புதிய கர்தினால்களின் பெயர்களைப் பாப்பரசர் 16 ஆம் ஆசீர்வாதப்பர் கடந்த வெள்ளிக்கிழமை பிரகடனப் படுத்தினார்.

வத்திக்கான் தேவாலயத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உலகெங்கிலுமுள்ள ஏராளமான கிறிஸ்தவ மதகுரு பீடங்களைச் சேர்ந்த உயர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அண்மைக் காலத்தில் மரணமடைந்த கர்தினால் களின் இடங்களுக்கு ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பவே புதிய கர்தினால்கள் பாப்பரசரால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளனர்.

புதிய கர்தினால்கள் அன்றைய தினம் பாப்பரசரின் விசேட ஆராதனையில் கலந்து கொண்டனர். (ங)

# கல்லெறி வாங்கிய ஜனாதிபதி



ஹெய்ட்டி நாட்டு ஜனாதிபதி மைக்கேல் மார்டெல்லி மீது மர்ம நபர்கள் கற்களை வீசி தாக்குதல் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.

ஜனாதிபதி மார்டெல்லி நேற்று முன்தினம் நண்பகலில் பொதுவான வீதி ஒன்றில் பாதுகாவலர்களுடன் நடந்து சென்றுள்ளார்.

அப்போது ஹெய்ட்டி பல்கலைக்கழகத்தில் பதுங்கியிருந்த சிலர், அவர் மீது கருங்கற்களை வீசியுள்ளனர். ஜனாதிபதி தன் மீது கற்கள் படாதவாறு குனிந்து தப்பித்துக் கொண்டார் . அவரது பாதுகாவலர்கள் வானை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தி தாக்குதல் நடத்தியவர்களை எச்சரித்து, கண்ணீர்ப் புகைக் குண்டுகளை ஏவினர். அதன் பின்னர் ஜனாதிபதி தப்பித்தோம் பிழைத்தோம் என்று தன்னுடைய மாளிகைக்கு பாதுகாவலர்களுடன் சென்றுவிட்டார். இதுகுறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.(ங)

## ஜப்பான் மன்னருக்கு சத்திரசிகிச்சை

டோக்கியோ, பெப்.20

உடல்நலக் குறைவு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஜப்பானிய மன்னர் அஹிகிட்டோவுக்கு நேற்று முன்தினம் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

மன்னரின் வயிற்று உபாதையை நீக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட இந்த சத்திர சிகிச்சை வெற்றியளித்துள்ளதாகவும் இன்னும் ஒரு சில வாரங்களில் மன்னர் பூரண சுகம் பெற்று திரும்புவார் எனவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் ஜப்பானிய மக்கள் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்துள்ளனர். (ங)

# ஜமெய்க்காவில் நவீன ஆதாம் - ஏவாள் ஜோடிகள்



ஒன்பது ஜோடி காதலர்கள் நிர்வாணக் கோலத்துடன் ஒரே வைபவத்தில் திருமணம் செய்துகொண்ட சம்பவம் ஜமெய்க்காவில் இடம் பெற்றுள்ளது.

ஜமெய்க்காவின் நீக்ரில் கடற்கரையில் இந்த திருமண நிகழ்வு இடம்பெற்றுள்ளது. இதில் கலந்து கொண்ட மணமகள்கள் முகத்திரைகளை மாத்திரம் அணிந்திருந்தனர். ஆனால் இவர்களின் உடலில் வர்ணங்கள் பூசப்பட்டிருந்தன.

உல்லாச ஹோட்டலொன்று திருமணத்துக்கான முழுச் செலவுகளையும் தானே ஏற்றுக் கொண்டு, குழுவாக நிர்வாண திருமணம் செய்து கொள்ள 10 காதல் ஜோடிகளை அழைத்திருந்தது.

ஆனால் ஒரு காதல் ஜோடி இந்த நிகழ்வு இடம் பெறுவதற்கு முதல் நாள் இத்திட்டத்திலிருந்து வாபஸ் பெற்றது.

இந்தத் திருமண ஜோடிகள் கேள்விக்கொத் தொன்றின் மூலமே இத்திருமணம் வைபவத்திற்கு தெரிவுசெய்யப்பட்டனர். சுமார் 100 ஜோடிகள் இதற்கு விண்ணப்பித்திருந்தன. அவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஜோடிகளே ஆதாம் - ஏவாள் பாணியில் ஆடைகளின்றி திருமண பந்தத்தில் இணைந்துகொண்டனர். (ங)

## குன்னேரஸ் விருதுக்கு இந்தியர்

சர்வதேச ரீதியில், இந்த வருடம் முதல் வழங்கப்பட உள்ள குன்னேரஸ் விருதுக்கு இந்திய வம்சாவளி உயிரியல் அறிஞர் கமல்ஜித் எஸ்.பாவா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உயிரியல் துறையில் அறிவியல் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அளப்பரிய சாதனைகளை ஏற்படுத்தியவர்களைக் கௌரவிக்கும் பொருட்டு, இந்த வருடம் முதல் குன்னேரஸ் விருது வழங்கப்பட உள்ளது. அதில் முதல் விருதை இந்திய வம்சாவளியினர் பெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் பல்கலைக்கழகத்தில் உயிரியல் துறை பேராசிரியராக பணியாற்றும் வைத்தியர் கமல்ஜித் பாவா, மழைக் காடுகள் பகுதிகளில் பாப்புலேசன் உயிரியல் பிரிவில்ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

இந்தியாவின் மேற்குத் மலைத் தொடர்ச்சி, இமாலய மலைத்தொடர் மற்றும் மத்திய அமெரிக்க காடுகளில் புதிய உயிரின கண்டுபிடிப்புகளில் இவரது பங்கு அளப்பரியது என்பது குறிப்பிடத்தக்கது. ஏப்ரல் 17 ஆம் திகதி, நோர்வே நாட்டில் நடைபெற உள்ள நிகழ்ச்சியில் கமல்ஜித் பாவாவுக்கு குன்னேரஸ் விருது வழங்கப்பட உள்ளது. (வ)

# ஆற்றில் விழுந்தது பஸ் மாணவர்கள் 6 பேர் சாவு



கோவாவில் பாடசாலை பஸ் ஒன்று ஆற்றில் விழுந்து விபத்துக் குள்ளாகியதில் 6 மாணவர்கள் பரிதாபமாக இறந்தனர்.

கோவா மாநிலம் பானாஜி அருகே நேற்றுமுன்தினம் காலை பாடசாலை பஸ் ஒன்று 12 இற்கும் மேற்பட்ட மாணவர்களை ஏற்றிக் கொண்டு சென்றது.

அப்போது, எதிர்பாராத விதமாக சாரதியின் கட்டுப்பாட்டை மீறி வீதிக்கு அருகே உள்ள கல்வை ஆற்றில் பஸ் கவிழ்ந்து விபத்தில் சிக்கியது.

உடனே, அந்தப் பகுதி மக்கள் விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். பொலிஸார், தீயணைப்புத் துறையினர், கடற்படை வீரர்கள், ராணுவம் போன்றவற்றைச் சேர்ந்தவர்கள் மீட்புப் பணிக்கு அழைக்கப்பட்டனர்.

**இறந்த சிறுவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபா நிதியுதவியை கோவா அரசு அறிவித்துள்ளது.**

3 ஹெலிகொப்டர்களும் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. சுமார் 2 மணி நேர மீட்புப் பணிப் போராட்டத்துக்குப் பின்னர் பஸ் வெளியே எடுக்கப்பட்டது.

பஸ்ஸில் சிக்கிய 6 சிறுவர்கள், கண்காணிப்பாளர் ஆகிய 7 பேர் இறந்து கிடந்தனர். இன்னும் பலரைக் காணவில்லை. அவர்களை தேடும் பணி தொடர்கிறது.

இதனால் சாவு எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. இந்தத் துயரச் சம்பவத்தால் பானாஜியில் சோகம் நிலவுகிறது.

இறந்த சிறுவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபா நிதியுதவியை கோவா அரசு அறிவித்துள்ளது. ஆற்றில் பஸ் கவிழ்ந்ததும் சாரதியும், நடத்துனரும் தப்பிவிட்டனர். அவர்களை பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். (வ)

## நிலப்பறிப்பு முறையீட்டில் சசிகலாவின் கணவர் கைது

தஞ்சாவூர், பெப்.20


நிலப் பறிப்பு முறையீட்டில் நேற்று முன்தினம் விசாரணைக்காக சென்னை பெசன்ட் நகர் வீட்டிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட சசிகலாவின் கணவர் ம.நடராஜன், கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு சென்னையில் . இருந்து விசாரணைக்காக தஞ்சாவூர் அழைத்து வரப்பட்ட நடராஜன், நள்ளிரவு 3.30 மணி அளவில் பல்கலை வளாகப் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டார். பின்னர் 4 மணிக்கு மேல் தஞ்சாவூர் மாவட்ட

மாலதி முன் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அவரை 15 நாள் நீதிமன்றக் காவலில் வைக்க பொலிஸாருக்கு நீதிபதி அனுமதி அளித்தார். பின்னர் நடராஜன் திருச்சி மத்திய சிறைக்கு கொண்டு செல்லப்பட்டு, சிறையில் வைக்கப்பட்டார்.

ஏற்கெனவே சசிகலாவின் சகோதரர் திவாகரன், உறவினர் ராவணன் ஆகியோர் நிலப்பறிப்பு முறையீடுகளில் சிறையில் உள்ளனர். இந்த நிலையில் சசிகலாவின் கணவர் ம.நடராஜனும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.



தஞ்சாவூரைச் சேர்ந்த ராமலிங்கம் என்பவர் தனது 15 ஆயிரம் ச.அடி. நிலத்தை நடராஜன் மிரட்டி பறித்துக் கொண்டதாக முறைப்பாடு அளித்திருந்தார்.

தனது கைது பற்றி ம.நடராஜன் தெரிவித்ததாவது:

இது பழிவாங்கும் நடவடிக்கை. வழக்கை சட்ட ரீதியாகச் சந்திப்பேன். என் கைது, ஜெயலலிதாவுக்கான பிறந்தநாள் பரிசு. என் மீதும் என் குடும்பத்தினர் மீதும் பொய் வழக்கு போடப்பட்டு வருகிறது. ஓர் ஆண்டுவரை சிறையில் வைத்திருந்தாலும் நான் சமாளிப்பேன். எந்தவித சோதனையையும் சமாளிக்கும் சக்தி எனக்கு உள்ளது - என்றார் அவர்.(வ)

## இத்தாலியர் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை

### மத்திய கப்பல் துறை அமைச்சர் தெரிவிப்பு

சென்னை, பெப்.20

இத்தாலி நாட்டு கப்பலில் இருந்தவர்கள் 2 தமிழக மீனவர்கள் இருவரை சுட்டுக் கொன்றது துரதிருஷ்டவசமானது. இந்த சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று மத்திய கப்பல் துறை அமைச்சர் ஜி.கே. வாசன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்று வரும் நிலையில், இத்தாலி நாட்டில் இருந்து நமக்கு எந்த நிர்ப்பந்தமும் இல்லை.

**எமது நாட்டில் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டிய தேவை இருக்கிறது என்றார்.**

மேலும் அவர், எமது நாட்டில் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டிய தேவை இருக்கிறது.

எனவே, இந்த விடயத்தில் மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயற்பட வேண்டும் என்றார் அவர். (வ)



மேற்கு வங்க மாநிலத்தில் தேசிய பாதுகாப்புப் படை ஆரம்ப விழாவில் கலந்துகொள்ளவந்த மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரத்துக்கு சம்பிரதாய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது. (வ)

## 'ஜெ' இற்கு தொடர்பில்லை நானே பொறுப்பு

### சசிகலா கண்ணீர்

சொத்துக்குவிப்பில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று சசிகலா அழுதுகொண்டே பெங்களூர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் முதல்வர் ஜெயலலிதா மற்றும் அவரது முன்னாள் தோழி சசிகலா மீது பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் சொத்துக் குவிப்பு வழக்கு நடைபெற்று வருகிறது.

இது தொடர்பாக பெங்களூர்ச் சிறப்பு நீதிமன்றத்தில் சசிகலா நேற்றுமுன்தினம் முன்னிலையானார். இவருடன் இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோரும் முன்னிலையாகினர்.

சசிகலாவிடம் விசாரணை ஆரம்பித்து, கேள்விக்கு பதில் அளிக்கையில் கண்ணீர் விட்டு அழுதார். இந்த விசாரணையின்போது, ஜெயா பப்ளிகேஷன்ஸ் தொடர்பான கேள்விகள் கேட்கப்பட்டன.

இதற்கு அவர் பதில் அளிக்கையில், ஜெயலலிதாவும், நானும் பங்குதாரராக இருந்து வந்தது உண்மைதான். ஆனால் நிறுவனங்களை நான்தான் நிர்வகித்து வந்தேன்.

இதில் நடந்த விடயங்கள் எதுவும் ஜெயலலிதாவுக்குத் தெரியாது. நிறுவனங்களில் அவ்வளவாக அவர் நாட்டம் காட்டியதில்லை. இதற்கு நான்தான் முழுப்பொறுப்பாக இருந்தேன்.

சொத்து வாங்கிய விவரம் அவருக்குத் தெரியாது என்றும் கண்ணீர் விட்டு அழுதுகொண்டே தெரிவித்தார். (வ)

## ஜம்முவில் நிலச்சரிவு 6 பேர் சாவு



ஜம்மு காஷ்மீர் மாநிலம் ராம்பன் மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 6 பேர் உயிரிந்தனர். இந்தச் சம்பவம், அந்தப் பகுதியில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜம்மு காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரிலிருந்து ராம்பன் நோக்கிச் சென்று கொண்டிருந்த வாகனம், பந்தல் பகுதியில் நிலச்சரிவில் சிக்கி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில், சம்பவ இடத்திலேயே 6 பேர் உயிரிழந்தனர். 4 பேர் படுகாயமடைந்தனர்.

3 மணித்தியால மீட்புப் பணிகளுக்கு பின்னர் உயிரிழந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வ)

## கடலோரக் கண்காணிப்பை தீவிரப்படுத்த தமிழகத்தில் 11 மரைன் பொலிஸ் நிலையம்



தமிழகக் கடற்கரைப் பகுதியில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தி கடத்தலை தடுக்கவும், மீனவர்களின் பாதுகாப்புக்காகவும் புதிதாக 11 இடங்களில் மரைன் பொலிஸ்நிலையங்கள்அமைக்கப்படவுள்ளன. 15 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட உள்ள மரைன் பொலிஸ் நிலையத்துக்கு இடம் தெரிவு செய்யும்பணி தீவிரமாக இடம் பெற்று வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழக கடலோரப் பகுதிகளின் பாதுகாப்புக்காக மரைன் பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடற்கரையில் இருந்து 12 கடல் மைல் தூரத்துக்கான பாதுகாப்புகளை இந்த மரைன் பொலிஸார் கவனித்து வருகின்றனர். குறிப்பாக கடலோரங்களில் தீவிரவாத ஊடுருவல்கள், போதைப்பொருள்கள் கடத்தல் ஆகியவை குறித்து இவர்கள் கண்காணிப்புப் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் மும்பையில் கடல் வழியாக ஊடுருவிய தீவிர வாதிகள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தங்கியிருந்த விடுதியில் திடீர் தாக்குதல் நடத்தினர். இதனைக் கருத்தில் கொண்டு நாடு முழுவதும் கடலோரப் பாதுகாப்பைத் தீவிரப்படுத்துமாறு மாநிலங்களுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியிருந்தது.

இதன் அடிப்படையில் கடலோரப் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து பணியாற்றும் வகையில் தமிழகத்தில் அதிகமாக 18 இடங்களில் மரைன் பொலிஸ் நிலையங்கள் அமைக்க டிஜிபி அலுவலகம் பரிந்துரை செய்திருந்தது. இது தொடர்பான உத்தரவு வெளியிடப்பட்டுள்ள நிலையில் புதுக்கோட்டை, தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய மாவட்டங்களில் புதியதாக அமையவுள்ள 11 மரைன் பொலிஸ் நிலையங்களுக் கான இடம் தெரிவு தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது.(வ)

# அன்னை என்றொரு ஆலயம்

அங்கே அன்பு மட்டுமே ஜீவனம்
காணிக்கை கேட்காத கடவுள் அவள்
காலடியில் காணக்கிடைக்கும்
அவளின் அருள்
பத்துத் திங்கள் கருவிருந்தேன்
அவள் பளிங்கு முகத்தைக் கண்டிடவே !
என்ன தவம் செய்திருந்தேன்
தாயாய் அவளை கொண்டிடவே!
பாசம் புரளும் வங்கி அவள்
வட்டியின்றி முழுதும்
தந்திடுவாள்
பத்துப் பிள்ளை பெற்றாலும்
முத்தத்தை பாங்காய் பகிர்ந்திடுவாள்
எத்தனை பிறவி கொண்டாலும்
உன் மகளாய் வாழும் வரம்வேண்டும்
இல்லை ஒரு பிறவியாவது
என் மகளாய் மடியினில்
தவழ்ந்திட வேண்டும் நீ.



இலக்கியா

# பாராட்டை எதிர்பார்க்கும்..... பலவீனம்

-நித்தியா



அளவுக்கு அதிகமான துன்பத்தை ஒரு பெண் அடைவது எப்போது தெரியுமா? மிகையான வேலை செய்யும் போது இல்லை. உணவு, உறக்கம் குறைந்து விடும் போதுமில்லை. அவள் எப்போது அதிக வேதனை அடைகிறாள்... தெரியுமா? தன் வேலையைப் பிறர் குறை சொல்லும் போது, பழிக்கும் போது, விமர்சிக்கும்போது அவள் நொருங்கிப் போய் விடுகிறாள். வேலைகள் தருகிற வேதனையை விடவும் வேலை பற்றிய விமர்சனங்கள் தரும் வேதனைதான் அவளை அதிகம் துன்புறுத்துகிறது.

விமர்சனம் செய்வோர் தரமானதா இல்லையா என்று கண்டறிய வேண்டும். அதை விட்டு விட்டு வேதனைப்படுத்துவது நல்லதல்ல என்று உணரவேண்டும். நாம் எப்படி நடந்து கொள்வது என்பதை மட்டுமே நாம் முடிவு செய்ய வேண்டும். அதற்காக நாம் ஏன் துன்பப்படவேண்டும்? இந்தத் தெளிவு பெண்களுக்கு பிறந்து விட்டால் உங்களால் புது வாழ்வு வாழ முடியும்.


பிறரது பாராட்டை எதிர்பார்க்கும் பலவீனம் உள்ளவர்கள்தான் விமர்சனங்கள் , பழியுரைகள் எதிர்ப்படும் போது வாடி வதங்கிப் போய் விடுவார்கள். எனவே பாராட்டை எதிர்பார்க்காதீர்கள். பாராட்டு, விமர்சனம் இரண்டுமே உண்மையல்ல என்கின்ற தெளிவு பிறந்து விட்டால் உங்கள் வாழ்க்கை வசந்தமாகிவிடும்.

பழித்துக் கூறியவர்களை அவமதிக்க வேண்டாம். அதற்காக நீங்கள் அழவும் வேண்டாம். புன்னகையுடன் விமர்சனங்களைப் புறக்கணிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். காற்றைப் போல் லேசாகி விடுவீர்கள். காற்றை அடக்கி வைத்திருக்கும் கால்பந்து பலரது கால்களாலும் உதைபடுகிறது.

ஆனால் காற்றை உள்வாங்கி அழகாய் வெளியிடும் புல்லாங்குழலோ உதடுகள் முத்தமிடும் உயரத்தில் இருக்கிறது. ஒருபோதும் உணர்ச்சிகளை அடக்க வேண்டாம். எதையுமே காற்றாய் உள்வாங்கி இசையாய் வெளியேற்றும் புல்லாங்குழல் போன்று கலையைப் பயிலுங்கள். வசையை உள்வாங்கி இசையை வெளியிடும் குழலைப் போல் வாழ்வை இனிய சங்கீதத்தால் நிரப்புங்கள் .

# பெண்களின் மாற்றம்

ஆ.துளசி.



பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள் . இந்தக் கூற்று தற்காலப் பெண்களுக்கே பொருந்துகின்றது. இந்தக் காலப் பெண்கள் பேயாகவே உருமாறி வருகின்றனர். முன்னைய காலப் பெண்கள் சேலைகட்டி, தலை முடியை அழகாக வாரி பின்னித் தலையிலே பூமாலை வைத்து, திருமணமானால் நெற்றியிலே குங்குமம் மிளிர வலம் வருவார்கள். அவர்கள் தெய்வாம்சம் பொருந்தியவர்களாகவே இருப்பார்கள். இன்றோ தாங்கள் படித்தவர்கள், எல்லாம் தெரிந்தவர்கள் என்ற மமதையில் நாகரிகம், கலாசாரம், பழக்கவழக்கம், பண்பாட்டை மறந்தவர்களாக இருக்கின்றனர். திருமண மானவர்கள் யார்? திருமணமாகாதவர்கள் யார்? தாய் யார்? மகள் யார்? என இனங் கண்டு கொள்வது மிகவும் கடினமான விடயமாக உள்ளது.

அதிலும் பெண்கள் தலைமுடியைப் படுத்தும் பாடோ மிகக் கொடுமை. முடியை அழகுபடுத்தல் என்ற முறையில் தலைமுடியை என்னென்னவோ செய்கிறார்கள். அவர்களின் தலைமுடி வெட்டைப் பார்த்தால் கறையான் அரிப்பது மேலானது எனக்கூடக் கூறலாம். பெண்கள் படித்தால் மட்டும் போதாது; நல்ல பண்புள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். இதனை அவர்கள் தங்களுடைய சீரான செயற்பாடுகள் மூலம் செயற்படுத்தல் அவசியம்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# பெண்கள் எழுதக்கூடாதா?

இன்றைய சமுதாயத்தில் பெண்கள் எல்லா விடயத்திலும் உயர்ந்த நிலையில்தான் காணப்படுகிறார்கள். ஆனாலும் சில பெண்கள் தம் திறமைகளை வெளியில் கொண்டுவர பயப்படுகிறார்கள். நாம் இப்படிச் செய்தால் மற்றவர்கள் எம்மைப் பற்றி என்ன பேசுவார்களோ என்று இந்த சமுதாயத்தை பார்த்து பயப்படுகிறார்கள்.

நான் ஒரு வீட்டுக்கு சென்றிருந்தேன். உரையாடிக் கொண்டிருந்தேன். மேசையில் கொப்பிகள், புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதில் என் கவிதைகள் என போட்டு ஒரு கொப்பி நிறைய கவிதைகள் எழுதப்பட்டிருந்தன.

தற்காலவிடயங்களை ப் பிரதிபலிப்பவையாகவே இருந்தன. சீதனக் கொடுமை, ஆடம்பர செலவுகள், புதிய பணக்காரர்கள் இப்படி தற்போதைய நடைமுறைகளை அக்கவிதைகள் காட்டி நின்றன. இவற்றை பிரசுரத்துக்காக எங்கு அனுப்பினீர்கள் என கேட்டேன்.

இதுவரை எங்கும் அனுப்பவில்லை என்று பதில் கூறினார். ஏன் பத்திரிகைக்கு அனுப்பவில்லை என நான் கேட்டேன். இதனைப் பார்ப்பவர்கள் என்ன சொல்லுவார்களோ என்ற பயம்தான் என கூறினார். அவர்கள் பயப்படுவதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது.

ஒரு பெண் சில விடயங்கள் பற்றி எழுதும் போது குறித்த பெண் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைத்தான் இவ்வாறு பகிர்ந்து கொள்கிறார் என்ற எண்ணம் பார்ப்போரிடையே தோன்றும்.

அதில் வரும் விடயங்களை உண்மையாக இப்படி நடக்கிறது தானே என்பதற்கு முதல் எழுதியவரைப் பற்றி ஆராய்ச்சி நடக்கும். இது வழமை. ஒருவன் கவிதை எழுதுகிறான் என்றால் அது அவன் சுய வாழ்வை அல்ல என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். ஒருவேளை அது அவர்களது சுய வாழ்வில் கிடைத்த அனுபவங்களாகக் கூட இருக்கலாம்.

ஒவ்வொரு நிலையிலும் தம்மை வைத்து கற்பனை வடிவத்தில் வருவதுதான் கவிதை, கட்டுரைகள். தாம் பெற்ற அனுபவங்களின் ஊற்றுதான் இவை.

நம் அன்றாட வாழ்வில் கண்ணால் காண்பவை, தினமும் நடப்பவை இவற்றின் அடிப்படையில் வருவதுதான் ஆக்கங்கள் என்பது உணரப்படவேண்டும். சிலர் நாம் எழுதுவதை ஏன் இப்படி எழுதுகிறா ஏன் அப்படி எழுதுகிறா என விமர்சிக்கத்தான் செய்வார்கள். அதனை கேட்டு தம் திறமைகளை வெளிக்கொண்டுவராது இருப்பது முட்டாள்தனம். இந்த சமூகத்தினர் ஒரு பெண் புதிதாக மணமுடித்துப் போனவுடன் இந்த கணவன் வீட்டில் நல்லது ஏதாவது நடந்தால் இவள் மகா லட்சுமி மாதிரி வந்த நேரம் என்பர்.

அதே நேரம் வியாபாரத்தில் நட்டம் அல்லது ஏதாவது கெட்டது நடந்தால் இந்த தரித்திரம் இந்த வீட்டில் கால் வைத்த நேரம் என்பர். இப்போது இந்த மகா லட்சுமி தரித்திரம் ஆனது எவ்வாறு? நாக்கு என்பது நரம்பற்ற ஓர் உறுப்பு. இவர்கள் பேசுவதற்கு ஏற்ப அது வளைந்து கொடுக்கும். அவர்கள் பேசுகிறார்கள். அவர்கள் அப்படி சொல்லுகிறார்கள் என இருந்தால் உங்களுக்குள் இருக்கும் திறமைகள் முடக்கப்பட்டு விடும்.



-ஊர்சிட்டு


நீங்கள் எழுதுவதைப் பார்த்து அலட்சியம் செய்வார்கள். ஏன் தம்மால் முடியாது அவர்கள் எழுதுகிறார்கள். அவர்களுக்கு ஊக்கம் கொடுப்போம் என சிந்திக்க மாட்டார்கள். நாம் எம் திறமைகளை வெளியில் கொண்டு வருவோம். உங்கள் மேல் நீங்கள் நம்பிக்கை வையுங்கள். என்னால் எழுத முடியும். நான் எழுதுவது சரி என்ற நம்பிக்கையை உங்கள் மீது வைத்தால் போதும். பிறர் இப்படி சொல்லுகிறார்கள் அதை எப்படி எழுதுவது என்று யோசிக்க வேண்டாம். உங்கள் ஆக்கங்கள் தரமானவையா என்பதைப் பிரசுரம் செய்வோர் முடிவு செய்யட்டும். உயர்த்திவிடு. நீ உயர்ந்திடுவாய். பெண்ணே நீ விழித்தெழு.

# தீர்வு கிடைத்தால் கூட்டமைப்பு அரசியல் நடத்த முடியாதாம்

## டக்ளஸின் காலங்கடந்த கண்டுபிடிப்பு இது



கூட்டமைப்பை அரசு எவ்வாறு ஏமாற்றுகிறது என்பதை மக்கள் நன்குணர்வர். எமது கட்சி முன்வைக்கும் எந்த ஒரு தீர்மானத்தையும் ஏற்றுக் கொள் ளாத வகையில் தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டு வருகிறது இன்றைய அரசு .



எருவில்,பெப்.18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்காமைக்கு காரணம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைத்துவிடும்; கிடைத்தால் கூட்டமைப்பினரால் அரசியல் நடத்த முடியாது போய்விடும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புதிய ஒரு கண்டுபிடிப்பைக் கூறி வருகிறார் என்று கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, பண்டாரியாவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசுடன் ஒட்டிக்கொண்டு அரசியல் நடத்தும் தமிழ் அரசியல்வாதிகள் விமர்சிக்கின்றார்கள். அண்மையில் மட்டக்களப்புக்கு கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக 30வருடங்களுக்குப்பின்புவருகைதந்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை விமர்சித்துப் பேசியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசும் பேசி எடுக்கும் தீர்மானத்தை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தெரியப்படுத்துவது என்று முடிவெடுத்தோம். ஆனால் அரசு ஒரு நாளைக்கு ஒரு கதையினைக்கூறிக்கொண்டு காலத்தை இழுத்தடித்து வருகிறது. இந்த விடயம் இதுவரைக்கும் அமைச்சருக்கு தெரியாமல் இருப்பது கவலையளிக்கின்றது.

கடந்த காலங்களில் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்று பேசிய டக்ளஸினால் அதனை ஏற்படுத்திக் கொடுக்க முடியவில்லைஎ்டதுதான் உண்மை. இதைவிடுத்து வெறும் பசப்பு வார்த்தைகளினால் கூட்டமைப்பினரை விமர்சிப்பதற்கு இவ்வாறான அமைச்சர்களுக்கு அருகதை ஏதும் இல்லை.

அரசானது எந்தளவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ஏமாற்றுகின்றது என்பதை தமிழ் மக்கள் நன்கு உணர்ந்தவர்கள். எமது கட்சி முன்வைக்கும் எந்த ஒரு தீர்மானத்தையும் ஏற்றுக்கொள்ளாத வகையில் தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டு வருகிறது இன்றைய அரசு . எனவே தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாகச் செயற்படுவதன் மூலமே எமது நிரந்தரத் தீர்வைப் பெறமுடியும்- என்றார். (ஒ-ச-31)

# 5 லட்சம் குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் நிவாரணம்

கொழும்பு,பெப்.18

மின்சாரம் இல்லாத அனைத்து வீடுகளுக்கும் மாதமொன்றுக்கு 200 ரூபா பெறுமதியான மண்ணெண்ணெய் நிவாரணத்தை பெற்றுக்கொடுக்க அரசு எடுத்துள்ள தீர்மானத்துக்கமைய நாட்டின் தோட்டப்புறங்கள் உள்ளிட்ட சுமார் ஐந்து லட்சம் குடும்பங்களுக்கு தற்போது இந்த நிவாரண உரிமை கிடைத்துள்ளது என்று சமுர்த்தி ஆணையாளர் திணைக்களப் பணிப்பாளர் சந்திரா விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

25 மாவட்டங்களில் 330 பிரதேச செயலகப் பிரிவுகளை முன்னிறுத்தி மண்ணெண்ணெய் நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கும் இந்த வேலைத் திட்டம் நாளை முதல் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்படும்.

மண்ணெண்ணெய் நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதற்காக அரசுக்கு மாதாந்தம் 80 மில்லியனுக்கும் மேற்பட்ட நிதி செலவாவதுடன் இது எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட பின்னர் மாதத்துக்கு செலவிடப்படும் 6 லீற்றர் மண்ணெண்ணெய்க்கு மேலதிகமாக செலவிடப்படும் நிதிக்கு சமமான நிவாரணமாக அமைந்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் நாட்டின் மின்சாரமற்ற அனைத்து வீடுகளுக்கும் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த மண்ணெண்ணெய் நிவாரணம்அனைத்துப் பிரதேச செயலக அலுவலகங்கள் ஊடாக பெற்றுக் கொடுப்பதற்கு சமுர்த்தி ஆணையாளர் நாயக அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவற்றுக்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன.

சமுர்த்தி பயனாளிகளுக்கு மட்டுமின்றி மின்சார வசதி இல்லாத அனைத்துக் குடும்பங்களும் கிராம சேவகரின் சான்றிதழுடன் பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரியூடாக இந்த நிவாரண அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த அட்டையை பிரதேச பலநோக்கு கூட்டுறவு நிலையம் அல்லது பிரதேச செயலாளரினால் அனுமதி அளிக்கப்படும் விற்பனைப் பிரதிநிதிகளின் விற்பனை நிலையங்களில் காண்பித்துக குறித்த நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்- என்றார். (ச-60)

## தீர்வு கிடைக்கும்வரை தொழிலுக்குச் செல்வதில்லை

கொழும்பு,பெப்.18

அரசு எரிபொருள் விலையேற்றத்துக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வரை கடற்றொழிலுக்கு செல்வதில்லை என்று நீர்கொழும்பு கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தவிடயம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசி ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்ளவுள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

இந்தத் தீர்மானத்துக்கு சிலாபம் கடற்றொழிலாளர் கூட்டமைப்பு ஆதரவை வழங்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# உலக சந்தையில் விலை குறைந்தால் எரிபொருள் விலையைக் குறைப்போம்

### அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா கூறுகிறார்

கொழும்பு,பெப்.18

உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்தால் மட்டுமே, இலங்கையிலும் எரிபொருள் விலையைக் குறைப்போம் என்று அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார். ஏற்கனவே, உலக சந்தையில் எரி பொருளின் விலை குறைவடைந்த பல சந்தர்ப்பங்களில் அவற்றின் விலையைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுத்துள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

உலக சந்தையில் எரிபொருள் விலையேற்றம் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருப்பதாலேயே இலங்கையிலும் எரிபொருள் விலையை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வதும் குறைவடைவதும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப அவ்வப்போது இடம்பெறுகின்றன. அதற்கு அமைய நாமும் எரிபொருளின் விலையை கூட்டியும் குறைத்தும் வருகின்றோம்.

உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைந்த வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நாமும் அதன் விலையை குறைத்து அதன் நன்மைகளை ஏற்கனவே மக்களுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



எரிபொருள் விலை, மின் கட்டணம் மற்றும் பஸ் கட்டணம் என்பவற்றை உடன் குறைக்குமாறு அரசை வலியுறுத்தி மக்கள் விடுதலை முன்னணி நேற்று வெள்ளிக்கிழமை புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஜே.வி.பியினர் துண்டு பிரசுரங்களை விநியோகித்தனர். இந்த நிகழ்வில் கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, பிரதான செயலாளர் ரில்வின் சில்வா உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# எரிபொருள் விலையேற்றம் அரசுக்கு கவலையாம்

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு,பெப்.18

அரசு விருப்பத்துடன் பொருள்கள், சேவைகளுக்காக விலைகளை உயர்த்தவில்லை என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்படும் பிரச்சினைகளினால் இவ்வாறான தீர்மானங்களை எடுக்க நேரிட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் எந்த விடயத்தையும் விமர்சனம் செய்கின்றன. பொறுப்பு வாய்ந்த அரசு என்ற ரீதியில் பல்வேறு சவால்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

இதேவேளை, எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டமை அரசுக்கு மகிழ்ச்சியில்லை என்று அவர் தெரிவித்தார். (ச)

## குழந்தை பரிதாபச் சாவு

கொழும்பு,பெப்.18

மொனராகலை - ரதலியெத்த - இங்கினியாகொட பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற ட்ராக்டர் ஒன்றில் குழந்தை மோதி உயிரிழந்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற இந்த விபத்தில் இரண்டு வயதுக் குழந்தையே உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் டிராக்டர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பிபில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# ராஜீவ்காந்தி படுகொலை; அமெரிக்காவுக்கும் தொடர்பு

### அமைச்சர் விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.18

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைச் சம்பவத்துடன் அமெரிக்காவுக்கு தொடர்பு இருப்பதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் முட்டாள் தனமான தீர்மானங்களை எடுத்திருக்கமாட்டார்.

புலிகளின் தலைவர் ராஜீவை படுகொலை செய்வதன் மூலம் ஏற்படக் கூடிய பாதக நிலைமைகள் குறித்து கவனம் செலுத்தாமல் இருந்திருக்க முடியாது.

பிரபாகரனுக்குத் தெரியாமல் தமிழகத்தில் இருந்த தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அமெரிக்க உளவுப் பிரிவு, ராஜீவை படுகொலை செய்யும் ஒப்பந்தத்தை ஒப்படைத்திருக்க வேண்டும்.

காந்தி குடும்பத்தினர் இந்தியாவை ஆட்சி செய்யும் வரையில் தெற்காசிய பிராந்திய வலயத்தில் ஆளுமை செலுத்த முடியாது என்பதனை அமெரிக்கர்கள் உணர்ந்திருந்தனர் -என்றார்.

1991 ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி தமிழகத்தின் சிறிபெரம்பத்தூர் பகுதியில் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்ட ராஜீவ்காந்தி,தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## ஜெனிவா எதிர் புதுக்குடியிருப்பு

இந்த மாதம் 27ஆம் திகதி ஜெனிவாவில் இலங்கைக் அரசு உலக நாடுகளால் நெருக்கடியை எதிர்கொள்ளவுள்ளது. இலங்கை நாட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவே சில நல்ல பரிந்துரைகளைச் செய்துள்ளதால் அவற்றை நடைமுறைப்படுத்தும்படி அரசுக்கு அழுத்தம் கொடுப்பதே உலக நாடுகளின் ஜெனிவா நோக்கம். எனவே மார்ச் மாதம் 24ஆம் திகதி வரை நடக்க இருக்கும் ஜெனிவா களம் அரசுக்கு ஒரு விசப்பரீட்சைக் களம் என்ற எதிர்பார்ப்புப் பரவலாக இருக்கிறது.

அதேகாலப்பகுதி அரசின் எதிர்த் தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பரீட்சைக் காலமாக இருக்கப்போகிறது. முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளுக்கான தேர்தலே அந்தப் பரீட்சைக் களம்.

இந்தப் பரீட்சையை எதிர்கொள்வதற்கான ஆயத்தங்களில் கூட்டமைப்பு மெல்ல மெல்ல இறங்கியிருப்பதாகத் தெரிகிறது. நேற்றுமுன்தினம் வவுனியாவிலும் நேற்று கிளிநொச்சியிலும் கூட்டமைப்பின் அரசியல் கருத்தரங்குகளை நடத்தியிருக்கிறது. இத்தகைய முயற்சிகள் தொடரும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் கருத்தரங்குகளில் கலந்துகொள்ளும் கட்சிகளின் ஆதரவாளர்கள், குறிப்பாக தமிழரசுக் கட்சி தவிர்ந்த கட்சிகளின் ஆதரவாளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை வலியுறுத்துகிறார்கள். தற்போது கூட்டமைப்பில் உள்ள 5 கட்சிகளும் கடைசிவரை ஒற்றுமையுடன் தொடர வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு; வலியுறுத்தல்.

இந்த முக்கிய சவாலுடனேயே எதிர்வரவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை கூட்டமைப்பு சந்திக்கவுள்ளது.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலிலும் உள்ளூராட்சித் தேர்தலிலும் வெற்றி பெற்ற பின்னர் – அரசுடன் இதுவரை நடத்திய பேச்சுக்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் இல்லை, காணாமல்போன மக்கள் தொடர்பில் உருப்படியான தகவல்கள் இல்லை, அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாமை, காணி அபகரிப்புக்களைத் தடுத்து நிறுத்த முடியாமை, இராணுவத்தை அகற்ற முடியாமை போன்ற பல முடியாமைகளை முன்பாக வைத்துக் கொண்டே கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் களம் இறங்குகிறது.

இந்தத் தேர்தலில் அரச தரப்பு வெற்றி பெற்றால் அது ஜெனிவாவில் அரச தரப்புக்குக் கிடைக்கும் அழுத்தத்தில் இருந்து அதற்கு விடுதலை வாங்கிக் கொடுத்துவிடும் என்று கூட்டமைப்புக் கூறுகிறது. எனவே கடந்த தேர்தல்களைப் போன்றே தமிழ் மக்கள் தமது ஒற்றுமையை உணர்த்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்த முறையும் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்பதே கூட்டமைப்பின் கோரிக்கை.

காலத்தின் தேவை அறிந்து தமிழ்க் கட்சிகள் ஐந்தின் தலைவர்களும் தமது ஒற்றுமையை இப்போது எப்படி வெளிப்படுத்தி நிற்கிறார்களோ அப்படியே தமிழர்களும் தமது ஒற்றுமையை உலகுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வலியுறுத்துகிறார்.

இந்தக் கருத்துக்கள், இரு பிரதேச சபைகளையும் கூட்டமைப்பு இழந்துவிடாமல் இருப்பதற்கான அதன் தேவைகளை வெளிப்படுத்துகின்றன. எனினும் தமிழ்த் தேசியம் பற்றிய கோஷமும் தமிழர்கள் மீது அரசு புரிந்த கொடூரங்களும் மட்டும் இனிவரும் தேர்தல்களில் கூட்டமைப்பின் வெற்றிக்குப் போதுமானவையாகத் தெரியவில்லை. களத்தில் என்ன செய்கிறார்கள் என்பதும் முக்கியம். எனவே மார்ச் மாதம் அரசுக்கு ஜெனிவாவும் கூட்டமைப்புக்கு புதுக்குடியிருப்பும் உண்மையான பரீட்சைக் களங்களே.

# மாலைதீவு ஜனாதிபதியிடமிருந்து மஹிந்தர் கற்கவேண்டிய பாடம்

லங்காதீப சிங்களப் பத்திரிகையில் கரு ஜயசூரிய எழுதி வெளியான கட்டுரையின் தமிழ் மொழியாக்கம்

**வீ.எஸ்.ரி.**

> “நாட்டில் ஊழல்கள் மலிந்தாலும் தாம் எப்படியாவது தமது அதிகாரத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பதே இந்த ஆட்சியாளர்களின் ஒரே குறிக்கோள். இதனால் அவர்கள் நாளுக்கு நாள் பொது மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்து வருகின்றனர்.

அதிகாரம் ஊழலுக்கு ஒரு காரணமாகிறது. அளவுக்கு மிஞ்சிய அதிகாரம் அதிக ஊழலுக்கு வழிவகுக்கிறது'' என்பது முதுமொழி. ஆயினும் அதன் அர்த்தத்தை பயன்பாட்டு ரீதியில் எமது தனிபட்ட வாழ்க்கையிலும் சரி, சமூக மற்றும் அரசியல் ரீதியிலான செயற்பாடுகளிலும் சரி எம்மால் முறைப்படி கைக்கொள்ள இயலாதுள்ளது என்பதே யதார்த்தம். அதேபோன்று அதிகாரம் நிலையற்றது என்பதும், தொடர்ந்தும் அதிகாரத்தை தம் வசம் தக்க வைத்திருக்க மேற்கொள்ளும் முயற்சி குறிப்பிட்ட தரப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்பதும் யதார்த்தமே.

இந்த யதார்த்த உண்மையைச் சரியாக உணர்ந்து கொள்ளாத சிரிய நாட்டு ஜனாதிபதி அல் அஸாத் 'ஹோம்ஸ்' நகரில் தமது நாட்டுப் பொதுமக்களையே பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தி அவர்கள் மீதே குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறார்.

டுனீஷியா நாட்டுப் பொது மக்கள் தமது ஆட்சியாளர்களுக்கு எதிராக வீதியில் இறங்கி எதிர்ப்புப் போராட்டங்களை ஆரம்பித்தனர். லிபியப் புரட்சிக்குத் தலைமை தாங்கி வென்றெடுத்த ஜனாதிபதி முகம்மத் கடாபி, தமக்கு ஒரு போதும் பென் அலி, முபாரக், அப்துல்லா சலா போன்ற அரசுத் தலைவர்களுக்கு ஏற்பட்ட கதி ஏற்படும் என்று எண்ணியிருக்கவில்லை.

இதனாலேயே தமது ஆட்சிக்கு எதிராக போராட்டம் நடத்தியோர் மீது அவர் கடும் அடக்கு முறையைப் பயன்படுத்தினார். பென்காஸி நகரில் தமது போராட்டதை ஆரம்பித்த எதிர்ப்பாளர்கள் கடைசியில் திரிப்போலி நகரத்தையும் கைப்பற்றினர். கடாபி தமது சொந்த ஊரான சர்ட் நகருக்குத் தப்பியோடி மறைந்து கொண்டார். கடைசியில் அவர் தமது சொந்த ஊர் மக்களாலேயே கைவிடப்பட்டு, தமது சொந்த நாட்டு மக்களின் கைகளாலேயே மரணத்தைத் தழுவினார்.

கடாபிக்கு ஏற்பட்ட துரதிஷ்ட முடிவிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளாத சிரிய நாட்டு ஜனாதிபதி அல் அஸாத், தமது நாட்டுப் பொது மக்கள் மீது படுகொலைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளார். இதன் மூலம் சில வேளை அவரால் மக்கள் கிளர்ச்சிகளை அடக்கி விட முடியக்கூடும். அல்லது சில வேளை மக்கள் சக்திக்கு முகம் கொடுக்க இயலாது நாட்டை விட்டுத் தப்பியோட வேண்டியும் நேரலாம். இவை போலன்றி சில வேளை முகம்மது கடாபிக்கு நேர்ந்தமை போன்று இவரது முடிவும் பயங்கரமானதாக அமையக்கூடும்.

லிபியாவில் புரட்சிக்காரர்களுக்கு மேற்குலக நாடுகள் பின்னணியில் உதவி ஒத்தாசை வழங்கிச் செயற்பட்டன. ஆனால் சிரியாவுக்கு ஆதாரவாக ரஷ்யாவும், சீனாவும் இருப்பதால் மேற்குலக நாடுகளால் சிரிய ஜனாதிபதிக்கு எதிராக நேரடித் தலையீடு எதனையும் மேற்கொள்ள இயலாது. ஆயினும் சிரிய ஜனாதிபதி தமக்கெதிரான மக்கள் கிளர்ச்சியில் வென்றாலும் சரி தோற்றாலும் சரி, சிரிய நாடு கடைசியில் பிளவுபட்ட, குழம்பிப்போன, பொருளாதார நலிவு கண்ட நாடாக மாறப்போவது உண்மை.

ஜனாதிபதி அல் அஸாத்தால் தமது பதவியில் மேலும் சில காலம் நீடித்திருக்க வாய்ப்புக் கிட்டக்கூடும். ஆனால் நாடு எப்படிப்பட்ட மோசமான சரிவை எதிர்கொள்ள நேரிடும் என்று எதிர்வுகூற முடியாது.

மாலைதீவு ஜனாதிபதி மொகமட் நஷீட் கூட தமது பதவியைத் துறப்பதற்கு முன்னர் சிலவேளை இவை குறித்துச் சிந்தித்திருக்கக் கூடும்.

உலகெங்கும் நிலைமை இப்படிப் போய்க் கொண்டிருக்கும்போது எமது நாட்டிலும் ஜனநாயக ஆட்சித் தலைவர்கள் இதுபற்றிச் சிந்திக்க முன்வராமை துரதிஷ்டமே.

நாட்டில் ஊழல்கள் மலிந்தாலும் தாம் எப்படியாவது தமது அதிகாரத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளவேண்டும் என்பதே இந்த ஆட்சியாளர்களின் ஒரே குறிக்கோள். இதனால் அவர்கள் நாளுக்கு நாள் பொதுமக்கள் மத்தியில் சொல்வாக்கு இழந்து வருகின்றனர்.

1970ஆம் ஆண்டில் கூட்டு முன்னணி அமைத்து அதிகாரத்தைக் கைப்பற்றிய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தம்மால் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்க இயலுமென நம்பினார். இதனால் கொல்வின் ஆர்.டி.சில்வா, மற்றும் என்.எம்.பெரேரா போன்ற இடதுசாரித் தலைவர்களின் உதவியுடன் நாடாளுமன்றத்தின் ஆயுள்காலத்தை ஐந்து வருடங்களிலிருந்து ஏழு வருடங்களாக நீடித்தார்.

இத்தகைய முறையற்ற நடவடிக்கை காரணமாகவே 1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சி படுதோல்வியடைந்தது. போயும் போயும் நாட்டின் பிரதான எதிர்க்கட்சி என்ற கௌரவத்தைக் கூட சுதந்திரக் கட்சியால் பெற இயலாது போயிற்று. இவை யாவும் வரலாறு எமக்குக் கற்றுத் தரும் அரசியல் பாடங்களாகும்.

ஆனால் கடந்த கால அனுபவங்களைப் போன்று தற்கால அனுபவங்களையும் கணக்கில் எடுக்காது செயற்படும் தலைவர்கள் நாட்டுக்கு மட்டுமன்றி, தாம் தலைமை தாங்கும் கட்சிகளுக்கும் கூட நாசத்தையே ஏற்படுத்துகின்றனர்.

பௌத்த மதத்தின் முக்கிய மூன்று அடிப்படைக் கோட்பாடு மூலமாவது இவர்கள் அரசியல் நிலையாமை குறித்து உணர்ந்து கொள்ளலாம். அதேபோன்று அதிகார பலம், மற்றும் அதிகாரப் போட்டிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சந்தர்ப்ப சூழ்நிலையில் மேற்குறித்த பௌத்த மதக் கோட்பாடுகளின் உண்மை அர்த்தத்தைப் புரிந்துகொண்டு செயற்பட்டால் அழிவுகளைத் தவிர்க்கலாம்.

பௌத்த மதக்கோட்பாடுகளின் அடிப்படையில் அதிகாரத்திலிருப்போர் செயற்படாவிட்டால் அவர்கள் தாராளமய ஜனநாயக வழியில் செயற்படுதல் நன்மை பயக்கும்.

உண்மையில் மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி தமக்கேற்பட்ட சிக்கலை இத்தகைய தாராளமய சிந்தனையுடனேயே அணுகிச் செயற்பட்டுள்ளார் எனக் கொள்ளமுடியும். பென் அலி, கடாபி, அப்துல் சலா, முபாரக் ஆகியோரும் இத்தகைய தராளமய ஜனநாயகவாத நடைமுறைக்கமையச் செயற்பட்டிருப்பார்களாயின் அவர்களுக்கும் இத்தகைய துர்ப்பாக்கிய முடிவு ஏற்பட்டிருக்காது.

ஒரு முறையான ஜனநாயகவாத அடிப்படையிலான நல்லாட்சிக்கான அடிப்படை பிரதிக்ஞையாக ஐ.நா சபையின் மனித உரிமைகள் பிரகடனத்தை உதாரணமாகக் கொள்ளலாம். போரட்டங்கள், பொது மக்கள் ஆட்சிக்கு எதிராகச் செயற்படல், குழப்பம் விளைவித்தல் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்ள அரசுகள், மற்றும் ஆட்சியாளர்கள் மேற்கெள்ள வேண்டிய நிர்வாகம் குறித்த தெளிவான விளக்கங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பொது மக்களுக்கு தமது வாழ்க்கையின் குறைநிறைகள், அடக்குமுறைகள், விருப்புகள் குறித்துக் கருத்து வெளியிடும் சுதந்திரம் மறுக்கப்பட்டால் அவர்கள் தமது ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராட முயற்சிப்பார்கள் என்று ஐ.நா. சாசனம் கூறுகிறது.

சில வேளைகளில் அரசுக்கு எதிரான புரட்சியாக இது பரவி அந்த அரசையே பதவியிலிருந்து அகற்றும் முயற்சியாகவும் பரிணமிக்கக்கூடும். அந்த வேளையில் ஆட்சியாளர்கள் மிலேச்சத்தனமான அடக்குமுறையூடாக கிளர்ச்சிகளை அடக்கி ஒடுக்க முயலும் நிலை உருவாகிறது. அவ்வித நிலை உருவாவதை தவிர்ப்பது ஆட்சியாளர்களின் கடமை எனவும், அந்த வகையில் நாட்டு மக்களின் மனித உரிமைகள் மீறப்படாது நிர்வகிக்கும் சட்ட திட்ட விதிகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும் ஐ.நா. விதந்துரைக்கிறது.

சட்டத்தின் ஊடாகத் தண்டனை வழங்குவதால் பொது மக்கள் சட்டத்துக்கு மதிப்பளிக்கப் போவதில்லை. சட்டத்தின் ஊடாக பொதுமக்கள் சுதந்திரம், கௌரவம் பாதுகாக்கப்படும் போதும் அவர்களின் தேவைகள் நிறைவேற்றப்படும் போதுமே அவர்கள் சட்டத்தை மதிப்பார்கள். அத்தகைய ஒரு நிலையிலேயே மனித உரிமைகள் மதிப்பளிக்கப்படும்.

மாலைதீவின் ஜனாதிபதி புரிந்து கொண்ட, அரபு உலகத் தலைவர்கள் புரிந்து கொள்ளாத பாடம் அது.

எமது நாட்டுத் தலைவர்களும் இந்தப் பாடத்தைச் சரியாக கிரகித்து உணர்ந்து தமது இருப்பையும் நாட்டின் உறுதியையும் பாதுகாக்க முன் வருவார்கள் என எதிர்பார்க்கலாமா?


# ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு இறுக்கமான 'ஆப்பு' காத்திருக்கிறது

## நிலைமையை சமாளிக்க பீரிஸ் தலைமையிலான குழு

தொகுப்பு: கோகுலன்

நேற்று சண்டே ரைம்ஸ் எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி





> "நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையைச் செயல்படுத்துவது மற்றும் இறுதிக்கட்டப் போர் நிகழ்வுகள் தொடர்பான பொறுப்புக் கூறும் விடயங்களை ஆராய்வது என்பவை குறித்து வலுவான வாக்குறுதிகளை வழங்குமாறு வற்புறுத்தினார்கள்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்கு தனது பிரதிபலிப்பை வெளியிடுவதற்கு ஐ.தே.கட்சி இரண்டு மாதங்களை எடுத்துக் கொண்டுவிட்ட போதிலும் சில குறிப்பிடத்தக்க அம்சங்களை அது சுட்டிக் காட்டியிருக்கின்றது. இறுதிப் போரில் இறந்தவர்களின் எண்ணிக்கை, காயமடைந்தவர்கள், உதவி தேவைப்படுகிறவர்கள் போன்ற விடயங்கள் இன்னமும் முறையாகக் கணிப்பீடு செய்யப்பட வேண்டியவையாய் உள்ளன என்று அது வலியுறுத்தியுள்ளது. முகாம்களில் எவ்வளவு பேர் தங்க வைக்கப்பட வேண்டியிருப்பார்கள், போர் சூனியப் பகுதிகளில் எவ்வளவு பேர் சிக்கிவிடுவார்கள் என்பதையெல்லாம் அரசு முன் கூட்டியே கணிப்பிடாமல் போனதற்கான காரணங்களைக் கண்டறியநல்லிணக்கஆணைக் குழு போதுமான அளவு விசாரணைகளை மேற்கொள்ளவில்லையென்றும் ஐ.தே.க. குற்றஞ்சாட்டியுள்ளது. நாட்டின் முக்கிய எதிர்க்கட்சியொன்று இவ்வாறு மிக முக்கிய இரண்டு விடயங்களைக் கிளப்பியிருப்பது கவனத்துக்குரியது.

முதலாவது, இறந்தவர்கள் அல்லது காயமடைந்தவர்கள் தொடர்பாக தெளிவில்லாத நிலை, இரண்டாவது, இறுதிப்போரின் போது போர் ஓய்ந்த பிரதேசங்களில் சிக்கிப் போயிருந்த மக்களின் எண்ணிக்கை தெரியாமல் இருந்தமை. இவை ஆணைக்குழு ஆராய்ந்திருக்க வேண்டிய முக்கியமானதும், உண்மையாகக் கண்டுபிடிக்க வேண்டியவையுமான அம்சங்களாகும் என்று ஐ.தே.க. அறிவித்துள்ளது. ஜனநாயக நிறுவனங்கள் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருப்பதை ஆணைக்குழு அங்கீகரித்திருப்பதை ஐ.தே.க. பாராட்டியுள்ள போதிலும் அதன் அறிக்கை அரசுக்கு கலக்கம் தருவதாகவே அமைந்தது.

இன்னும் ஒருவாரத்தில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபை கூடவிருக்கும் நிலையில், ஐ.தே.க. கிளப்பியுள்ள இரண்டு விடயங்களும் கவனம் செலுத்தப்பட வேண்டியிருக்கும் முக்கிய இரு விடயங்களாகும். இத்துடன் இலங்கையின் செயற்பாடுகள் தொடர்பான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர்குழுவின் அறிக்கையும் இருக்கின்றது. இந்த நிபுணர் குழுவினால் முன்வைக்கப்பட்ட பல விடயங்களுக்கு ஆணைக்குழு விடையளிக்கத் தவறியுள்ளது என்று ஐ.தே.க. குற்றஞ்சாட்டியுள்ளது. மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக் கூறும் விடயங்களை நல்லிணக்க ஆணைக்குழு பார்த்துக் கொள்ளும் என்ற வகையில் அரசு ஒரு நிலைப்பாட்டை எடுத்திருந்தமையை அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கை தொடர்பாக குற்றச்சாட்டுக்களை கிளப்புகிறவர்களுக்கு ஐ.தே.க.வின் அறிக்கை வாய்க்கு அவல் கிடைத்தது போல் இருக்கும் எனலாம். காலம் தாழ்த்தியாகிலும் அக்கட்சி தனது நிலைப்பாட்டை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், ஐ.தே.க. தனது அறிக்கையை வெளியிடுவதற்கு வெகு முன்னதாகவே இந்தப் பிரச்சினை சர்வதேச மயமாகிவிட்டிருந்தமை தெரிந்ததே.

ஜனாதிபதி ராஜபக்ஷ பாகிஸ்தானிலிருந்து திரும்பியதும் ஏற்கனவே கொழும்பிற்கு வந்திருந்த அமெரிக்க அரசின் இரண்டு முக்கிய பிரமுகர்களுடன் சந்திப்பை மேற்கொள்ளவிருந்தார். இதன் போது ஐ.தே.கட்சியின் அறிக்கை மிகவும் தாக்கம் தருவதாக ஜனாதிபதிக்கு இருந்திருக்கும் என்று சொல்லலாம்.

அமெரிக்க பிரதிநிதிகள் ''இறுக்கமான ஒரு செய்தியை'' வழங்குவதற்கே வந்திருந்தார்கள் என்று வெளியுறவு அமைச்சின் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது. பொது மக்கள் பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான கீழ் நிலை செயலாளர் மரி ஒட்டேரோ மற்றும் மத்திய தென் ஆசிய விவகாரங்களுக்கான ராஜாங்க அமைச்சின் உதவிச் செயலாளர் றொபேர்ட் பிளேக் ஆகியோரே அவ்விருவரும். அவர்கள் நடத்திய பேச்சுக்களின் போது நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையைச் செயல்படுத்துவது மற்றும் இறுதிக் கட்டப் போர் நிகழ்வுகள் தொடர்பான பொறுப்புக் கூறும் விடயங்களை ஆராய்வது என்பவை குறித்து வலுவான வாக்குறுதிகளை வழங்குமாறு வற்புறுத்தினார்கள் என்றும் கூறப்படுகின்றது.

இந்த இரண்டு விடயங்களும் இப்போது செயல்படுத்தப்பட்டு வருவதான ஒரு நிலைப்பாட்டை இலங்கை அரசு வெளிப்படுத்திக் கொண்ட போதிலும் வாக்குறுதி எதுவும் வழங்கப்படவில்லையென்று கூறப்படுகின்றது.

அரசு நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தும் அதே சமயம் மேஜர் ஜெனரல்களின் தலைமையில் சர்வதேச சட்டங்களுக்கு மாறாக பொது மக்கள் தாக்கப்பட்டார்களா என்பது குறித்து விசாரிக்க இரண்டு விசாரணை நீதிமன்றங்கள் நிறுவப்படவிருக்கின்றன.

இந்தச் செயற்பாடு ஏற்கனவே சர்வதேச மட்டத்தில் குறை கூறப்பட்டுள்ளது. இராணுவமே தன்னை விசாரித்துக் கொள்கிறது என்ற அடிப்படையில் அந்தக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது புதிய விடயமல்ல. இராணுவம் தங்கள் அதிகாரிகள் குற்றமிழைத்தால் வழமையாக அவர்கள் விசாரணை நடத்துவார்கள் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறிக்கொள்கின்றன.

ஜெனிவா மனித உரிமை சபையில் பங்கேற்பதற்கான பிரதிநிதிகள் குழுவின் எண்ணிக்கை இப்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. அங்கு எவ்வாறு விடயங்களை முன்வைப்பது என்பது குறித்து அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆணைக் குழுவின் அறிக்கை வெளியாகி இரண்டு மாதங்களே ஆகின்றன.

எனவே பரிந்துரைகளை செயற்படுத்த காலம் போதாமல் இருக்கிறது என்பதை அங்கு விளங்கப்படுத்தும்படி அவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், தலைமையில் அமைச்சரும் ஜனாதிபதியின் மனித உரிமைகள் தொடர்பான சிறப்பு பிரதிநிதியான மகிந்த சமரசிங்க, அமைச்சர்கள் சிறிபாலடி சில்வா, ரவூப் ஹக்கீம், றிஷாட் பதியுதீன், அனுர பிரியதர்ஷனயாப்பா மற்றும் சஜின்வாஸ் குணவர்தன எம்.பி. ஆகியோர் குழுவில் இடம்பெற்றுள்ளார்கள்.

அமெரிக்க உதவி செயலாளர் பிளேக் பின்னர் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் தெரிவித்த விடயங்களில் சில வருமாறு:

இலங்கை அரசு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இதுவரைக்கும் அமுல்படுத்துவதற்கு போதிய அளவு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை வெளிப்படுத்தவும், பொறுப்புக் கூற வேண்டிய விடயங்களில் விரிவான செயல் திட்டமொன்றை முன் வைத்து செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்தவும், நேர்முறையான தீர்மானமொன்றை மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா ஆதரிக்கும். மனித உரிமைகள் சபையிலும், அதற்கு முன்பும்பிறகும்கூட இலங்கை அரசுடன் ஒத்துழைப்புடன் பணியாற்றவும் விரும்புகிறோம். இவை பற்றியும் நல்ல முறையில் விவாதம் நடத்தியுள்ளோம் என்று பிளேக் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான அரசின் பேச்சுகள் தொடர்பாக பிளேக் கூறியதாவது:

இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் வெற்றிகரமாகப் பேச்சுகள் நடைபெற்று வருவதை அமெரிக்கா ஆதரிக்கின்றது. இருதரப்பினருடனும் நாங்கள் நடத்திய பேச்சுக்களிலிருந்து அவர்கள் அதிக தூரம் விலகி நிற்பதாகத் தெரியவில்லை. மீண்டும் பேச்சுகள் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். அதன் மூலம் வெற்றிகரமான முடிவுக்கு வருவார்கள் என்று நம்புகின்றோம். அவ்வாறு ஏதும் இணக்கப்பாடு ஒன்று ஏற்படுமானால் நாடாளுமன்ற தெரிவிக் குழுவிலும் விவாதிக்கப்படலாம்.- என்றார்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை எந்த நாடு முன்மொழியும் என்பது தெரியாமல் உள்ளது. அமெரிக்காவே அதனைச் செய்யும் என்று தான் வெளியுறவு அமைச்சு முன்னர் நினைத்திருந்தது. பின்னர் கனடா செய்யக் கூடும் என்று கருதப்பட்டது. ஆனால் இப்பொழுது கிடைத்துள்ள தகவல்களின் படி வேறு ஒரு நாடுதான் முன்மொழியும் என்று தெரியவருகிறது. அணி சேரா நாடுகளைச் சேர்ந்த ஆபிரிக்க நாடு ஒன்று தீர்மானத்தை முன்மொழியக் கூடும் என்று இப்போது கருதப்படுகின்றது.

மனித உரிமைகள் சபையில் இலங்கை மீதான அழுத்தம் ஏற்படுவதற்கு பல வாரங்கள் முன்பே பல நாடுகள் தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியிருந்தன.

ஐரோப்பிய ஒன்றியம் அதன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றில் இலங்கையில் பொறுப்புக் கூறும் நடவடிக்கைகளுக்கு ஊக்கம் அளிப்பதாகத் தெரிவித்துள்ளதுடன். ஐ.நா.நிபுணர்குழு பரிந்துரைத்துள்ளமைக்கு அமைவாக எல்லாவித குற்றச் செயல்கள் தொடர்பாக ஆராயவும் ஐ.நா. விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளது.

கடந்தவாரம் பிரிட்டிஷ் கொமன்ஸ்சபையில் இலங்கை தொடர்பான விவகாரங்களையும் கவனிக்கும் அமைச்சர் அலிஸ் டயர் பேட் அறிக்கையொன்றை விடுத்த போது நல்லிணக்க ஆணைக்குழு பொறுப்புக் கூறல் தொடர்பாக கண்டுபிடித்துள்ளவைகள் மற்றும் அதன் பரிந்துரைகளில் பிரிட்டன் அரசு ஏமாற்றம் அடைந்துள்ளது. பலர் கருதுவது போல் இதில் பல இடைவெளிகளும் பதில் அளிக்காத கேள்விகளும் நிறையவே உள்ளன.

போரின் இறுதிக் கட்டத்தில் கணிசமான பொது மக்களின் இறப்புகள் ஏற்பட்டிருப்பதை அறிக்கை ஏற்றுக் கொண்டிருப்பதையும் குறிப்பிட்ட சில அம்சங்கள் மேலும் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று கூறியிருப்பதையும் வரவேற்கின்றது என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டிருப்பதான நம்பகமான குற்றச்சாட்டுக்கள் மற்றும் ஐ.நா. நிபுணர் குழு எழுப்பியுள்ள குற்றச்சாட்டுகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான கேள்விகள் எதுவும் பதிலளிக்கப்படாமலிருப்பதை நாம் கவனித்துள்ளோம். ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட வீடியோ காட்சிகள் வெறும் தொழில் நுட்ப விடயங்கள் என்று கூறி ஒதுக்காமல் வெளிப்படையான மாபெரும் ஒழுக்கக் கேடுகள் என்ற முறையில் ஆராயப்பட்டிருக்க வேண்டும். தற்போதைய மனித உரிமை செயற்பாடுகள் தொடர்பாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் நிறைவேற்றப்படும் என்று பிரிட்டிஷ் அரசு நம்புகின்றது. பத்திரிகையாளர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் மற்றும் நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள், காணாமல் போனவர்கள் மற்றும் நிலுவையில் இருக்கும் ஆயிரக்கணக்கான சம்பவங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்படுவதை வரவேற்கின்றோம் என்று தெரிவித்திருந்தார்.

தென்னாபிரிக்க அரசு விடுத்திருந்த அறிக்கையில் மனித உரிமை துஷ்பிரயோகம் தொடர்பாக ஆராய்வதற்கு அதிகாரபூர்வ பொறி அமைப்பொன்று உருவாக்கப்படவிருப்பதை ஆதரித்துள்ளதுடன் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களின் பொறுப்புகள் தொடர்பாக அறிக்கை இன்னும் விரிவாக ஆராய்ந்திருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது. சிபாரிசுகளை விரைவாகச் செயல்படுத்த அது வற்புறுத்தியுள்ளது.

ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் கெவின் ரூத் விடுத்துள்ள நீண்ட அறிக்கையில், குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் விரிவாக வெளிப்படைத் தன்மையுடன் இலங்கை ஆராய வேண்டும். நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அங்கீகரித்து அதன் பரிந்துரைகளை காலக் கெடுவுடன் அமுல்படுத்த இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார். ✱

# தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் பெறும் நாள். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். எதிர்பாராத பணவரவுகளைப் பெற வாய்ப்பு உண்டு. கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்கலாம். பிள்ளைகள் கல்வி விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்:** மதிப்பு, மரியாதைக்கு பாதிப்பு வரும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். உறவினர்கள் சிலரின் செயற்பாடுகளால் கோபம், பதற்றம் அடையலாம். உங்களின் உள்ளக் குமுறல் ஒன்றை மற்றவர்களிடம் கொட்டித் தீர்ப்பீர்கள். உடல் நலம் இல்லாமல் இருக்கும் ஒருவரைப் பார்க்க வெளியூர் செல்லலாம். மனக்குழப்பம் உண்டாகும்.

**மிதுனம்:** வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். உல்லாசமாகப்பேசி சிலரிடம் வம்பில் மாட்டிக் கொள்ளலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். குடும்ப உறுப்பினர்களிடம் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. வெறுப்பு, விரக்தி உண்டாகும்.

**கடகம்:** நேற்று வந்த வரவுகளை இன்று தாராளமாகச் செலவு செய்வீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொலிஸ் தொடர்பான பணியில் இருப்போருக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறலாம். வெளியிடங்களுக்குச் செல்லும்போது, தூரத்து உறவினர் ஒருவரைப் பார்க்கலாம்.

**சிங்கம்:** விருந்து, விசேட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். உங்களின் முயற்சிகளுக்கு சிலர் உறுதுணையாக இருப்பர். குறைந்த அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் பெறலாம். நண்பர்கள் வட்டம் விரிவடையும். குழப்பங்கள் இல்லாமல் எதிலும் தெளிவான முடிவு எடுப்பீர்கள். அனுகூலமான நாள்.

**கன்னி:** உங்களின் திறமையை மற்றவர்களிடம் வெளிப்படுத்த முற்படுவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கலாம். வயிறு தொடர்பான உபாதைகளுக்கு ஆள்படலாம். தெரியாமல் சிலருக்கு வாக்குக் கொடுத்துவிட்டு தவிக்கலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். பிள்ளைகளால் தொல்லைகளுக்கு ஆளாகலாம்.

**துலாம்:** தடை, தாமதங்களுக்குப் பின்னர் வெற்றி காணும் நாள். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரிடலாம். யாரிடமும் குதர்க்கமாகப் பேசுவதை தவிர்க்கவும். மாமன், மைத்துனர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். நன்றி மறந்த ஒருவரை எதிர்பாராமல் சந்திக்க நேரிடலாம். சிலரிடம் கடனாக கொடுத்த பணம் வசூலாகலாம்.

**விருச்சிகம்:** விடா முயற்சிக்கு வெற்றி கிட்டும் நாள். என்றோ சந்திக்க நினைத்த ஒருவரை இன்று சந்திக்க நேரிடலாம். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பெண்கள் வகையில் பெருமைப்படும் வகையிலான உதவி கிடைக்கும். குடும்பத்தினரின் செயற்பாடுகளை நினைத்துப் பெருமைப்படுவீர்கள். திடீர் பணவரவுகளைப் பெறலாம்.

**தனுசு:** ஒருவருக்கு உதவி செய்யப்போய் அது உபத்திரவமாக மாறலாம். நண்பர்கள் சிலரின் விமர்சனங்களுக்கு ஆள்படலாம். அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால் அவதிகளுக்கு ஆள்படலாம். பொழுதுபோக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். தாய் அல்லது பிள்ளைகள் வழியில் செலவு ஏற்படும். வாக்குவாதத்தைத் தவிர்க்கவும்.

**மகரம்:** தந்தை வழியில் மனஸ்தாபம் வராமல் இருக்க, விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். சில விடயங்களில், முன்னெச்சரிக்கையுடன் செயற்படாததன் மூலம் இழப்புகளைச் சந்திக்கலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரை, தொலைபேசியில் தொடர்பு கொண்டுபேச முற்பட்டு அவர்கள் இல்லாமல் போகலாம்.

**கும்பம்:** வீட்டில் வசதி, வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். மற்றவர்கள் மதிக்கும் வகையில் எந்தக் காரியத்தையும் செய்ய நினைப்பீர்கள். உங்களின் கடந்தகால செயற்பாடு ஒன்றை, மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். உங்களுக்கு வேண்டிய காரியம் ஒன்றைச் சாதிக்க மற்றவர்களை நச்சரிப்பீர்கள். விருந்து, விசேடம் உண்டு.

**மீனம்:** சந்தோஷமான, மகிழ்ச்சியான அனுபவங்களைப் பெறலாம். நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பெண்கள் கணவரின் கோபத்துக்கு ஆளாகாமல் இருக்க, விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். சிலர் உங்களுக்கு முக்கியமான விடயங்களில் நல்ல ஆலோசனை சொல்லலாம்.

**நாளை**

மாசி 9 செவ்வாய்க்கிழமை 21.02.2012
திதி: அமாவாசை பி.இ. 04.32 வரை
நட்சத்திரம்: அவிட்டம் பி.இ. 12.47 வரை
சுபநேரம்: 11.01 - 12.31 வரை,
ராகு காலம்: 03.31- 05.01வரை

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | 1 | | | 2 | 7 | |
| 2 | 8 | | 5 | | | 6 | 3 | |
| | 1 | 5 | | 2 | | | 8 | |
| | 7 | | | 6 | | | | |
| 6 | | | 8 | 1 | 2 | | | 9 |
| | | | | 4 | | | 2 | |
| | 3 | | | 5 | | 4 | 1 | |
| | 2 | 1 | | | 7 | | 9 | 8 |
| | 9 | 7 | | | 1 | 3 | | |

சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 1 | 7 | 6 | 5 | 9 | 3 | 2 |
| 2 | 9 | 3 | 4 | 1 | 8 | 6 | 7 | 5 |
| 6 | 7 | 5 | 3 | 9 | 2 | 1 | 4 | 8 |
| 9 | 4 | 8 | 6 | 3 | 7 | 2 | 5 | 1 |
| 5 | 2 | 7 | 8 | 4 | 1 | 3 | 6 | 9 |
| 1 | 3 | 6 | 5 | 2 | 9 | 7 | 8 | 4 |
| 8 | 6 | 9 | 1 | 7 | 4 | 5 | 2 | 3 |
| 3 | 5 | 2 | 9 | 8 | 6 | 4 | 1 | 7 |
| 7 | 1 | 4 | 2 | 5 | 3 | 8 | 9 | 6 |


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
05 ★ 05 ★ 1937



ஆண்டவர் அடியில்
23 ★ 01 ★ 2012

## திருமதி கரல்ட் ராணி றெஜினா

மூன்று முத்துக்களை பெற்றெடுத்த செல்வத் தாயே!
திடீரென எமை விட்டுப் பிரிந்த காரணம் ஏனோ
உன் பிரிவைத் தாங்க முடியாமல் தவிக்கின்றோமம்மா
அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய்
இன்று நாம் சிறக்க வழிகாட்டி நின்றவளே
ஓடி மறைந்ததம்மா 31 நாள்கள்
கண் இமைக்கும் பொழுதெல்லாம்
இனிய உன் சிரிப்பு முகம் – எங்கள்
கண்களில் உலா வருகின்றது
அன்புடனும் பண்புடனும் எம்மைப் பேணிக் காத்து
கல்வி கற்பித்து எம்மையெல்லாம் ஆளாக்கிவிட்டு
நீங்கள் எங்கே சென்றீர்களம்மா?
ஆறவில்லை எம் துயரம் – ஆயிரம்
உறவுகள் இங்கிருந்தும் அம்மா – உங்களுக்கு ஈடாகுமா
மாசுபடா உங்கள் நினைவுதனை நெஞ்சிலே
சுமந்து கொண்டு ஊன் உருகி உளம் நோக வாழ்கின்றோமம்மா!
காலமெல்லாம் பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் காத்த அம்மாவே!
அம்மம்மாவே! - இன்னொரு முறை எம் குடும்பத்தில் வந்து பிறக்க மாட்டீர்களா? எம் தெய்வமே!

120/3, சொலமன் லேன்,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (14779)(45)

இவரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பேரன், மருமகன்மார், உற்றார்,
உறவினர்கள்.


### பாடசாலைக்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள்

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் காரை கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலைக்கு ஒலி பெருக்கிச் சாதனங்கள்வழங்கப்பட்டுள்ளன.

பாலர் பாடசாலையால் மாணவர்களுக்கு மாதாந்தம் கல்வி ஊக்குவிப்புப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்வுகளின் போது பயன்படுத்துவதற்கு வசதியாக் ரூபா 50 ஆயிரம் பெறுமதியான ஒலி பெருக்கிச் சாதனங்களை ஆலய பரிபாலகர் மகாராணி க.சோமசேகரம் பாலர் பாடசாலை நிர்வாகத்திடம் கையளித்துள்ளார்.(வ-250)


# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
முருகேசு கிருஸ்ணசாமி
திதி: 20.02.2012



தோற்றம்
19★10★1942

மறைவு
03★03★2011

ஆணிவேரும் விழுதுகளும் அசையாதிருக்கையில்
ஆலமரம் சாய்ந்து ஆண்டு ஒன்று ஆனதப்பா!
அரைவழியில் சிவபாதம் சென்றீரே - உங்கள்
ஆத்மா சாந்தியடைய அம்பாளை வேண்டுகிறோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தொல்புரம் மத்தி,
சுழிபுரம். (14780) (45-6)





# திருவருள் மிகு ஸ்ரீ சிவ மஹாகாளி அம்பாள் தேவஸ்தானம்

## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2012

அம்பிகை அடியார்களே........

இற்றைக்கு 200 வருடம் பழைமை வாய்ந்த ஆலயத்தில், மங்களகரமாக நிகழும் கர வருடம் மாசி மாதம் 10 ஆம் நாள் (22.02.2012) புதன்கிழமை கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகி மாசி மகத்தில் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 22.02.2012 | புதன் | மு.ப | 10 மணி | கொடியேற்றம் |
| 02.03.2012 | வெள்ளி | இரவு | | திருமஞ்சம் |
| 06.03.2012 | செவ்வாய் | மு.ப | 10 மணி | இரதாரோகணம் |
| 07.03.2012 | புதன் | மு.ப | 10 மணி | தீர்த்தோற்சவம் |
| | | இரவு | | கொடியிறக்கம் |

**இன்று (20.02.2012) திங்கட்கிழமை சிவராத்திரி தினத்தை** முன்னிட்டு இரவு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தில் இருந்து அடியார்கள் நான்கு சாமமும் தீர்த்தக் காவடி எடுத்து வந்து இங்கு வீற்றிருக்கும் காசி ஈஸ்வர லிங்கத்துக்கு தங்கள் கைகளினால் அபிஷேகம் செய்யலாம் ( பால் காவடியும் எடுக்கலாம்) அடியார்கள் அனைவரும் இக்காலத்தில் வருகை தந்து அம்பாளைத் தரிசித்து அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்று பேரின்பப் பெருவாழ்வு வாழ்வீர்களாக

அறங்காவலர் (14441) (45-6)

ஸ்ரீ சிவ மஹாகாளி அம்பாள் தேவஸ்தானம்

# தீர்வுத் திட்டத்தை முன்வைக்க கூட்டமைப்பு ஒத்துழைக்கவும்

## இந்தியா வலியுறுத்துவதாக சிங்களப் பத்திரிகை தகவல்

கொழும்பு,பெப்.20

அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று இந்தியா தெரிவித்துள்ளதாகச் சிங்களப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

தீர்வுத் திட்டம் தொடர்பில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்தியா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழுத்தம் பிரயோகித்து வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைப்பதில் நிலவிவரும் கால தாமதம் இந்தியாவை அதிருப்தி அடையச் செய்துள்ளது என்று சிங்களப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

தீர்வுத் திட்டமொன்றை பெற்றுக்கொள்வது தொடர்பில் பௌத்த மதத் தலைவர்கள் உள்ளிட்ட மதத் தலைவர்கள், வடக்கு அரசியல் தலைவர்களுடன் பேச்சு நடத்துமாறு கூட்டமைப்பை இந்தியா கோரியுள்ளது.

புதுடெல்லிக்கு அழைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இது தொடர்பில் மேலும் பேச்சு நடத்த இந்திய மத்திய அரசு தீர்மானித்துள்ளதாகச் சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ச)

### உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்

## திருத்த முடிவு வரும்வரை காத்திருக்க வேண்டாம்!

கொழும்பு,பெப்.20

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் மீள்திருத்தத்துக்காக விண்ணப்பித்த மாணவர்கள் இந்த முடிவுகளை பெறும் வரை காலதாமதம் செய்யாது பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மீள் திருத்தத்தின் மூலமாக மாணவர்களது பெறுபேறுகளில் மாற்றங்கள் இருக்கும் பட்சத்தில், இந்த மாணவரது விருப்பத்தின் படி பாடநெறி தெரிவில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் நாளை செவ்வாய்க்கிழமை வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கான காலம் நீடிக்கப்படாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு 40,000 இற்கும் அதிகமான விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விண்ணப்ப படிவங்களை நிரப்புவதில் தெளிவின்மை காணப்படுமாயின் மாணவர்கள் எந்தவொரு பல்கலைக் கழகத்துடனும் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற முடியும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச)

## கப்பம்பெற முயன்றோர் கைது

கொழும்பு,பெப்.20

மொரட்டுவையில் வர்த்தகர் ஒருவரை அச்சுறுத்தி கப்பம் பெறமுயன்ற மூன்று பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் குறித்த வர்த்தகரை தொலைபேசியூடாக அச்சுறுத்தல் விடுத்து கப்பம் கோரியுள்ளமை தெரிய வந்துள்ளது.

கப்பத் தொகையில் 35,000 ரூபாவை பெற்று எஞ்சிய பணத்தை பெற்றுக் கொள்ள முயன்றபோது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பயன்படுத்திய ஓட்டோவையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஒருவரை பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ச)




சிங்கள மொழி மூல அல்குர்ஆன் விளக்கவுரை நூல் வெளியீட்டு விழா கடந்த வியாழக்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதமர் டி.எம்.ஜயரத்ன உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## எரிபொருள் விலையேற்றம்; போராட்டம் வெடிக்கும்

### புலனாய்வு பிரிவினர் தகவல்

கொழும்பு,பெப்.20

நாட்டில் அதிகளவில் தொடர் போராட்டங்கள் இடம்பெறக்கூடிய அபாயம் காணப்படுவதாக புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எரிபொருள் விலையேற்றம் மற்றும் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு போராட்டம் நடத்தப்படவுள்ளது.

சிலாபத்தில் நடைபெற்ற மீனவர் போராட்டத்தை விட இந்தப் போராட்டங்கள் மோசமானதாக அமையக் கூடும் என்று புலனாய்வுப் பிரிவினர், பாதுகாப்புத் தரப்புக்கு அறிவித்துள்ளனர்.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி, பொருள்கள் சேவைகளின் விலையேற்றத்துக்கு வழிகோலும். இதனால் மக்கள் கடும் அதிருப்தி அடையக்கூடிய நிலைமை ஏற்படும் என்று புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

## இலங்கை போர் குற்றங்கள் சனல்–4 தொலைக்காட்சியின் மற்றொரு ஆவணப் படம்

கொழும்பு,பெப்.20

பிரிட்டன் சனல் - 4 தொலைக்காட்சி இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்களை வெளிப்படுத்தும் மற்றுமொரு ஆவணப்படம் அடுத்த மாதம் வெளியிடவுள்ளது.

சனல் - 4 தொலைக்காட்சியே இலங்கையின் கொலைக் களங்கள் ஆவணப்படத்தை தயாரித்து வெளியிட்ட ஜோன் சினோ என்ற செய்தி வழங்குனரே இந்த ஆவணப்படத்தையும் வெளியிடவுள்ளார்.

இந்த நிலையில், ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே இந்த ஆவணப்படம் வெளியிடப்படவுள்ளது.

ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக நெருடிக்கடியை ஏற்படுத்தும் வகையிலேயே இந்த ஆவணப்படம் வெளியிடப்படவுள்ளதாக இலங்கை அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சனல்- 4 தொலைக்காட்சி இந்த ஆண்டுக்கான தமது நிகழ்ச்சித் தயாரிப்பு தொடர்பாக வெளியிட்ட தகவலில், இலங்கையின் கொலைக் களங்கள் ஆவணப் படத்தின் இரண்டாவது பாகத்தை புதிய போர்க் குற்ற ஆதாரங்களுடன் வெளியிடப் போவதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## டோகோவில் தங்கியிருந்த இலங்கையர் தாயகம் திரும்பினர்

கனடா செல்வதற்காக டோகோ தீவில் தங்கியிருந்த 33 இலங்கையர்கள் தாய் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். கனடாவில் தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் கூறி சுமார் 269 பேரை ஆபிரிக்க நாடான டோகோவுக்கு நபர் ஒருவர் அனுப்பியுள்ளார்.

இவ்வாறு சென்றவர்கள் அனைவரும் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை கனடா வுக்கு அழைத்துச் செல்வதாக கூறிய குறித்த நபர் டோகோ தீவில் கைவிட்டுச் சென்றுள்ளார். இவ்வாறு மோசடி செய்த பிரதான சந்தேக நபரை கைதுசெய்துள்ளதாக கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## உயர்தரப் பெறுபேற்று முறையீடு நீதியரசரின் கவனத்துக்கு

கொழும்பு,பெப்.20

ஜீ.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் கிடைத்த முறைப்பாடுகளை உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவர் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக ஆணைக் குழுவுக்கு 200 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று ஆணைக் குழுவின் செயலாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

எனினும், அந்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை முடிவுக்குகொண்டு வரும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று நிலுவையில் உள்ளமையே அதற்கு காரணம் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச)

## பொலிஸாருக்கு பதவி உயர்வில்லை

### பாதிக்கப்பட்டோர் ஓய்வு பெறத் தீர்மானம்

கொழும்பு,பெப்.20

இலங்கையில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உரிய முறையில் பதவி உயர்வுகள் வழங்கப்படாத காரணத்தினால் பாதிக்கப்பட்டோர் ஓய்வு பெற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

உரிய தகுதிகளைக் கொண்டிருந்தும் கிரமமான முறையில் தமக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை என்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த 80 ஆயிரம் உத்தியோகத்தர்களுக்கு உரிய முறையில் பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை. இவ்வாறு இழைக்கப்பட்டுள்ள அநீதியால் பொலிஸ் திணைக்களம் மீது அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக, 22 ஆண்டு சேவையை பூர்த்தி செய்த பலர் தமக்கு ஓய்வு வழங்குமாறு பொலிஸ் ஆணைக்குழுவிடம் கோரியுள்ளனர்.

**கடந்த ஆறு ஆண்டுகளில் கடைநிலை உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவில்லை**

2006ஆம் ஆண்டு மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்ட போதிலும், கடந்த ஆறு ஆண்டுகளில் கடைநிலை உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்படவில்லை என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பதவி உயர்வுகள் தொடர்பில் சரியான வழிமுறைகள் பின்பற்றப்படாமையினால் பலர் தொடர்ந்தும் ஒரே பதவியை வகிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## துப்பாக்கிச் சூட்டுக்கு தாமே பொறுப்பு

### பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.20

சிலாபத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியமைக்கு தாமே பொறுப்பு என்று பொலிஸார் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரை கைது செய்து, இரகசிய பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். ஆக்ரோசமாகச் செயற்பட்டவர்களை கட்டுப்படுத்த முடியாத சந்தர்ப்பத்தில் துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டதாக உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

கண்ணீர் புகைக் குண்டுத் தாக்குதல்களால் பலன் கிடைக்காத காரணத்தினால் தற்பாதுகாப்பு நோக்கில் துப்பாக்கிச் சூடு நடத்துமாறு உத்தரவிட்டதாகக் விசாரணைகளில் அவர் தெரிவித்தார். (ச)

## தவறிவிட்டது

16.02.2012 வியாழக்கிழமை அன்று வவுனியாவுக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் ஓட்டோ சாரதி அனுமதிப்பத்திரம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தந்து உதவுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

தொடர்புகட்கு : 077 0503855

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

" உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (அரு.11:25)

அன்னை மடியில் 07 ★ 06 ★ 1947



ஆண்டவன் மடியில் 21 ★ 01 ★ 2012

### தேவசகாயம் நீற்றம்மா

(ராசாத்தி)

தேவசகாயம் நீற்றம்மா (ராசாத்தி)
"கல்லறையில் உன்னை வைத்து
கண்ணீரால் மூடிவிட்டோம்"
நீங்காத நினைவுகளால் நிதமும் கண்ணீரில் நாம்

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று (20.02.2012) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் புனித மரியாள் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இதிலும் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள்,பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார், உறவினர்கள்,

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

## வீதிக்கு மின்விளக்கு

வலி. வடக்கு பிரதேச எல்லைக் குட்பட்ட மல்லாகம் சந்தியிலிருந்து - அளவெட்டி எல்லை ஊடாகச் செல்லும் சங்கானை வல்லை வீதிக்கு மின் விளக்குகள் அண்மையில் பொருத்தப்பட்டுள்ளன. இந்த வீதிக்கான விளக்குகள் மல்லாகம் சந்தியிலிருந்து அளவெட்டி எல்லைப் பகுதியான செபஸ்தியார் ஆலயம் வரை பொருத்தப்பட்டுள்ளன. வலி. வடக்குப் பிரதேச சபையின் அபிவிருத்திப் பணிகளில் இதுவும் ஒன்று என்று பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். இதனால் இரவுவேளை யில்மேற்படி வீதியால் செல்லும் பயணிகள் பெரிதும் பயனடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-36)

## சட்டவிரோதமாக தங்கம் கடத்தியவர் கைது

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குக் கடத்தி வரப்பட்ட 70 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலையில் சிங்கப்பூரிலிருந்து பயணம் செய்த இந்தியர் ஒருவரே இவ்வாறு தங்கத்தை எடுத்து வந்துள்ளார். சட்டவிரோதமாகத் தங்கத்தை எடுத்து வந்த இந்தியர் கட்டுநாயக்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (வ)

Galaxy Cabs
021 - 3201201

### தேவை

எமது நிறுவனத்துக்கு முகாமையாளர் மற்றும் போட்டோகொப்பி இயக்குவர் தேவை.பயிற்சி விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.
STR Multy Center
45அ, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. 077 7570150

### பணிப்பெண் தேவை

மாவிட்டபுரத்தில் வீடொன்றில் வேலை செய்வதற்கு பணிப்பெண் உடனடியாக தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகள் : 077 0367125
071 6962869

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 25 ★ 06 ★ 1921



மறைவு 22 ★ 01 ★ 2012

அமரர்

### பொன்னையா இராசமணி

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் அன்புத்தெய்வம் இராசமணியின் மறைவு கேட்டு எமது துயரில் நேரில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசியினூடாக அனுதாபச்செய்தி தெரிவித்தவர்களுக்கும் இறுதி யாத்திரையில் பங்கு கொண்டவர்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (20.02.2012) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முருகன் ஸ்ரோர்ஸ்,
சிறுப்பிட்டி.

மகன்-
பொ. கனகலிங்கம் (சாமி)


உள்நாடு வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை விஸ்தரிக்கும் முகமாக DHL யாழ்.குடாநாட்டில் நம்பமுடியாத கட்டணங்கள் இப்பொழுது வழங்கப்படுகின்றது...

உள்நாட்டுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை 24 மணிநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

DHL வடமாகாணத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்

5 கிலோவிற்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு
அதிரடி விசேட சலுகை...!
கனடா - 1 kg - 500/= சுவிஸ் - 1 kg - 400/=



திருமுருகன் கொம் நெற்
இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05,திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 2 தொ.பே.:021 222 7835



யாழ் நகரில்!
வாடகைக்கு
கார்கள், வான்கள்
Rent a Car



- சாரதியுடன் வாகனம்
- சாரதியில்லாமல் வாகனம்
- திருமண வைபவங்கள், சுற்றுலாக்களுக்கு
- வெளியூர் பயணங்களுக்கு
- கார், வான், கனரக வாகனங்கள்
- வாராந்த மாதாந்த வாடகைக்கு

K.J Enterprises

105/06, சி.பொன்னம்பலம் லேன்,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

Hotline : 0759463632, 0750422904
Office : 021320 2198


சிவமயம்

### கரைச்சி
### புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவப் பங்குனி உத்தர பொங்கல் (05.04.2012) சம்பந்தமான ஆலோசனைக் கூட்ட
## அறிவித்தல்

மேற்படி நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவ பங்குனி உத்தர பொங்கல் விழா (05.04.2012) வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் (23.02.2012) புதன்கிழமை 1.30 மணிக்கு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபை

(சி/01441) (45-6)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 ★ 09 ★ 1978



உதிர்வு 20 ★ 02 ★ 2009

### அமரர் சிவபாதம் அருணன்

குடும்பத்தின் குலவிளக்காய், அன்பின் இருப்பிடமாய்,
பண்பின் உறைவிடமாய் - திகழ்ந்த எம் இனிய உறவே!
நீங்கள் மீளாத்துயில் கொண்டு மூன்றாண்டுகள் ஓடிமறைந்து
விட்டதென்று நம்பமுடியவில்லை. எம் மனதின் சோகம்
ஆழ்கடல்போல் இருந்தாலும் நாளும் பொழுதும் எம் இதயத்தில்
அகல்விளக்காய் பிரகாசித்துக்கொண்டு இருக்கின்றீர்கள்
ஆற்றுவார் தேற்றுவார் பலர் இருந்தும் அனலிடைப்பட்ட
புழுவாய்துடிக்கும் எங்களுக்கு உங்களுக்கு ஒப்பாக
யாரைத்தான் காணமுடியும்.....

சி.மயூரி
077 1177683

(1475) (45-6)




யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் தெளிவான காலநிலையும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலையும் நிலவும்.

# சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் த. அட்டைகள்

ஈழத்தமிழர்கள்மீது இலங்கை அரசு மேற்கொண்ட போர்க்குற்றங்களுக்கு நடவடிக்கை எடுக்கக் கோரி மக்கள் போராட்டங்களுக்கு வலுவூட்டும் வகையில், சுயாதீன சர்வதேச விசாரணையை வலியுறுத்தும், தபால் அட்டைகள் நாடுகடந்த தமிழீழ அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

ஈழத்தமிழினத்தின் மீது இலங்கையால் கட்டவிழ்த்து விடப்பட்ட போர்க்குற்றங்கள், மானிடத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை ஆகியவற்றுக்கு, சுயா தீன சர்வதேச விசாரணையின் அவசியத்தை, இந்தத் தபால் அட்டைகள் வலியுறுத்தி நிற்கின்றன.

புலம்பெயர் தமிழர்கள், அவர்கள் வாழும் அந்தந்த நாட்டு வெளிநாட்டு அமைச்சுக்களுக்கும், ஐ.நா. மனித உரிமைச் சபையில் அங்கம் வகிக்கின்ற உலக நாடுகளது தூதரகங்களுக்கும், இந்தத் தபால் அட்டையை, விரைந்து அனுப்பி வைக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

ஐ.நா. நிபுணர் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டவாறு, சுயாதீன சர்வதேச விசாரணையே, இலங்கையில் நடத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில், இந்தத் தபால் அட்டை அமைக்கப்பட்டுள்ளதோடு ஈழத்தமிழர்களுக்கான நீதியை உலகத்திடம் கோரி நிற்கின்றது.

தபால் அட்டைகளைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர், நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதிநிதிகள் ஊடாகவும் மற்றும் postcardtgte media.org மின்னஞ்சல் ஊடாகவும் தொடர்பு கொண்டு, பெற்றுக் கொள்ளலாம் என நாடுகடந்த தமிழீழ அரசின் தகவல்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (வ)

# மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி,பெப்.20

மட்டுவில் கமலாசினி வித்தியாலய இல்லமெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் செ.பேரின்பயிரதன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ். கல்வித் திணைக்கள பாடசாலைகள் கட்டட வேலைப் பகுதி பொறியியலாளர் எட்வேட் சத்தியசீலனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் த.சிவகுமார், வித்தியாலய ஓய்வு பெற்ற அதிபர் ஆ.நடராசா ஆகி யோரும் கலந்து கொள்வர். (வ-9)

* * *

சுழிபுரம், பெப். 20

சுழிபுரம்-திருவடிநிலை சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்லமெய்வன்மை போட்டி இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் சிரேஷ்ட ஆசிரியர் செ.ஆனந்த குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலிகாமம் வலய ஆரம்பக் கல்வி சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் கு.சிவகுமாரும் சிறப்பு விருந்தினராக திருமதி ஆ.கனகரத்தினமும் கலந்து கொள்வர். (வ-28)

# மாகாண மட்ட ஒலிம்பியாட் தெரிவுப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், பெப்.20

மாகாண மட்ட ஒலிம்பியாட் விஞ்ஞானம் இரண்டாவது தெரிவுப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பயிற்சி முகாம் எதிர்வரும் 21 ஆம், 22 ஆம், 23 ஆம் திகதிகளில் காலை 9மணிக்கு கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது

. இதே வேளை மாகாண மட்ட கணித விஞ்ஞான ஒலிம்பியாட் முதலாவது தெரிவுப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்ட் மாணவர்களுக்கான 2 ஆவது தெரிவுப் பரீட்சை பயிற்சி முகாம் எதிர்வரும் 27 ஆம், 28 ஆம், 29 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என்று வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (வ-14)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் சிகிச்சைகளை விரிவுபடுத்துக

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் நோயாளர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துக் செல்வதாகவும் இவர்களுக்கான அடிப்படைத் தேவைகளும் சிகிச்சை முறைகளும் விரிவு படுத்தப்பட வேண்டிய தேவைகள் ஏற்பட்டுள்ளன என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அவற்றைப்பெறுவதற்கானமுயற்சிகளும் நடைபெறுவதாகவும் இதன் அடிப்படையில் இங்கு கடந்த ஆறு வருடங்களுக்கு முன் இருதயத் துடிப்பு தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் கடமையில் இருந்து அவர் வேறு உயர் பதவிக்கு 6 வருடங்களுக்கு முன் சென்று விட்டார். அதன் பின்பு இன்றுவரை இருதயத் துடிப்பு கணிப் பொறித் தொழில் நுட்ப உத்தியோகத்தர் நியமிக்கப்படவில்லை. இதனால் இங்கு சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் ஈ.சி.ஜி எடுப்பதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனவே இதன் அவசியத்தை உணர்ந்து இத்துறை சார்ந்த ஒருவரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நியமனம் செய்ய முன்வர வேண்டும் எனவும் நோயாளிகள் தரப்பில் கோரப்படுகின்றது. (வ-36)

### பாம்பு தீண்டி சாரதி மரணம்

பருத்தித்துறை, பெப்.20

இரவுவேளை படுக்கையில் பாம்பு தீண்டியதால் இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போச் சாரதி ஒருவர் மரணமானார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளி இரவு வடமராட்சியிலுள்ள தும்பளை நெல்லண்டையில் இடம்பெற்றுள்ளது. கோபாலன் சுதாகரன் (வயது-32) என்பவரே மரணமானவராவார்.

இவரின் மறைவையொட்டி பருத்தித்துறை டிப்போவிலும் பஸ்களிலும் வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. (வ-190-8)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா No.1 புறொயிலர் குஞ்சுகள் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர், | நல்லூர் பாம் சென்ரர், | சுட்டி பாம் சென்ரர், |
| 19, முருகேசர் ஒழுங்கை, | கனகபுரம் வீதி, கிளிநொச்சி. | வட்டுக்கோட்டை |
| நல்லூர். 0212226944 | 0776225944 | 0778996085 |

(14752) (45-6)

**பதவி வெற்றிடம்**

பல்தேசிய நிறுவனத்துக்கு Education Technologies கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* Trainee Marketting Executive
* Marketing Executive (With oneyear experience)
* க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி
* 30 வயதிற்கு உட்பட்டவர்கள்

நேர்முகப் பரீட்சைகள் 20 Feb முதல் 25 Feb வரை நடைபெறவுள்ளன.
தகைமை உடையோர் நேரில் வரவும்
can earn more than Rs 40,000/= within 3months
Education Technologiess
No.100, 2nd Floor, Manipay Road
Jaffna.
Contact : Mr. Anthany ( 077 3434823)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 28 ★ 12 ★ 1953



உதிர்வு 24 ★ 02 ★ 2009

**திருமதி செல்வராசா யோகீஸ்வரி**

(லிகிதர், கமநலசேவை நிலையம் - கைதடி)


குடும்பத்து நிழலாக இருந்த பெருமையரே
நிழல் தேடி நித்தமும் நாமே அலைகின்றோம்
சிவராத்திரி தினமதனில் சிவமான பேருயிரே
இந்நாளில் உமை நினைந்து கண்ணீர்வடிக்கின்றோம்

கைதடி மேற்கு,
கைதடி

அன்புக்கணவர்,
**குடும்பத்தினர்.**

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 17 ★ 09 ★ 1964



மறைவு 20 ★ 02 ★ 2009

**அமரர் இலட்சுமணபிள்ளை கிருபாகரன்**

(ஆசிரியர், கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம்)

தெருக்கள் அகலலாம் தெருவிளக்கு மிளிரலாம்
சிதைவுகள் தெரியாமல் மாடிகளும் நிமிரலாம்
உங்களைப் பிரிந்து உருக்குலைந்த எங்கள்
வாழ்வில் ஏதப்பா வெளிச்சம்?
ஊருக்கு ஓரத்தில் உறவுக்கு ஓரத்தில்
சிறகொடிந்த பறவைகளாய் சிந்திய விழியோடு
உயிருள்ள வரைக்கும் உங்கள்
நினைவுகளைச் சுமந்தபடி......

தாவடி, தெற்கு.

**மனைவி,
பிள்ளைகள்.**

**வீடு விற்பனைக்குண்டு**

மானிப்பாய் கட்டுடை வீதிக் அருகில் 2 ½ பரப்புக் காணிக்குள் நான்கு (4) அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி

ச. சிங்கராசா
அம்பாள் வீதி, மல்வம்,உடுவில்.

தொ.பே. 077 6027498
077 6355715

வீட்டுக்கு,
ஹோட்டலுக்கு
நாடு முழுவதும் போக்குவரத்து
மொத்தத்துக்காக விஷேட விலைக்கழிவு




புஃவே செட்
கரண்டிகள்

**www.titusstores.com**
டயிடஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை 2439422 லிபர்டி ப்ளாஸா

**MOORTHY GUEST HOUSE**
**மூர்த்தி கெஸ்ற் கவுஸ்**
T.P - 021 221 9599



Apply Immediately



# முட்டை ஓட்டுத் தத்துவம்

"அப்பா மின்குமிழ் ஒளிரவில்லை; வேறு ஒன்று வேண்டி மாட்ட வேண்டும்'' என்றான் மகன். '' சரி போய் புதிதாக ஒன்று வாங்கிக் கொண்டு வா'' என்று பணம் கொடுத்தார் தந்தை.

மகன் போய் வாங்கிக் கொண்டு வந்து அப்பாவிடம் கொடுத்தான். அவர் மாட்டினார். அதன் பின் அவரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டான் மகன். "ஏனப்பா இந்த மின்குமிழ் உடைகிறதில்லை'' என்றான். '' இது என்னடா கேள்வி நாங்களும் மின்குமிழைக் கீழே போடவில்லை; அதனால்தான் அது உடையவில்லை'' என்றார். அப்பாவின் புத்திசாலித்தனம் அவ்வளவு தான் . ஆனால் மகன் கேட்டது அந்த அர்த்தத்தில் இல்லை.

ஒரு மின்குமிழின் கண்ணாடியின் கனம் எவ்வளவு தெரியுமா? அரைமில்லி மீற்றர். அவ்வளவு மெல்லியதாக இருக்கின்ற ஒரு கண்ணாடிக் குமிழை மாட்டும் போது நாம் விரலால் அழுத்திப் பிடித்துக் கொண்டிருக்கிறோம். அப்படிச் செய்யும்போது அது உடைவதில்லை. எமது விரலில் அழுத்தத்தைத் தாங்கி நிற்கும் அளவுக்கு அதற்குப் பலம் எங்கே இருந்து வந்தது? இதுதான் அந்தச் சிறுவன் கேட்ட கேள்வியினுடைய அர்த்தம்.

இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு விஞ்ஞான அறிவு அதிகம். அதனாலேதான் இப்படியெல்லாம் கேள்வி கேட்கிறார்கள். அப்பாவுக்குத் தெரிகிறதா இல்லையா என்று சோதிப்பார்கள். சோதிப்பதற்காக இதைப்போன்ற சோதனைகளுக்கு இந்தக் காலத்துத் தந்தைமார் தயாராக இருக்க வேண்டும். இல்லை என்றால் பிள்ளைகள் தந்தையை அலட்சியமாக நினைத்து விடுவார்கள்.

மின்குமிழின் கண்ணாடி மெல்லியதாக இருந்தாலும், அழுத்திப் பிடிக்கும்போது அது உடையாமல் இருப்பதற்கு காரணம், நாம் இயற்கையாக உருவாக்கிய ஒரு தத்துவம். ஆதிகாலத்தில் இந்தத் தத்துவத்தை இயற்கை உருவாக்கி விட்டது.

அதாவது பறவைகளின் முட்டை ஒடு எப்படி இருக்கிறது, அதன் கனம் எவ்வளவு இருக்கும்.

மின்குமிழ் போன்று மிகவும் மெல்லியதாகத்தான் இருக்கும். பறவைகள் இனவிருத்திக்காக முட்டை போட வேண்டும். அந்த முட்டை எப்படி இருக்க வேண்டும் என்று இயற்கையாக யோசித்துப் பார்க்கப்பட்டது. முட்டை ஓடு மிகவும் கடுமையாக இருந்தால் உள்ளே வளரும் குஞ்சு அதை உடைத்து விட்டு வெளியே வர முடியாமல் போய்விடும். அதே நேரத்தில் அது மிகவும் மெலிதாக இருந்தால் தாய்ப் பறவைகள் அதன்மேல் உட்கார்ந்து அடை காக்கும்போது உடல் எடை தாங்க முடியாமல் முட்டைகள் உடைந்து போய் விடும்.

முட்டை பலமாக இருக்க வேண்டும். பலமில்லாமலும் இருக்க வேண்டும். குஞ்சு அதை உடைத்துக் கொண்டு வெளியே வரவேண்டும். தாயால் அது உடையக் கூடாது. ஒரே நேரத்தில் உறுதியாகவும், உறுதியில்லாமலும் முட்டையின் ஓடு அமையவேண்டும் என்றால் அது எப்படிச் சாத்தியம்? இது கொஞ்சம் குழப்பமாகவும், புரியாதது போன்றும் உள்ளது. அதனால்தான் இதைத் தத்துவம் என்று சொல்கிறோம்.

முட்டை ஓட்டுத் தத்துவம் இயற்கை கண்டுபிடித்த ஓர் அபூர்வமான அமைப்பு. அதுதான் முட்டை வடிவம்.

இது தாய்ப்பறவை சுலபமாக முட்டை போடுவதற்கு ஏற்ற வடிவம். முட்டை சதுர வடிவமாக இருந்தால் அதை போடுவதற்கு எவ்வளவு கஷ்டம். அதனால் முட்டையின் வடிவம் தான் அந்த உறுதிக்கு காரணம். இது எப்படிப்பட்ட தத்துவம். இதைத்தான் மின்குமிழ் செய்யும் போது நாம் கையாண்டிருக்கிறோம்.

பொதுவாக வகுப்பில் பார்த்து எழுதினால்தான் முட்டை போடுவது வழக்கம். நாம் முட்டையையே பார்த்துச் செய்திருக்கிறோம். இது எப்படிப்பட்ட கொப்பி.

ஓர் ஆசிரியர் வகுப்பில் மாணவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்.

"கோழி முட்டை போடுமா?'' என்று. ஒரு மாணவன் எழுந்து கூறினான், '' கோழி முட்டை இடும்; முட்டை போடாது என்றான். '' ஏன் போடாது?'' என்றார் ஆசிரியர். "போட்டால் உடைந்துவிடும்'' என்றான் மாணவன்.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# யாழ். நகர் நாவலர் வீதி பிறந்த கதை

**சோபனா**

யாழ்ப்பாணத்தின் பெருமைகளைப் பறைசாற்றுவதற்கு முன்னைய காலத்தில் சமயப் பெரியார்களும், சமூக மனப்பான்மை கொண்டவர்களும் விட்டுச் சென்ற பல சொத்துக்கள் இன்றும் எமது மண்ணில் நிலை பெற்றுள்ளன. இத்தகைய சேவை மனப்பான்மை உடையவர்கள் எம்மைவிட்டு மறைந்துபோனாலும் அவர்களின் ஞாபகங்களை, தொண்டுகளை, எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் நோக்குடன் எமது முன்னோர்கள் அவர்களின் நினைவாக பாடசாலைகள், நினைவுச்சின்னங்கள் போன்றவற்றை அமைத்து சமூகத்துக்கு அதனை வெளிப்படச் செய்தனர்.

இதனைவிட இவர்களின் பெயரில் நூல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை வாழ்க்கைக் குறிப்பேடுகளாகப் பொறித்து அதனை ஆவணங்களாகப் பாதுகாத்து வந்தனர். அத்துடன் யாழ்ப்பாணத்து பண்பாடுகளைப் பறைசாற்றும் நோக்குடன் அவர்களின் பெயரால் பல பர்டசாலைகள், வீதிகள் என அன்றும் இன்றும் நிலைபெற்று நிற்கின்றன.

சைவத்துக்கும் தமிழுக்கும் அளப்பெரும் சேவைகளை ஆற்றி யாழ்ப்பாணத்து மக்கள் மனதில் ஒரு நீங்காத இடம்பிடித்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் பெயரால் யாழ். நகரில் ஒரு பிரபல பாடசாலையும் நாவலர் வீதி எனும் பிரதான பெருந்தெருவும் அமையப்பெற்றுள்ளன.

நாவலர் வீதி எனும் பெயரை உச்சரிக்கும் போதே, இந்த வீதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் நாமத்துடன் ஒன்றிணைந்திருப்பதால் இது அவரது ஞாபகார்த்தமாகச் சூட்டப்பட்டதென்றே எடுத்துக் கொள்ள முடியும். ஆனால் இந்தப் பெயர் எதனால் ஏற்பட்டது? யாரால் உருவாக்கப்பட்டது என்பது யாருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. பெயரைக் கேட்டவுடன் நானும் அப்படித்தான் நினைத்தேன். இருந்தும் எனக்கோர் ஆர்வம். இதன் தோற்றம் தொடர்பாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று.

நானும் எனக்குத் தெரிந்த ஒரு சில பெரியவர்களிடம் கலந்துரையாடி, நான் பெற்ற தகவலை உங்களுக்குச் சொல்கிறேன்.

இரு சிறுவர்களின் குறும்புத்தன விளையாட்டால் இந்த வீதிக்கு நாவலர் வீதி எனப் பெயர் வந்தது என்று அந்தப் பெரியவர்கள் கூறும் போது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒவ்வொரு வீதிக்கும் ஒரு பெயர் சூட்டப்படும் போது அதன்பின் ஏதாவது ஒரு காரணம் இருக்கத்தான் செய்யும். இந்த வீதிக்கும் ஒரு கதை உண்டு.

1932 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் நாவலர் பாடசாலையில் தரம் 6, தரம்- 7இல் கல்வி கற்று வந்த மாணவர்கள் சிலர் குறும்புத்தனம் மிக்கவர்களாக இருந்தார்கள். இவர்களின் குறும்புத்தனங்களில் ஒன்றாக தமக்குள்ளே கடிதங்களை எழுதி தபால் மூலம் நாவலர் வீதி என முகவரி இட்டு மாறி மாறி அனுப்பிக் கொண்டிருந்தனர்.

தற்போது நாவலர் வீதி என அழைக்கப்படும் இந்த வீதி ஆரம்ப காலத்தில் நாவாந்துறை வீதி என்றே அழைக்கப்பட்டு வந்தது.

ஆனால் சிறுவர்கள் குறும்புத்தனமாக நாவலர் வீதி என எழுதி அடைப்புக் குறிக்குள் நாவாந்துறை வீதி எனவும் எழுதிவிட மறக்கவில்லை. இதனை அப்போது நகர மாவட்ட சபைத் தலைவராக இருந்த இ.சிவகுருநாதர் அறிந்துகொண்டார்.

சிறுவர்கள் குறும்புத்தனம் உடையவர்களாக இருந்தாலும் அதன் தார்ப்பரியத்தை உணர்ந்து கொண்டு சிறுவர்களைப் பாராட்டி நாவாந்துறை வீதிக்கு நாவலர் வீதி எனப் பெயரிட்டார். யாழ்.நகரின் கிழக்கில் அரியாலை, மாம்பழம் சந்தியிலிருந்து மேற்கில் நாவாந்துறைவரை நீண்டதொரு வீதி நாவலர் வீதி எனப் பெயர் கொண்டே அழைக்கப்பட்டு வருகிறது. ✱

# பாரம்பரிய வரலாற்றுச் சின்னங்களில் ஒன்று யாழ்.அடைக்கல அன்னை

(கடந்த வாரத் தொடர்ச்சி)

திருமலை மட்டுநகர் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, ஆண்டகை, யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள், புனித சவேரியார் குருமட அதிபர் அருட்திரு மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள், அருட்திரு எம்.வி.ஈ.ரவிச்சந்திரன் அடிகள் ஆகியோர் குறிப்பிடத்தக்க குருமணிகள்.



இவ்வாலயத்தில் பணிபுரியும் பங்குத் தந்தையர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையால் ஆலயம் பெரு வளர்ச்சி கண்டு அழகும் பொலிவும் பெற்று விளங்குகிறது.

1999 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற அருட்தந்தை ம.இ.பயஸ் அடிகள் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டார். பழுதடைந்திருந்த 'வாழ்க மரியே' ஒலியெழுப்பும் கடிகாரத்தை பழைமை குன்றா ஒலியுடன் திருத்தியமைத்தார்.

வியாகுல மாதா ஹெவியாகப் பெரிய அளவில் ஏற்கனவே கட்டப்பட்டுள்ளமையால், தவக்கால சிலுவைப் பாதையை பக்திபூர்வமாக அர்த்தமுள்ள வகையில் அனுசரிக்கும் பொருட்டு, ஆலய புறச்சுவர்களில் கல்வாரிக் காட்சிகளின் 12 நிலைகளை சைமன்கினைஷ் என்பவரைக் கொண்டு வடிவமைத்துப் பொருத்தப்பட்டது. முதல் நிலையை யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும், ஏனையவற்றை அடுத்த ஆண்டு அருட்திரு ஜே.பி.ஈ செல்வராஜா அடிகளாரும், திறந்து வைத்தனர்.

ஈழப் போரால் சேதமடைந்திருந்த 80 ஜன்னல்களும் மற்றும் கண்ணாடி அமைப்புக்களும் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட கண்ணாடி மூலம் சீர்செய்யப்பட்டது.

கைவிடப்பட்டிருந்த பழைய கட்டடம் இடிக்கப்பட்டு பவளவிழா, ஜூபிலி நினைவாக பாலர் பாடசாலையும் புதிய ஆலய மண்டபமும் கட்டப்பட்டு யெறோ மண்டபத்துடன் இணைக்கப்பட்டது அருகே சிறுவர் பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளன.

பல்வேறு வகையிலும் பக்தி மயமாகவும் அழகாகவும் பாரம்பரிய வரலாற்றுச் சின்னமாகவும் விளங்கும் அடைக்கல அன்னை ஆலய அபிஷேகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழா 2003 ஆம் ஆண்டு சிறப்பாக நடைபெற்றது. ஆலய மேப்புப் பணிச் சபை, இளையோர் மன்றம் மரியாயின் சேனை, வின்செண்டிற்டிபோல் சபை, பீடப் பணியினர் சபை, இறை இரக்க சபை, திருஇருதயசபை, அன்பியக் குழுக்கள் போன்ற அமைப்புக்களின் பங்களிப்புடன் ஆலயம் சிறப்புற இயங்கி வருகின்றன. தற்போதைய பங்குத் தந்தை அருட்திரு றெகி ராஜேஸ்வரன் அடிகளின் அனுபவம் மிக்க நிர்வாக சேவையால் இந்த ஆலயம் பல வழிகளிலும் முன்னேற்றம் அடைந்து வருகிறது.

துன்புறுவோருக்கும் உரிமைகள் மறுக்கப்பட்டு அடிமைகளாக வாழ்வோருக்கும் ஞான வழிகாட்டி சமாதானத்தை பரிசளிக்கும் அடைக்கல அன்னை. யாழ்.நகரிலே மகிமையுடன் வீற்றிருந்து நல்ல தீர்வைப் பெற்றுத் தருவாள் எல்லாத் தலைமுறைகளும் மரியாளை பேறுடையாள் எனப் போற்றுமே.

**எஸ்.யேசுதாஸ்**

(முற்றும்)




கொழும்புத்துறை,பெப்.20

பாண்டியந்தாழ்வு ஸ்ரீநரசிம்ம ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தினமும் மாலை 5 மணிக்கு நவகலச அபிஷேகம் நடைபெற்று வசந்த மண்டப பூசையும், உள்வீதி வலம் வருதலும் இடம்பெறும். எதிர்வரும் 23ம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 5 மணிக்கு விசேட பூசையும், திருமஞ்ச வீதி வலமும் இடம்பெறும். மறுநாள் வெள்ளிக்கிழமை பிராயச்சித்த அபிஷேகமும் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (வ-135)

* * *

தென்மராட்சி,பெப்.20

சாவகச்சேரி சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய வருடாந்த பெரும் திருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற்று மாசிமகத் தினத்தன்று தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெறும். மார்ச் 4ஆம் திகதி வேட்டைத் திருவிழா வும், 5ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், 6 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 7ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

பெருந்திருவிழா பிரதம குரு கலாநிதி சிவஸ்ரீ கு.து. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் திருவிழா கிரியைகள் நடைபெறும். (வ-9)

* * *

தென்மராட்சி,பெப்.20

மிருசுவில் உசன் கந்தசாமி ஆலயத்தில் ''மகா உன்னத பாஞ் ஞ சன்ஸ சகித 108 வலம்புரிச் சங்காபிஷேக ஸ்கந்தஹோமம் எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மருதனார்மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்ச னேயர் ஆலய 'அருள் வாக்குச் சித்தர்' குகஸ்ரீ இரத்தினகேதீஸ்வர சுவாமிகள் தலைமையில் சிவாச்சாரியார்கள் கலந்து ஸ்கந்த ஹோமத்தை நடத்த வுள்ளனர். மாற்றுவலுவுள்ளோரையும் வாழ்வகத்தைச் சேர்ந்த அன்பர்களையும் ஹோமத்தில் இணைந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

* * *

சுழிபுரம்,பெப்.20

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை இரவு நான்கு சாமப் பூசை, அபிஷேகம், நித்திரை விழிப்பு ஆகிய நிகழ்வுகள் பண்ணாகம் விசவத் தனை முருகமூர்த்தி கோயில், வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயம், சித்தன்கேணி ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலயம் ஆகியவற்றில் விசேடமாக நடைபெறவுள்ளது.

இன்று மாலை முதலாவது பூசையும் இரவு 9 மணிக்கு இரண்டாம் சாமப் பூசையும், இரவு 12 மணிக்கு மூன்றாம் சாமப் பூசையும், நான்காம் சாமப் பூசை அதிகாலை 5 மணிக்கும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (வ-28)

* * *

யாழ்ப்பாணம், பெப்.20

தென்கோவை பழைய வீதி ஸ்ரீசாந்தி லிங்கேஸ்வரர் திருக்கோ யில் பாற்குட அபிஷேகமும் மகா சிவராத்திரி விழாவும் இன்று நடைபெற உள்ளது. காலை 8மணிக்கு கோப்பாய் தெற்கு ஸ்ரீகற்பகப் பிள்ளையார் கோயிலில் இருந்து ஆரம்பமாகும் பாற்குட ஊர்வலம் ஆலயத்தை சென்றடைந்ததும் பாலாபிஷேகம் நடைபெறும். இரவு நான்கு சாமப் பூசையும் நடை பெறும். (வ-16)

* * *

வட்டுக்கோட்டை-தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ண லிங்கேஸ்வரர் ஆலய மஹா சிவராத்திரி நிகழ்வு இன்று பிற்பகல் 4மணிக்கு ஆரம்பமாகும். நான்கு சாமமும் கும்ப அபிஷேக ஆராத னைகள் நடைபெற்று மறுநாள் காலை திருவூஞ்சல் திருவிழா வைத் தொடர்ந்து ஆலய பித்தர் கேணியில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (வ-16)

* * *

ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப்பாடசாலை மகா சிவராத்திரியை முன்னிட்டு நடத்தும் மகா சிவராத்திரிவிழா இன்று திங்கட்கிழமை இரவு 7மணிக்கு ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் அருகில் அமைந்துள்ள நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மன்ற அதிபர் ந.து.ஜெயதீஸ்வரன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும், சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன.(வ-14)

* * *

யாழ்ப்பாணம், பெப்.20

வவுனியா கோயில் குளம் அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தில் மகாசிவராத்திரி பெருவிழா இன்று திங்கட்கிழமை காலை 6 மணிக்கு கும்பப் பூசையுடன் ஆரம்பாகி மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிவரை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் விசேட சொற்பொழிவுகளும், பண்ணிசை, நாட்டிய நாடகம், நாடகம், இசைவேள்வி, பரத நாட்டியம் ஆகிய கலையரங்க நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (வ-14)

* * *

யாழ்ப்பாணம், பெப்.20

யாழ். சத்தியசாயி சேவா நிலையம் மகா சிவராத்திரியை முன்னிட்டு நடத்தும் விசேட பூசை வழிபாடுகள் இன்று திங்கட்கிழமை மாலை 5மணிமுதல் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணிவரை திருநெல்வேலி இராம நாதன் வீதி சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் வேதபாராயணம், பஜனை, நற்சிந்தனை, நகர சங்கீர்த்தனம் விசேட சொற்பொழிவு போன்றன விசேடமாக இடம்பெறவுள்ளன. (வ-14)

* * *

யாழ்ப்பாணம், பெப்.20

கீரிமலை நகுலேச்சரம் ஆலயத்தின் மகா சிவராத்திரி விழா இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்குயாக பூசையுடன் ஆரம்பமாகி மறுநாள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிவரை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

அன்றையதினம் இரவு நிகழ்ச்சிகளில் மாலை 6மணிக்கு விசேட பூசையுடன் ஆரம்பமாகி மறுநாள் அதிகாலை 4மணிக்கு நான்காம் சாமப் பூசையுடன் நிறைவடையும்.

இதேவேளை, தென்னிந்தியக் கலைஞர்கள் கலந்து சிறப்பிக்கும் பக்தி இசை நிகழ்ச்சி இன்று இரவு 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. (வ-14-130)

* * *

மகாசிவராத்திரியை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் சிவராத்திரி விழா இன்று திங்கட் கிழமை மாலை 6 மணிக்கு காரைநகர் சிவன்கோயிலில் நடை பெறவுள்ளது.

இந்து சமய கலாசார உத்தியோகத் தர் எஸ். உதயகாலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ''சிவராத்திரியும் ஆன்மீக விழிப்பும்'' எனும் தலைப்பில் உளவள துணையாளர் ந.நவராஜ் சிறப்புப் சொற்பொழிவை நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து காரைநகர் சிவகாமி அம்பாள் அறநெறிப் பாடசாலை, காரைநகர் புகழி சிவசுப் பிரமணிய அறநெறிப் பாடசாலை, காரைநகர் கிழவன் காடு கலாமன்ற அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (வ-14)

* * *

மகாசிவராத்திரியை முன்னிட்டு கொழும்பிலிருந்து வருகை தந்துள்ள ஏகத்துவ பக்தர்களால் நடத்தப்படும் ஸ்ரீ அம்மா பகவானின் விசேட பாதுகாபிஷேகமும், தீட்சையும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு சட்டநாதர் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ள கல்வியங்காடு திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வ-14)

* * *

சிவராத்திரியை முன்னிட்டு சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தின் திருவடி நிலை தீர்த்தம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும். (வ)

* * *

மகாசிவராத்திரி தினமான இன்று செல்வச் சந்நிதியில் இரவு நான்கு சாம விஷேட பூசைகள் இடம் பெறும். (வ-283)


* * *

வடமராட்சி, பெப்.20

சுதுமலை ஞானவைரவர் ஆலயத்தில் சிவராத்திரி தின நிகழ்வுகள் இன்று விசேடமாக இடம்பெறவுள்ளன. இதனை முன்னிட்டு யாழ். பட்டி மன்றக் குழுவினர் வழங்கும் சொல்வேந்தர் பொன் சுகந்தனின் தலைமையிலான சிறப்புப் பட்டி மன்றம் இன்று இரவு ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது. (எ)

# விரதங்களுள் சிறப்பு மிக்கது மகா சிவராத்திரி

ஒரு இனத்தின் கலாசாரத்தின் அத்திபாரம் அவர்கள் கொண்டாடும் விழாக்களேயாகும். விழாக்களின் உள் அர்த்தத்தைப் புரியாமல் களியாட்டமாகக் கொண்டாடுவதில் பயனில்லை. விழாக்களுக்கென்று நாள்கள் குறிக்கப்பட்டுள்ளன. செயற்பாடுகளுள்ளன. புராணக் கதைகள் உள்ளன. உயர்ந்த தத்துவமும் உள்ளது.



ஒவ்வொரு மாதமும் அமாவாசைக்கு முதல்நாள் இரவு சிவராத்திரியாகும். மாசி மாதத்தில் வரும் இவ் இரவை மகாசிவராத்திரியென்று கூறுகிறோம். சிவ வழிபாட்டுக்கு மிகவும் சிறந்த இராத்திரி மகாசிவராத்திரியாகும். இதற்கான அடிப்படைக் கதைகள் பல உண்டானாலும், அவற்றில் இரண்டு முக்கியமானவை. ஒன்று- வேட்டைக்காரன் ஒருவனைப் புலியொன்று துரத்திய பொழுது அவன் ஒரு மரத்தின் மேலேறிக் கொண்டான். இரவான பின்பும் புலி மரத்தினடியிலேயே நின்றபடியால், அவன் தூங்கி விடாமல் இருப்பதற்காக மரத்திலிருந்த இலைகளை ஒவ்வொன்றாக ஒடித்து நிலத்தில் போட்டு வந்தான். விடிந்த பின் பார்த்த போது புலியும் போய் விட்டிருந்தது. இலைகள் குவிந்த இடத்தில் சிவலிங்கம் இருந்த தைக் கண்டான்.

**இன்று சிவராத்திரி**

அவன் ஒடித்துப் போட்ட இலைகளோ வில்வமிலைகள். இரவு விழித்தி ருந்து கீழிருந்த சிவலிங்கத்திற்கு வில்வம் இலைகளால் தான் சிவலிங்கப் பூசை செய்வ தாக தெரிந்து கொள்ளாமலே பூசை செய்த படியால் அவன் உயிர் தப்பவும் சிவ தரிசனம் கிட்டவும் வாய்த்த அந்த இரவை நாமும் விரதமாக அனுஷ்டித்தால் சிவ தரிசனம் கிடைக்கும் என்பது இந்து மதத்தவர்களின் நம்பிக்கை.

பகவான் சத்திய சாயி பாபா, இந்த நாளில் தான் சிவபெருமான், உலகைக் காப்பாதற்காகப் பாற்கடலில் தோன்றிய ஆலகால விஷத்தை விழுங்கினார் என்றும் அதனால் ஏற்பட்ட வெப்ப அதிகரிப்பால் கங்கையை முடியில் சிருஷ்டித்தார் என்றும், இன்னும் போதாதென்று சந்திரனையும் தலையில் வைத்துக் கொண்டதால், ஓரளவு வெப்பம் தணிந்ததும் சிவன் தாண்டவம் புரிந்தார் என்றும் கூறியுள்ளார். ஆகவேதான் இப் புனித இரவில் சிவனடியார்கள் நான்கு யாமப் பூசைகளுடன் சிவலிங்க அபிஷேகமும் செய்வதுண்டு. சிவபெருமான் உலகைக் காப்பதற்காக எவ்வாறு விரைந்து செயற்பட்டாரோ, அதேபோல் நாமும் மற்றவர்களுக்கு உதவுவதில் ஆர்வம் காட்ட வேண்டுமென்பதே இதன் படிப்பினையாகும்.

சிவரூபத்தில், முடிமேலிருக்கும் கங்கை பிராண சக்தியையும், தலையிலுள்ள சந்திரன் நனவு நிலையையும், உடலிலுள்ள பாம்புகள் படைப்பிலுள்ள ஜீவராசிகளை யும் குறிக்கின்றன. குபேரன் அருகிலிருந்தாலும் சகல சம்பத்தும் வாய்த்திருந்தாலும் சிவபிரானின் கைகளில் பிச்சைப் பாத்திரமே உள்ளது. செல்வம் ஆன்மீக ஈடேற்றத்துக்கு தடையாகலாமென்பதையும் எல்லாவற்றையும் துறந்த நிலையையே பிச்சைப்பாத்திரம் அறிவுறுத்துகிறது.

சிவாலயங்களில் மூலஸ்தானத்தை நோக்கி நந்தீஸ்வரர் அமைக்கப்பட்டிருப்பார். நந்தியாகிய ஜீவன், படைக்கப்பட்ட பிரகிருதியில் கவனம் செலுத்தாது. மூலஸ்தானத்திலுள்ள பரப்பிரம்மாவாகிய ஈஸ்வரனையே நோக்குவது போல் நாமும் எந்நேரமும் இறைவனை நோக்கியே இருக்க வேண்டும் என்பது இதற்கான விளக்கம்.

ஈஸ்வரனிலிருந்து எழுந்த மும்மூர்த்திகளே பிரம்மா, விஷ்ணு, மகேசன் என்ற தெய்வீக வெளிப்பாடுகளாகும். நாம் இவற்றில் வித்தியாசம் நோக்காது மூன்றும் ஒன்று தான் என்ற தெளிவு கொண்டிருக்க வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே ஆன்மீக ஈடேற்றமாகும். சிவபிரானின் குடும்பத்தில் சிவன், பார்வதி, பிள்ளையார், முருகன், யானை, மயில், சிங்கம், எருது, பாம்புகள் எல்லாம் மிக ஒற்றுமையாகவும், சாந்த மாகவும் இருப்பதை அவதானிக்கலாம். வேற்றுமையில் ஒற்றுமையையே இதுவும் வெளிப்படுத்துகின்றது. நாமும் எண்ணம், வாக்கு, செயலில் ஒற்றுமையையும் , தூய்மையையும் கடைப்பிடிக்க வேண்டும் என்பது இதன் உள்ளார்த்தம்.

மனிதனின் ஆதிக்கம் சந்திரனாலேயே ஏற்படுகிறது. சிவராத்திரியன்று சந்திரனுடைய 16 கலைகளில் 15 தேய்வடைந்திருக்கும். எஞ்சியிருக்கும் ஒன்றை அடக்கி மனதை ஆண்டவனின் மேல் லயப்படுத்துவது மிகவும் சுலபமானது. ஆகவேதான் சிவராத்திரியன்று இறை உபாசனம் இலேசில் கிட்டுகிறது.

சிவராத்திரி என்ற சொல்லில் 'சி' என்ற எழுத்துக்கு ஐந்தும் 'வ' என்பதற்கு நான்கும், 'ரா' என்பதற்கு இரண்டும் எண்கணக்கில் கொடுக்கப்பட்டுள்ளன. மூன்றும் சேர்ந்து வரும் 11 என்ற எண் 11 ருத்திரங்களைக் குறிக்கிறது. கர்மேந்திரியம் (5), ஞானேந்தியம் (5), மனம் (1) ஆகிய 11 ருத்திரங்களின் ஆதிக்கத்தைக் குறைப்பதே சிவராத்திரியின் அர்த்தமாகும்.

இந்தப் புனித இரவில், முழுமையான புலன் கட்டுப்பாட்டுடன், புத்தியையும் ஒரு நிலைப்படுத்தி நாமப் பிரார்த்தனை செய்தால் இறை தரிசனம் நிச்சயம் கிட்டும். கண் விழித்திருப்பது முக்கியமல்ல, மனதை இறைவனோடு ஒன்றிணைக்க வேண்டும். (பகவான் சத்தியசாயி பாபா அருளிய சிவராத்திரி உரைகளிலிருந்து எடுக்கப்பட்ட விளக்கங்களே மேலே தரப்பட்டுள்ளன. பல தடவைகள் பகவான் சிவராத்திரியன்று இலிங்கங்களை உருவாக்கி வழங்கி (இலிங்கோற்பவம்) தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்.) ★

மருத்துவர் இ.கணேசமூர்த்தி



காரைநகர் மணற்காடு மகேஸ்வரன் தர்மகுரபி மண்டபத்துக்கு வருகை தந்த பிரதமர் டி.எம்.ஜெயரட்ணவை கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலை மாணவர்கள் மலர் கொடுத்து வரவேற்கின்றனர். (ம-250)



பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவையினர் ஆரம்பித்துள்ள மரக்கன்றுகள் நடுகைத் திட்டத்தின் கீழ் அப்பகுதி மக்களுக்கு மரக்கன்றுகளை வழங்கியுள்ளனர். பேரவைத் தலைவர் அ.கேதீஸ்வரன் மரக்கன்று வழங்குகின்றார். (ம-9)



யாழ்.பிரதான வீதி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் வ.ச.முதலியின் பிரிவுபசார நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் வங்கி உத்தியோகத்தர்கள், முகாமையாளர்கள் கலந்துகொண்டு கௌரவிப்பு வழங்கினர். (ம-29)





கவிஞர் கொற்றை பி.கிருஷ்ணானந்தனின் 'இன்னுமோர் உலகம்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் 'ஞானம்' சஞ்சிகை ஆசிரியர் டாக்டர் தி. ஞானசேகரன் நூலை வெளியிட்டு வைக்க, முதற் பிரதியை திருமதி ஜெகதீஸ்வரி தம்பையா பெற்றுக் கொள்கிறார். நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரும் உள்ளனர். (ம-8)



பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினர் பளைப் பிரதேசத்தில் தென்னை மீள் நடுகைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இத் திட்டத்தில் இணைந்த குடும்பத்துக்கு நீர் இறைக்கும் இயந்திரம் முட்கம்பிகள், தென்னம்பிள்ளைகள் போன்றவற்றை பேரவை உறுப்பினர் அ.அலேஸ் கையளிக்கிறார். அருகில் பேரவைத் தலைவர் அ.கேதீஸ்வரன் மற்றும் முன்னாள் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் ஆகியோர் உள்ளனர். (ம-9)



பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் கால்கோள் விழா நிகழ்வின்போது சங்கானை மக்கள் வங்கி உதவி முகாமையாளர் எஸ்.சரத்சந்தர், வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி ஜெ.அருள்மயம் விருந்தினர்களாகக் கலந்துகொண்டு மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். (ம-28)



கிளாலி பிரதேசத்தில் மீளக்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்குப் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.மார்க்கண்டு தலைமையில் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம-14)



காரைநகர் பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு அண்மையில் காரைநகரில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் பிரதேச செயலக அதிகாரிகளுடன் உள்ளனர். (ம-60)

## வலைப் பந்தும் கிரிக்கெட்டும்



கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியும் பெண்களுக்கான வலைபந்தாட்டப் போட்டியும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 5.30 மணி வரை கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ம-23)

# கொக்குவில் இந்து வெற்றி

வலி.வடக்கு, பெப்.20

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் அமரர் தேவராசா இல்ல உள்ளக விளையாட்டு மைதானத்தின் திறப்பு விழாவையொட்டி நடைபெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகியதும் சற்றுச்சூடாக இரு அணிகளும் மோதிக் கொண்ட போதிலும் பிற்பகுதியில் இரு அணிகளும் சற்று சோர்வான நிலையில் மோதிக் கொண்டன.

நான்கு கால் பாதி ஆட்டங்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் கால் பாதி ஆட்ட முடிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி 10:5 புள்ளிகள் என்ற நிலையில் இருந்தது.

இரண்டாம் கால்பாதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி 12:0 என்ற நிலையில் இருந்தது. மூன்றாம் கால்பாதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி 02:2 புள்ளிகளையும், இறுதி கால்பாதி ஆட்டத்தில் 6:2 என்ற புள்ளிகளையும் பெற்றது.

ஆட்ட நிறைவில் கொக்குவில் இந்துக் கல்லூரி 30:9 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி பெற்ற 9 புள்ளிகளையும் பி.சானுகா பெற்றுக் கொடுத்தார்.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கான 30 புள்ளிகளையும் ஆர்.ஜனரஞ்சினி 12, எ.விதுரா 5, ஆர்.தரசுதா 4, ஜீ.சுரேகா தலா 4, எஸ்.மிதுரா -3, வி.தனுசியா 2 பெற்றுக் கொடுத்தனர். (த-86)







வலிகாமம் வலய பாடசாலை அணிகளுக்கு இடையே இடம் பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான உதை பந்தாட்டப் போட்டியில் வலிகாமம் கல்வி வலய சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, இரண்டாம் இடத்தைப் பெற்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றுக்கான சம்பியன் கிண்ணத்தை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.சிவானந்தன் வழங்குகிறார். (ம-86)

# இறுதியாட்டத்துக்கு மானிப்பாய் இந்து

வலி.வடக்கு, பெப்.20

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டி இறுதியாட்டத்தில் விளையாட மானிப்பாய் இந்துக் கல்லூரி தகுதி பெற்றுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று ஒற்றையர் ஆட்டங்களை மானிப்பாய் இந்துக் கல்லூரி வென்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது.



முதல் ஒற்றையர் சுற்றை 21:15, 21:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி வென்றதுடன் இரண்டாம் சுற்றையும் 21:19, 21:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

மூன்றாம் சுற்றை மானிப்பாய் இந்துக் கல்லூரி 21:07, 21:05 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது. இரட்டையர் ஆட்டங்கள் நடைபெறாத நிலையில் வெற்றியை மானிப்பாய் இந்துக் கல்லூரி பெற்றுக் கொண்டது. (த-86)

## கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், பெப்.20

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக் கான கரப்பந்தாட்டப் போட்டி இன்றும் நாளையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை பாரதிபுரம் ஆதவன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது என்று விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.குமார் தெரிவித்துள்ளார். (ம-23)

# வென்றது உடையார்கட்டு நண்பர்கள்

யாழ்ப்பாணம், பெப்.20

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டித்தொடரின் இறுதியாட்டத்தில் உடையார்கட்டு நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

கடந்தவாரம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உடையார் கட்டு நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கோம்பாவில் விக்னேஸ்வர விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. இதில் உடையார்கட்டு நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி 15:10 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (ம-23)

## விழிமேல் நீர் சொரிய

### சிங்கராசா றஞ்சித் மரியதாஸ் (இந்திரன்)



நண்பனாய் நாளும் வலம்வந்த இந்திரனே
நாளும் நல்ல கதை சொல்ல நகைத்தவனே
நண்பர்களாம் நாம் இங்கிருக்க
நாமறியாத இடம் நீமட்டும் போனதென்ன
உறவுகளைப் பேணுவதில் நீ உண்மையானவன்
உணர்வுகளைப் புரிந்து கொள்வதில் நீ உத்தமர்
நீ தந்த அனுபவங்கள் உண்மையாய் இருக்க
நீ மட்டும் பொய்யாகிப் போனதேனோ

*உன் உயிர் பிரிவால் துயருறும்*
*பெரியண்ணா கராச், தாட்ஷா காட்வெயர்*

## மரண அறிவித்தல்

### செல்லையா சிவசண்முகநாதன்

(ஓய்வுபெற்ற அரச அலுவலர்)



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை தும்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவசண்முகநாதன் (ஓய்வுபெற்ற அரச அலுவலர்) நேற்று (19.02.2012) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - பாக்கியம் தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்ற சபாரட்ணம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சீதாலட்சுமியின் (ஓய்வுபெற்ற அரச அலுவலர்) பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான பீதாம்பரம், தெய்வேந்திரராணி மற்றும் துரைஐயா (நல்லூர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்தில் இருந்து இன்று (20.02.2012) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளை,
பருத்தித்துறை.

தகவல்
மனைவி

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம், பழைய பூங்கா வீதியில் சகல வசதிகளுடனும் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 021 222 6266, 0777741750

**விற்பனைக்கு**

58-XXXX தொடரிலக்கமுடைய ஹயஸ் van, twil A/C விற்பனைக் குண்டு
தொடர்புகளுக்கு:- 075-4985951, 0779961392

**GUNNA BEST PC**

கணினி திருத்தம் COMPUTER REPAIR
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா?
உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரியமுறையில் திருத்தித் தருகிறோம்.
அழையுங்கள்: 0779086737

**வீடு விற்பனைக்கு**

நல்லூர் கோயிலுக்கு முன்பாக யாழ். மாநகரசபைக்கு அருகில் மூன்று பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை)
தொடர்புகளுக்கு:-
0718561737

## மரண அறிவித்தல்

### சிங்கராசா றஞ்சித் மரியதாஸ் (இந்திரன்)



குருசோ வீதியைப் பிறப்பிடமாகவும் புங்கன்குளம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராசா றஞ்சித் மரியதாஸ் (இந்திரன்) நேற்றுமுன்தினம் (18.02.2012) சனிக்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்கராசா மற்றும் இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் ஜீவதியின் அன்புக் கணவரும் தட்சாயினி, சிறோஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஞானி, லீலா, விமலா, இந்திராணி, சந்திரன், கமலா, பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் விமலா, துரை, யோசப், சாந்தன், திலகா, றமேஸ், றஜிதா ஆகியோரின் மைத்துனரும் சிவராசா-திரேசம்மா தம்பதியரின் மருமகனும் றொபேட், பொன்ராஸ், அன்ரன், றுக்குமணி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.02.2012) திங்கட்கிழமை பி.பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியைத் தொடர்ந்து, யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
யோ.றோபேட்
(உரிமையாளர், பமிலா கராச்)

23, புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

# ஆஸி-அணி ஆக்ரோஷம்

நேற்றைய இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தை ஆஸ்திரேலிய அணி வெற்றிகொண்டது. துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் சிறப்பாகச் செயற்பட்ட ஆஸ்திரேலிய அணி 110 ஓட்டங்களால் வெற்றி பெற்று புள்ளி அடிப்படையில் முதலிடம் பெற்றது.

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்று வரும் கொமன்வெல்த் முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் ஏழாவது ஆட்டத்தில் இந்திய, ஆஸ்திரேலிய அணிகள் மோதிக் கொண்டன. இந்த ஆட்டத்திலும் ஆஸி. அணிக்கு பொண்டிங்கே தலைமை தாங்கினார். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று ஆஸி. அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

மத்தியூ வேட், டேவிட் வோர்னர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். இருவரும் இந்தியப் பந்து வீச்சாளர்களுக்கு சிறப்பாக முகம்கொடுத்தனர். வோர்னர் வேகமாக ஓட்டங்களைக் குவித்து வேகமாக வெளியேறினார். ஆஸி. 70 ஓட்டங்களை எட்டிய நிலையில் வோர்னர் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த பொண்டிங் தடுமாறினார். அணி 83 ஓட்டங்களைப் பெற்றபோது பொண்டிங் பவிலியன் திரும்பினார். ஆஸி. அணி 117 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை ஆரம்பத்திலிருந்து நிதானமாக ஆடிய வேட்டையும் இழந்தது.



சர்ச்சைக்குள்ளான மைக் ஹசியின் ஆட்டமிழப்பு.

### மைக் ஹஸி 5,000

போரஸ்ட், மைக் ஹஸி இணைந்தனர். வேகமாக ஓட்டங்களைக் குவித்த மைக் ஹஸி தனது 36 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். மறு முனையில் ஹஸிக்கு இணையாக ஆடிய இளம் வீரர் போரஸ்ட் 68 பந்துகளில் தனது இரண்டாவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். நேற்றைய சிறப்பான ஆட்டத்தின் மூலம் மைக் ஹஸி ஒரு நாள் கிரிக்கெட்டில் 5 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 13 ஆவது ஆஸ்திரேலிய வீரர் என்ற பெருமையைப் பெற்றுக் கொண்டார்.

### தொழில்நுட்பத்தின் மோசம்

மைக் ஹசி முகம்கொடுத்த சுரேஷ் ரெய்னாவின் 28 ஆவது பந்து பரிமாற்றத்தில், இலக்குக் காப்பாளர் மஹேந்திர சிங் டோனியால் 'ஸ்டம்ப்' செய்யப்பட்டார். இதன் தீர்ப்பு மூன்றாம் நடுவருக்கு மாற்றப்பட்டது.





மிகவும் நெருக்கடியான இந்த ஆட்டமிழப்பின் தீர்ப்பு அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டிருந்த சமயம், மைக் ஹசி ஆட்டமிழந்ததாக அறிவிக்கப்பட்டது. எனினும், நடுவர் தனது தீர்மானத்திற்கு புறம்பாக அறிவிப்பை வெளியிட்டதாக மைதன நடுவர்கள் அறிவித்ததுடன், மைக் ஹசியை மீண்டும் துடுப்பெடுத்தாடுமாறும் அழைத்தனர்.

மைக் ஹசி ஆட்டமிழக்கவில்லை என்பதை அறிவிப்பதற்குப் பதிலாக ஆட்டமிழந்த சமிக்கையை நடுவர் தவறுதலாக அழுத்திவிட்டதாகக் கூறினார்கள் மைதான நடுவர்கள்.

நான்காவது இலக்குக்காக 92 பந்துகளில் 100 ஓட்டங்கள் பகிரப்பட்டது. மைக் ஹஸியும், போரஸ்ட்டும் ஆட்டமிழக்க ஆஸி. அணி 5 இலக்குகளை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.


### வேகமான இணைப்பாட்டம்

தொடர்ந்து களமிறங்கிய டேவிட் ஹஸி, கிறிஸ்ரைன் இணைப்பு அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தது. இவர்களது அதிரடி வேகத்தைக் கட்டுப்படுத்த இந்திய பந்து வீச்சாளர்கள் திணறினர். இவர்களின் பிரிக்கப்படாத இணைப்பாட்டத்தின் மூலம் 36 பந்துகளில் 65 ஓட்டங்கள் பகிரப்பட்டன. இது ஆஸ்திரேலிய அணியின் 50 ஓட்டங்களைத் தாண்டிய இணைப்பாட்டத்தில் வேகமான ஐந்தாவது இணைப்பாட்டம் என்ற சாதனையைப் பெற்றுக் கொண்டது.





'கூல் பிளேயர்' என்று அழைக்கப்படும் டோனியும் லீயுடன் வார்த்தை மோதலில்...





ஹோக்லி நேற்றைய தினமும் ரசிகர்களுடன் வார்த்தை மோதல்களில் ஈடுபட்டார்.

### ஐந்தாவது பெரிய இறுதிஇலக்கு

ஆஸ்திரேலிய அணி 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 288 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஆஸ்திரேலிய அணி இந்திய அணிக்கு எதிராக தனது சொந்த மண்ணில் பெற்றுக் கொண்ட 5 ஆவது அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாக இந்த இறுதி இலக்கு நேற்றுப் பதிவானது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது இந்திய அணி. ஆரம்பமே தடுமாறியது. கம்பீர், டெண்டுல்கர், ரோகித் சர்மா, ஹோக்லி என அடுத்தடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 36 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளைப் பறிகொடுத்தது.

அணியைத் தூக்கி நிறுத்தும் ரெய்னா, டோனி ஜோடியின் முயற்சியும் கிறிஸ்ரைனால் முடித்து வைக்கப்பட்டது. ரெய்னா, ஜடேஜா, டோனி, வினய்குமார், பதான் எனச் சீரான இடைவெளியில் இந்தியாவின் இலக்குகள் சரிந்து கொண்டிருந்தன. பின் வரிசை வீரர்கள் ஒற்றை இலக்கங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணியால் 43.3 பந்துப் பரிமாற்றங்களில் 178 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொள்ள முடிந்தது.

சிறப்பாகப் பந்துவீசிய ஹில்பின் ஹஸ் ஒரு நாள் ஆட்டங்களில் 5 இலக்குகளை முதற்தடவையாகக் கைப்பற்றினார். (5)



### இது வேகம்

*நேற்று நடைபெற்ற இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஒரு நாள் ஆட்டத்தில் ஆஸி. அணியின் வேகப் பந்துவீச்சாளர் பிரட் லீ பந்துவீசுவதற்காக ஓடிவருகிறார்.*

*அவரின் வேகத்தைச் சிறைப் பிடித்தார் படப்பிடிப்பாளர்.*

## ஆஸ்திரேலியா எதிர் இந்தியா

பிறிஸ்பேர்ண் மைதானம்

ஆஸ்திரேலியா 288/5 (50) இந்தியா 178 (43.3)

**ஆஸ்திரேலியா 110 ஓட்டங்களால் வெற்றி பெற்றது**

**ஆஸ்திரேலியா** — ஆட்டநாயகன்: ஹில்பின் ஹஸ்

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| எம் எஸ் வடே | c & b சர்மா | 45 | 67 | 2 | 1 |
| டீஏ வோர்னர் | c டெண்டுல்கர் b பதான் | 43 | 46 | 5 | 1 |
| ரிக்கி பொண்டிங் | c பதான் b சகீர் | 7 | 26 | 0 | 0 |
| பிஜே போரஸ்ட் | c ஹோக்லி b பதான் | 52 | 71 | 3 | 0 |
| மைக் ஹசி | c ரெய்னா b பதான் | 59 | 52 | 6 | 0 |
| டேவிட் ஹசி | (ஆட்டமிழக்காமல்) | 26 | 20 | 1 | 1 |
| கிறிஸ்ரைன் | (ஆட்டமிழக்காமல்) | 30 | 18 | 5 | 0 |
| உதிரிகள் | | 26 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 288 | | | |

இலக்கு இழப்பு: 1-70, 2-83, 3-117, 4-217, 5-223

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| சகீர் கான் | 10 | 0 | 46 | 1 |
| வினய் குமார் | 10 | 0 | 60 | 0 |
| பதான் | 10 | 0 | 61 | 3 |
| ரெய்னா | 10 | 0 | 44 | 0 |
| யாதவ் | 7 | 0 | 46 | 0 |
| ரோஹித் சர்மா | 3 | 0 | 17 | 1 |

**இந்தியா**

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கம்பீர் | c வேட் b லீ | 5 | 5 | 1 | 0 |
| டெண்டுல்கர் | c டோகேர்ட்டி b ஹில்பின் | 3 | 12 | 0 | 0 |
| ஹோக்லி | c டேவிட் ஹசி b ஹில்பின் | 12 | 25 | 0 | 0 |
| ரோஹித் சர்மா | c வேட் b லீ | 0 | 5 | 0 | 0 |
| ரெய்னா | c வேட் b கிறிஸ்ரைன் | 28 | 41 | 1 | 1 |
| டோனி | c கிறிஸ்ரைன் b ஹில்பின் | 56 | 84 | 1 | 1 |
| ஜடேஜா | c போரஸ்ட் b ஸ்ரக் | 18 | 35 | 0 | 0 |
| பதான் | c வேட் b ஹில்பின் | 19 | 27 | 1 | 1 |
| வினய் குமார் | b லீ | 6 | 12 | 0 | 0 |
| சகீர் கான் | c வேட் b ஹில்பின் | 9 | 11 | 0 | 0 |
| யாதவ் | (ஆட்டமிழக்காமல்) | 6 | 6 | 0 | 0 |
| உதிரிகள் | | 16 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 178 | | | |

இலக்கு இழப்பு: 1-8, 2-15, 3-16, 4-36, 5-82, 6-114, 7-149, 8-162, 9-168, 10-178

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| ஹில்பின் ஹஸ் | 9.3 | 1 | 33 | 5 |
| பிரட் லீ | 10 | 0 | 49 | 3 |
| கிறிஸ்ரைன் | 6 | 0 | 27 | 1 |
| ஸ்ரக் | 8 | 0 | 36 | 1 |
| டோகேர்ட்டி | 10 | 0 | 29 | 0 |

## அதிரடியில் கலக்கினார் லெவி

தென்னாபிரிக்க அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் நியூஸிலாந்து அணியை அதன் சொந்த மண்ணில் நேற்று வீழ்த்தியது. தென்னாபிரிக்க அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் லெவி 'ரி-20' அரங்கில் குறைந்த பந்துகளில் சதம் விளாசிய வீரர் என்ற பெருமையையும் தனதாக்கிக் கொண்டார்.

நியூஸிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு தென்னாபிரிக்க அணி விளையாடி வருகின்றது. முதலாவது 'ரி-20' ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி வெற்றி பெற்றிருந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் ஹமில்ரனில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் டீ வில்லியர்ஸ் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி மார்டின் குப்தில், பிராங்லின் இருவரது அதிரடி ஆட்டத்தின் மூலம் 20 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. சிறிய மைதானமாக இருந்தமையால் சகல துடுப்பாட்ட வீரர்களும் அதிரடியாகவே ஓட்டங்களைக் குவித்தனர். நியூஸி. சார்பில் குப்தில் 35 பந்துகளில் 47 ஓட்டங்களையும், பிரண்டன் மக்கலம் 35, பிராங்லின் 10 பந்துகளில் 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய தென்னாபிரிக்க அணிக்கு லெவி, அம்லா ஜோடி சிறப்பான அடித்தளம் அமைத்தது. நதன் மக்கலம் வீசிய முதலாவது பந்து பரிமாற்றத்திலேயே லெவியின் துடுப்பில் பந்து பட்டு 'எட்ஜாகி' ஆறு ஓட்டங்களுக்கு சென்றதுடன் லெவியின் அதிரடி தொடங்கியது. அம்லா 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த பார்னெலும் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அணி 41 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்தது.

நியூஸிலாந்தின் பந்து வீச்சை வெளுத்துக்கட்டிய லெவி புது வரலாறு படைத்தார். இதுவரையில் 'ரி-20' ஆட்டங்களில் கெயில் மற்றும் பிரண்டன் மக்கலம் இருவரும் 50 பந்துகளில் சதம் அடித்ததே சாதனையாக இருந்த போதும் லெவி நேற்றைய தினம் அதை மாற்றியமைத்தார். 45 பந்துகளில் தனது இரண்டாவது 'ரி-20' ஆட்டத்தில் அதி வேக சதத்தைக் கடந்தார்.

இறுதியில் தென்னாபிரிக்க அணி 16 பந்து பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. லெவி 51 பந்துகளில் 13 ஆறு ஓட்டங்கள், 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 117 ஓட்டங்களைப் பெற்றார். ஒரு ஆட்டத்தில் அதி கூடிய ஆறு ஓட்டங்கள் விளாசிய வீரர் என்ற பெருமையையும் ஆட்டநாயகன் விருதையும் லெவி தட்டிச் சென்றார். (5)



# கபடியில் சென்.அன்ரனிஸ் இருபிரிவுகளிலும் வென்றது

புதுக்குடியிருப்பு, பெப்.20

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் இருபிரிவுகளிலும் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

ஆண்களுக்கான கபடிப் போட்டியின் இறுதியாட்டத்தில் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கோம்பாவில் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் 40:18 என்ற புள்ளிஅடிப்படையில்வெற்றி பெற்றுச் சம்பியனானது.

பெண்களுக்கான கபடி இறுதியாட்டத்தில் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து கோம்பாவில் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 37:31 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

(ம-23)

## கிரிக்கெட் ஆட்டம்



யாழ்ப்பாணம், பெப்.20

யாழ்.மத்திய கல்லூரி அணிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் இடையிலான 19 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்றும் நாளையும் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (23)



சாவகச்சேரி இந்துக் க்ல்லூரியின் மெய்வன்மைப் போட்டியில் நாடாளுமன்றஉறுப்பினர் மு.சந்திரகுமார் வெற்றிக்கேடயம் வழங்குகிறார். (ம-9)

## தீவக வலயப் போட்டிகள்



யாழ்ப்பாணம், பெப்.20

தீவகக் கல்வி வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான சதுரங்கம், கரம் போட்டிகள் வெள்ளிக்கிழமை நாரந்தனை றோ.க. த.க. பாடசாலையில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை இடம்பெறவுள்ளது. (ம-23)

# கிளிநொச்சி மாவட்டத்தில் கரப்பந்தாட்ட இறுதியாட்டம்

கிளிநொச்சி, பெப்.20

கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்குப் பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் பாரதிபுரம் புதிய பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அம்பாள்குளம் இளந்தென்றல் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

காட்சிப் போட்டியில் கனகபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து 18 ஆவது கஜபாகு படை அணி மோதவுள்ளது.

பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட லயன்ஸ் கழகத் தலைவரும் கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபருமான பங்கயச்செல்வன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)





கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு கண்டாவளைப் பிரதேசசெயலர் எஸ்.சத்தியசீலன் பரிசில் வழங்குகிறார். (ம-6)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா நாகலிங்கம்



காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா நாகலிங்கம் அவர்கள் கடந்த 16.02.2012 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் (முன்னாள் கூட்டுறவு பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பத்மராணி, பத்மநாதன், உதயகுமாரி, லிங்கராஜன், காலஞ்சென்ற கேதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயும் இராசரட்ணம், லோகநாயகி, திருஞானசம்பந்தர், சித்திரா ஆகியோரின் அன்பு மாமியும் சர்மிளா, ரமணன், பத்மலோஜன், விஜிதரன், சங்கீதா, மேனகா, பவிதன், அயந்தன், கோகிலன், ஜதோஷன், வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.02.2012) திங்கட்கிழமை மாலை 4 மணிமுதல் 9 மணிவரை இல.1810, ALBIO ROAD, ETOBKOKE, அமைந்துள்ள GLENDALE CEMETERY இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (21.02.2012) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் 10 மணி வரை அதே இடத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பின்னர் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கருங்காலி, காரைநகர். திருமதி தம்பாப்பிள்ளை.

## மரண அறிவித்தல்

### திருமதி ஆசீர்வாதம் மேரிமலர் றோசா (லீலி)



மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆசீர்வாதம் மேரிமலர் றோசா (லீலி) நேற்று (19.02.2012) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமிர்தநாதார் - அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆசிர்வாதத்தின் (செல்லர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அருட்சகோதரி மேரியோசவ்வின் (தி.கு. சபை), பிரகாசநாதர் மற்றும் கண்மணி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயமணி, ராசா, நவம் (இந்தியா), வேவி, றோஸ்மலர் தங்கமணி, நவமணி, வவா (அதிபர். யாழ். மாதகல் சென். தோமஸ் றோ.க.பெ. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் செல்லமணி, நிர்மலா (இந்தியா), யேசுரத்தினம், அருமைத்துரை, செல்லத்துரை, ராசா, தேவராஜ் (யாழ். தபாலகம்) ஆகியோரின் அன்பு மாமியும் செல்வராணி, ராசகுமார், புஸ்பம், சுதன், சுறீன், அருட்பணி சுமன் (உதவிப்பங்குத் தந்தை, பாஷையூர்) சுதீன், சுகிதா, சுரேக்கா (கனடா), மதன் (இந்தியா), சுஜி, செல்லா (இந்தியா) வசந்தா , சுகந்தா, தாசன், சாந்தா, நிக்சன்; நிசா, கமிலஸ், றொபின்சன், றோசலின், வோல்ரன், ரூபன், அருணா, வதனா, சுகுனா, வசந்தன், மோகன், ஜெகன், விஜி, றெஜி, ஜெசி, றெனி, றெமி, றெனோ, லாவண்யா, அனோஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(20/02/2012) திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பற்றிமா வீதி,
மாதகல்

தகவல்:
ராசா (மகன்)

# திம்பிலிவில் மக்களுக்கு தொழில் வாய்ப்பு வசதிகள்

கிளிநொச்சி, பெப்.20

முல்லைத்தீவு மாவட்டம் கோம்பாவில் திம்பிலிவில் இடைத்தங்கல் கிராமத்தில் குடியமர்ந்தவர்களுக்குத் தொழில் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த 200 குடும்பங்கள் இதுவரை கோம்பாவில் திம்பிலிவில் இடைத்தங்கல் கிராமத்தில் குடியமர்ந்துள்ளனர்.

**முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன் போன்ற பகுதிகளில் வெடிபொருள்கள் அகற்றப்படும் வரையும் மேற்படி பகுதிகளைச் சேர்ந்த 200 வரையான குடும்பங்களைச் சேர்ந்த 550 பேர் கோம்பாவில் திம்பிலிவில் பகுதியில் உள்ள இடைநிலைக் கிராமத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், அம்பலவன் பொக்கணை ஆகிய இடங்கள் இதுவரை மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாமல் உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்து வருகின்றன.

முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன் போன்ற பகுதிகளில் வெடிபொருள்கள் அகற்றப்படும் வரையும் மேற்படி பகுதிகளைச் சேர்ந்த 200 வரையான குடும்பங்களைச் சேர்ந்த 550 பேர் வரையில் கோம்பாவில் திம்பிலிவில் பகுதியில் உள்ள இடைநிலைக் கிராமத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் கடற்றொழிலில் ஈடுபடுபவர்களுக்கும், விவசாயச் செய்கைகளில் ஈடுபடுபவர்களுக்கும் அவர்களுடைய தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளுக்கு அரை ஏக்கர் காணி வீதம் வழங்கப்பட்டுள்ளது. கடல்தொழிலில் ஈடுபடுபவர்களுக்குத் தொழில் செய்வதற்குரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகப் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் சி.ஜெயக்காந் தெரிவித்துள்ளார்.

(க-06)

# மத்தியஸ்தர் சபை

கிளிநொச்சி, பெப்.20

வவுனியா மாவட்டத்தின் வெங்கல செட்டிக்குளத்துக்கு 18 பேர் கொண்ட மத்தியஸ்தர் சபை உருவாக்கப்பட்டுள்ளது.

வெங்கலச் செட்டிக்குள மத்தியஸ்தர் சபை அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலர் என். கமலதாசன் தலைமையில் நடைபெற்றது.

இதில் வவுனியா மாவட்ட பதில் நீதிவான் மு.சிற்றம்பலம் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாகச் செட்டிக்குளம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எச்.எம்.பி ஜெரத், கோட்டக்கல்விப் பணிப்பாளர் கே.நித்தியானந்தம், செட்டிக்குளம் மகாவித்தியாலய அதிபர் எஸ்.யேசுதாஸன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்வருவோர் மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சபையின் தலைவராக சூடுவெந்தபுலத்தைச் சேர்ந்த ஜனாப் எம் சேரு.ராஜீதும், பிரதித் தவிசாளராக எஸ்.செல்வரட்ணமும் தெரிவு செய்யப்பட்டனர்.

உறுப்பினர்களாக ஜனாப் ஐயூப், ஜனாப் ஜாபிர், ஏ.கே தேவராசா, ஜனாப் எம்.ஐ ஆப்தீன், என் ஜெயசீலன்,, மௌலவி எம்.கே.ஜருபர்தீன் ஜனாப் சி.எம்.எஸ். சகாப்தீன் - ரி.சந்திரப்பிரகாஸ், எ.தர்மலிங்கம், கே.செல்வநாயகம், எஸ்.வீரமலை, ரி.தவலிங்கம், ர.மயில்வாகனம், எஸ். ஜெயசீலன், எஸ் நடேசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(க-400)

## பாலியல் துன்புறுத்தல்

அக்கராயன், பெப்.20

ஜெயபுரம் வடக்கைச் சேர்ந்த பாடசாலை மாணவன் ஒருவன் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

12 வயது நிறைந்த இந்தச் சிறுவன் கசிப்பு மற்றும் போதைப் பொருள்களைப் பாவிக்கும் நபரொருவரால் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகி முழங்காவில், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகளில் 10 நாள்கள் சிகிச்சை பெற்றுள்ளான்.

இதனுடன் தொடர்புடைய அதேயிடத்தைச் சேர்ந்த குறித்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-410)



கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் பொலிஸாரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நடமாடும் சேவையின் போது பெண் பொலிஸார் விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். (6)

# மின் விளக்குப் பொருத்துவதற்கு பிரதேச சபை நடவடிக்கை

வவுனியா,பெப்.20

வவுனியா தமிழ்ப் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளுக்கு மின்விளக்கு பொருத்துவதற்குப் பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

அண்மையில் பிரதேச சபைத் தலைவர் எஸ். சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது .

சபை நிதியிலிருந்து சுமார் நான்கு லட்சம் ரூபா செலவில் சுமார் 182 விளக்குகள் பொருத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேரியகுள வீதியில் நெளுக்குளம் சந்தி இராசேந்திர குளம் சந்திவரையும், வவுனியா மன்னார் வீதியில் நெளுக்குளச் சந்தியிலிருந்து கந்தன்குளச் சந்திவரையும், ஏ-9 வீதியில் நொச்சிமோட்டையிலிருந்து ஓமந்தை வரையும், உக்குளாங்குள வீதியில் உக்குளாங்குளச் சந்தியில் இருந்து ஸ்கந்தபுரம் சந்தி வரையும் வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

மேலும் பொன்னாவரசங்குள வீதியில் நாகவிலுப்பைக் குளத்திலிருந்து பொன்னாவரசங்குளச் சந்தி வரையும் கணேசபுரம் வீதியில் மரக்காரம்பனையிலிருந்து சுந்தரபுரம் சந்தி வரையும், தோணிக்கல் வீதியில் பொதி மண்டபத்தில் இருந்து அண்ணாவீதிச் சந்தி வரையும், சிதம்பரபுர வீதியில் இறம்பைக்குளத்திலிருந்து சிதம்பரபுரம் சந்தி வரையும், வவுனியா பூந்தோட்ட வீதியில், ஸ்ரீநகரிலிருந்து வவுனியா தேசியக்கல்வியியற் கல்லூரி வரை உள்ள வீதிகளிலேயே இவ் மின் விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

இந்த வீதிகள் அனைத்தும் மிக நீண்ட காலமாக மின் விளக்குகள் பொருத்தப்படாது காணப்படுவதுடன் போக்குவரத்து நெருக்கடி மிகுந்தவையாகவும் காணப்படுகின்றன. இதனால் இவ் வீதிகளில் அடிக்கடி விபத்துக்கள் நடக்கின்றன. அதனை அடுத்தே இவ்வீதிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின்விளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

(க-400)

## சிவராத்திரி விழா

வவுனியா கோயில்குளம் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி ஆலயத்தில் மகாசிவராத்திரி பெருவிழா இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணி தொடக்கம் மறுநாள் அதிகாலை 4.30 மணி வரை இடம்பெறவுள்ளது. இங்கு கலைநிகழ்ச்சிகளும் விசேட பூசைகளும் தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன. (க)

## சைவநெறித் தேர்வு முடிவுகள்

கிளிநொச்சி, பெப்.20

கிளிநொச்சி திருநெறிக் கழகத்தால் நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

தரம்-6

சதீஸ்கரன் சபிந்தா (ஞானிமடம் அ.த.க.பாடசாலை), விமலேஸ்வரன் பவிக்சன் (கிளிநொச்சி மகாவித்தியாலயம்), தவனேஸ்வரன் சுபிலா (புனித அந்தோனியார் அ.த.க.பாடசாலை),

தரம்-9

இராசேந்திரம் பவித்திரன் (ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலை), கிருபானந்தன் கிருஷாந்தி (உருத்திரபுரம் மகாவித்தியாலயம்), வரதராசா நந்தினி (கனகாம்பிகைக் குளம் அ.த.க.பாடசாலை),

தரம்-11

பரஞ்சோதி ஜீவனி (இராமநாதபுரம் மகாவித்தியாலயம்), கணேசமூர்த்தி துலக்ஸன்(பூநகரி மகாவித்தியாலயம்), ஸ்ரீநந்தகுமார் சிந்துஜா(உருத்திரபுரம் மகாவித்தியாலயம்),

தரம்-12, இந்துநாகரிகம்

பரமேஸ்வரன் விதுஜ்ா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), கந்தலிங்கம் கீர்த்திகா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), பரமேஸ்வரன் துசானி (பளை/ மத்திய கல்லூரி), பாலகிருஷ்ணன் ஜெகதீஸ்வரி (தருமபுரம் மகாவித்தியாலயம்),

தரம்-12, இந்துசமயம்

சாமிநாதன் சகுந்தலா (கிளிநொச்சி மகாவித்தியாலயம்), இராசேந்திரம் சரோஜினி (கிளிநொச்சி மகாவித்தியாலயம்), மகேந்திரன் யசோதா(கிளிநொச்சி மத்திய கல்லூரி)

தரம்-13, இந்துநாகரிகம்

சிவஞானசெல்வம் விதுஜா (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), கருணாகரன் குகேந்தினி (கிளிநொச்சி மத்திய கல்லூரி), பரமேஸ்வரன் விஜயந்தன் (பூநகரி மகாவித்தியாலயம்).

தரம்-13, இந்துசமயம்

மனோகரன் ஜனார்த்தனி (கிளிநொச்சி மத்திய கல்லூரி), இரவீந்திரன் கோபிகா (பளை மத்திய கல்லூரி), மகேந்திரராசா றஜித்தா (கிளிநொச்சி மகாவித்தியாலயம்), (க)

## மல்லாவி மத்திய கல்லூரிக்கு ஒன்றுகூடல் மண்டபம்

அக்கராயன், பெப்.20

மல்லாவி மத்திய கல்லூரிக்கு நவீன வசதிகளைக் கொண்ட ஒன்று கூடல் மண்டபமொன்று அமைக்கப்படவுள்ளது.

இந்தத் தகவலை வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் அவர் உரையாற்றுகையில்:

இங்கு நான் முன்பு பயணம் செய்த காலங்களில் இந்தக் கல்லூரி தொடர்பாக அறிந்து கொண்டேன். நாம் மீள்குடியமர்வு இடம்பெற்ற பகுதிகளிலுள்ள பாடசாலைகளின் வசதிகளை மேம்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். மல்லாவி மத்திய கல்லூரி 1000 பாடசாலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டதன் காரணமாக இந்தக் கல்லூரியின் வளங்கள் எதிர்காலத்தில் அதிகரிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

(க -18)

## வீதிகள் புனரமைப்பு

வவுனியா,பெப்.20

பிரதேச சபை உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கமைய நீண்ட காலமாகத் திருத்தப்படாத வீதிகள் பல துரிதகதியில் செப்பனிடப்படுகின்றன.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்குட்பட்ட பல வீதிகள், நீண்ட காலமாகச் செப்பனிடப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன. இதனால் இவ்வீதிகளினூடாகப் போக்குவரத்து மேற்கொள்வோர் பெரும் இடையூறுகளைச் சந்திப்பதை அடுத்தே, இவ்வீதிகளைச் செப்பனிடும் பணி துரிதமாக இடம் பெற்று வருகின்றது.

சபை உறுப்பினர்களான கே.சுபாஸ்கரன், க.பரமேஸ்வரன் ஆகியோர் பிரதேச சபைத்தலைவர் க. சிவலிங்கத்திடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து முதற்கட்டமாகத் தரணிக்குளம் வீதி, மரக்காரம்பனை வீதி என்பன செப்பனிடப்பட்டுவருகின்றன.

இப்பணிகள் அனைத்தும் சபை நிதியில் இருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-400)

## மணி விழாவில் மணி மகுடம்

வவுனியா,பெப்.20

ஓய்வுபெற்ற வவுனியா கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மு.பாலசிங்கத்தின் மணிவிழா வவுனியாக் கோட்டத்தைச் சேர்ந்த அதிபர்களின் ஏற்பாட்டில் கடந்த 14ஆம் திகதி நடைபெற்றது.

'மணி மகுடம்' என்ற நூலும் இதன்போது வெளியிட்டு வைக்கப்பட்டது.

(க-421)

## இந்திய நிதியுதவியுடன் பாடசாலைகள் புனரமைப்பு

அக்கராயன் பெப்.20

துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகள் பல இந்திய அரசின் நிதியுதவி யுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

மாங்குளம் மகாவித்தியாலயம், துணுக்காய் அ.த.க. பாடசாலை, கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, ஒலுமடு அ.த.க பாடசாலை, பாண்டியன்குளம் மகாவித்தியாலயம் உட்படப் பல பாடசாலைகளில் இந்தப் பணிகள் இடம்பெறுகின்றன.

கடந்த காலங்களில் போரினால் பாடசாலைகள் சேதமடைந்து வளங்கள் இழந்த நிலையில் காணப்படுகின்றன. மேலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் இந்தப் பணிகள் முழுமையாகவும், பகுதியளவிலும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

### செஞ்சிலுவைச் சங்கம் புனரமைப்பு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க நல்லூர் பிரிவைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் நல்லூர் பிரிவுக்கு உட்பட்டவர்கள் உறுப்பினர்களாக இணைந்து கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டிருந்தது. நல்லூர் பிரிவை மீள இயக்குவதற்கு யாழ். கிளை தீர்மானித்துள்ளதால் ஆர்வமுடையவர்கள் உறுப்பினர்களாக இணைந்து கொள்ளமுடியும்- என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

கட்டடம் பராமரிப்பதற்கு ஆள்கள் தேவை
தொடர்பு- 0217903634




கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ஜனநாயக அடிப்படை அரசியல் சமூக உரிமைகளை வென்றெடுப்பதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் எடுக்கப்பட்ட படங்கள்.

# தமிழர் பிரச்சினை பெரும் இக்கட்டில்; சர்வதேசமே எமக்கு வேண்டும் தீர்வு

1

களைச் சந்தித்திருக்கின்றோம்.

இந்தப் பிரச்சினைத் தீர்க்கப்படாவிட்டால் மீண்டும் இனப்படுகொலை நடைபெறும். வன்முறை நடைபெறும். அதற்கு சர்வதேசம் இடமளிக்கக்கூடாது. அதிலிருந்து எம்மைப் பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமை, இதனையே பகிரங்கமாகச் சர்வதேசத்திடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இனிமேல் சர்வதேசம் எமது பிரச்சிணையை எந்தெந்தவகையில் தீர்க்க முடியுமோ அந்தந்த வகையில் தீர்த்து வைக்க வேண்டும், அது அவர்களது கடமை.

- இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்தலைவர் இரா. சம்பந்தன் நேற்று கிளிநொச்சியில் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற "ஜனநாயக அடிப்படையில் அரசியல், சமூக உரிமைகளை வென்றெடுப்பதற்கான விழிப்புணர்வு" கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசும் போது குறிப்பிட்டதாவது :-

சுயநிர்ணய உரிமை என்றவுடன் தனிநாடு என்று தப்பான அர்த்தம் பிரித்துக் கூறப்படுகின்றது. இதைக் கேட்டு பதறித் துடிக்கின்றனர். ஒரு நாட்டின் இறைமை அங்கு வாழும் மக்களிடமே தங்கி உள்ளது. இறைமை மூன்று அம்சங்களை உள்ளடக்கியது.

**இவைதான் இறைமை**

முதலாவதாக ஆட்சி அதிகாரம். அதில் சட்டவாக்கம், நிர்வாக அதிகாரம் மற்றும் நீதி தொடர்பான அதிகாரம் என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இரண்டாவதாக அடிப்படை உரிமைகளும் மனித உரிமையும்

மூன்றாவதாக வாக்குரிமை அதுதான் உண்மையான ஜனநாயகத்துக்கு உயிர் கொடுப்பது. இம் மூன்றும் தான் இறைமை.

தமிழ் மொழிக்கு, தமிழ் மொழி பேசும் மக்களுக்கு உள்ளார்த்தமான இறைமை வேண்டும். இதில் ஏதாவது ஒன்று மறுக்கப்பட்டால் அது இறைமையே மறுக்கப்பட்டதற்கு ஒப்பாகும்.

இதுதான் சித்தாந்தமும் யதார்த்தமும். ஒற்றை ஆட்சி முறை நீக்கப்பட்டு சமஷ்டி முறை ஏற்படுத்தப்பட வேண்டும். நம்மை நாமே ஆளும் ஆட்சி அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

**ஜனநாயகத் தீர்ப்பு**

இதனை எமது மக்கள் 1976ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக இடம்பெற்ற நாடாளுமன்ற, மாவட்ட அபிவிருத்தி சபை, மாகாண சபை தேர்தல்கள் தொடர்ந்து இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் மூலம் தமது நிலைப்பாட்டைத் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளன. இது ஜனநாயகத் தீர்ப்பு. இதனை அரசு மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

பெரும்பான்மை இனத்தவர்கள் தாம் பெரும்பான்மையாக இருக்கின்றோம் என்ற ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு அடக்கி ஆட்சி செய்ய முடியாது. பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் அம்மக்களுக்குரிய உரிமைகள் மறுக்கப்படும்போது தான் பிரச்சினையே உருவெடுக்கின்றது.

அண்டை நாடான இந்தியாவில் பல மொழிபேசும் மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் தம்மைத் தாமே ஆளும் ஆட்சி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டவாக்கம், நிர்வாகம், அடிப்படை உரிமை, நிறைவேற்று அதிகாரம் என்பன உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

பனாகொடை சிறையில் குடியேற்றப்பட்டோம். நாம் நமது உரிமைக்கு முப்பது வருடங்கள் சாத்வீகப் போராட்டம் நடத்தினோம். உரிமைக்காக சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தினோம். இதனால் அப்போது புதிதாகக் கட்டப்பட்ட பனாகொடை முகாம் சிறையில் முதன்முதலாக 'குடியேற்றப்பட்டோம்'.

எனினும் தந்தை செல்வா மாறிமாறி வந்த அரசுகளுடன் முன்னாள் பிரதமர்களான பண்டாரநாயக்கா, டட்லி சேனநாயக்கா ஆகியோருடன் ஒப்பந்தம் செய்தார். ஆனால் அவை எல்லாம் கிழித்து எறியப்பட்டன. எதுவுமே நடைமுறைக்கு வரவில்லை.

**தந்தை செல்வாவின் சவால்.**

1970களில் புதிய அரசியல் சாசனத்துடன் அரசியல் நிர்ணய சபையும் உருவாக்கப்பட்டது. ஆனால் இந்த பிரயோசனமற்ற சபையை தமிழ் மக்கள் ஏற்கவில்லை. அதனை நிராகரிக்கின்றோம் எனக் கூறி தந்தை செல்வா தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்து அரசுக்குச் சவால் விட்டார். திட்டமிட்டு இழுத்தடிப்புச் செய்து நீண்டகாலம் கடத்தியபின் நடத்தப்பட்ட தேர்தலில் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன்வெற்றி பெற்றார். தொடர்ச்சியாக ஏற்பட்ட ஏமாற்றங்களின் உச்சக் கட்டமாகத்தான் வட்டுக் கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னரே ஆயுதப் போராட்டம் வெடித்தது. இதற்கு இலங்கை அரசே முதல் பொறுப்பு.

தமிழ் மக்களின் அடிப்படை ஜனநாயக, அரசியல், பாரம்பரியங்கள் மறுக்கப்பட்டதாலேயே போர் தொடர்ந்தது.

தனிநாடு கேட்டால் எம்மால் எதுவும் செய்ய முடியாது. சுய ஆட்சி கேட்டால் உதவுகின்றோம் என்று இந்தியா திட்டவட்டமாகக் கூறிவிட்டது.

போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதும் நாம் பல்வேறு மட்டங்களில் பேச்சுக்களை நடத்தினோம். 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் பொருத்தமற்றது. அது தமிழ் மக்களின் அபிலாசைகளை ஒருபோதும் நிவர்த்தி செய்யாது என்று ஆரம்பத்திலேயே நாம் அதனை நிராகரித்து விட்டோம்.

இலங்கை அரசு ஏற்றுக் கொண்ட, உறுதியளித்த ஒப்பந்தங்களை எல்லாம் உதாசீனமாகிவிட்டது.

இலங்கை ஐக்கிய நாடுகள் சாசனத்தில் கையொப்பமிட்ட ஒரு நாடு என்பதை மறந்துவிடக்கூடாது. இப்போது சர்வதேச சமூகம் தனது கூர்மையானபார்வையை இலங்கைமீது திருப்பி உள்ளது. ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு மனித உரிமை மீறல்களைப் புட்டுக் காட்டிவிட்டது.

இதற்கும் மேலாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இழப்புகள் தொடர்பாகப் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். இறைமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது.

**இலங்கைக்கு நெருக்கடி**

ஐநா.நிபுணர்குழுஅறிக்கை ஒருபுறம். ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் இன்னொரு பக்கம். சர்வதேச சமூகத்தின் அழுத்தம் மறுபக்கம் இவை எல்லாவற்றுக்கும் பதில் அளிக்கவும் பொறுப்புக் கூறவும் வேண்டிய கட்டாயம் இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் பாரம்பரிய மொழி, கலாசார, மத கோட்பாடுகளைக் கொண்டவர்கள். பாரம்பரியமாகத் தாம் வாழ்ந்த மண்ணில் தம்மை தாமே ஆளும் சுயநிர்ணய உரிமையுடன் கௌரவமாக வாழவே விரும்புகின்றோம். தமிழ் மக்கள்சமமாக, சம பிரஜைகளாக வாழ இடமளிக்க வேண்டும்.

இதய சுத்தியுடன் நேர்மையான பேச்சுக்களின் மூலம் நின்று நிலைக்கக்கூடிய நிரந்தரமான தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்குச் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இலங்கை அரசு செய்து கொண்ட ஒப்பந்தங்களை, வழங்கிய உறுதி மொழிகளை நிறைவேற்றவும் உறுதியான அரசியல் தீர்வு ஒன்றைக் காணவும் முன்வர வேண்டும்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் இறைமையின் அடிப்படையில் ஏனைய சமூகங்களைப் போன்று சுயகௌரவத்துடனும், சுய நிர்ணய உரிமையுடனும் அடிப்படை மனித உரிமைகளுடன் சமபிரஜைகளாக வாழக்கூடிய நியாயமான, நிலைத்து நிற்கக்கூடிய தீர்வின் மூலமே மீண்டும் இனப்படுகொலைகளும், வன்முறைகளும் இடம்பெறாவண்ணம் தடுக்க முடியும் - என்றார் சம்பந்தன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணித் தலைவர் சத்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், ஈ.சரவணபவன், சிறீதரன், சுமந்திரன் மற்றும் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்கள், பிரதித் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் புத்திஜீவிகளும் பெருமளவில் கலந்துகொண்டனர்.

(ஒ-02-06)

# கொழும்பு இராஜதந்திரிகள் குழு டில்லியில் இரகசிய ஆலோசனை

1

வித்தன.

இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஆதரிப்போம் என அறிவித்துள்ள அமெரிக்காவின் இராஜதந்திரிகள் இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து நாடு திரும்பியுள்ள நிலையில், இரு நாட்டு இராஜதந்திரிகளும் சந்தித்துப் பேசுவதானது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

அதேவேளை, இலங்கை விவகாரம் தொடர்பில் பாரதத்துடன் வொஷிங்டன் பல முறை கலந்துரையாடியுள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதொன்றாகும். அண்மையில், இந்தியத் தூதுவர் நிரூபமா ராவ் மற்றும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் ஆகியோர் சந்தித்து அது விடயம் தொடர்பில் பேச்சு நடத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராக பிரேரணை வரும் பட்சத்தில் எவ்வாறானதொரு நிலைப்பாட்டை அது விடயம் தொடர்பில் எடுப்பது என்பது குறித்து இந்திய அரசின் இராஜதந்திரிகள் குழுவொன்று தற்போது தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது என்றும், அந்தப் பரிசீலணையை தனக்குச் சாதகமான முறையில் மாற்றியமைக்கும் முயற்சியில் இலங்கை ஈடுபட்டுள்ளது என்றும் அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

அதேவேளை, 19ஆவது மனித உரிமைகள் கூட்டத் தொடரின்போது இலங்கைக்கு இந்தியா பக்கபலமாக இருந்தது. இந்தியா இம்முறை எவ்வாறானதொரு தீர்மானத்தை இலங்கை விவகாரம் தொடர்பில் எடுக்கும் என்பது அரசியல் வட்டாரத்தில் புரியாத புதிராகவே உள்ளது என்றும் ஆய்வாளர்கள் விமர்சித்துள்ளனர். (ஒ-சி)

## கிளிநொச்சி விபத்தில் 2 படையினர் படுகாயம்

1

வழி விடும்போது தடம் புரண்டதால் இந்த விபத்து ஏற்பட்டது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வொன்றில் கலந்துகொண்டுவிட்டு வாகனத்தில் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினரே படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-10-06-426)

## லத்தீன் அமெரிக்கப் பயணங்கள் இலங்கைக்கு கிடைத்தது தோல்வி

1

கூறும் விவகாரத்தில் ஐ.நாவுடன் இணைந்து பணியாற்றுமாறு லத்தீன் அமெரிக்க நாடுகள் இலங்கையிடம் கூறியுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் அல்லது பதில் நாடு ஒன்றே அமெரிக்காவின் பின்புல ஆதரவுடன் சமர்ப்பிக்கவுள்ளது எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

# கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் 'லிப்ற்' வசதியில்லாததால் நோயாளர் சிரமம்

கிளிநொச்சி, பெப். 20.

கிளிநொச்சி பொதுமருத்துவமனை மீள ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் இதுவரை 'லிப்ற்' வசதி இணைக்கப்படாமையால் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2008இல் இந்த மருத்துவமனை புதிதாகக் கட்டப்பட்டு இயங்க ஆரம்பித்தபோதும் லிப்ற் வசதிகள் செய்யப்பட்டபோதும் அதற்கான மின்சாரத்தைப் பெறுவதில் சிரமம் ஏற்பட்டதால் அது இயங்காமல் இருந்தது.

**இதனால் அவசர சிகிச்சை பெறவேண்டிய, சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய, உடற்காயங்களுக்குள்ளான நோயாளர்கள் சிகிச்சையைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.**

போரின் பின்னர் இந்த மருத்துவமனை மீளப்புனரமைக்கப்பட்டு இயங்க ஆரம்பித்ததில் இருந்து இதுவரை லிப்ற் வசதியை இயக்க எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் அவசர சிகிச்சை பெறவேண்டிய, சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய, உடற்காயங்களுக்குள்ளான நோயாளர்கள் சிகிச்சையைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அவசர சிகிச்சைப் பிரிவு, சத்திர சிகிச்சைக் கூடம், விபத்துக்களுக்கான சிகிச்சை விடுதி என்பன மேல் மாடியில் இயங்குவதால் இந்தப் பகுதிகளுக்கு நோயாளர்களை எடுத்துச் செல்வதில் இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

எனவே நோயாளர்களின் சிரமத்தைக் கருத்திற்கொண்டு லிப்ற் வசதியை இயங்கச்செய்ய வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஒ-10-06

**வகுப்புகள்**

தரம் 3,4,5 ஆகிய மாணவர்களுக்கான வகுப்புகள், புலமைப் பரீட்சையில் விசேட சித்தி பெறக் கூடிய வகையில் பல வருட அனுபவம் மிக்க ஆசிரியரினால் வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.

T.P- 0777112406

**ஆஸ்திரேலியா குடும்ப விசா**

தாதிகளே உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்

5 வருட விசா பெற்று நீங்கள் இலகுவாக ஆஸ்திரேலியா சென்றால் உங்களுக்கு

அதிகளவான வேதனம் 800,000 மேல் (மாதாந்தம்)

காத்திருக்கின்றது. ஆலோசனைக்கு நேரில் வாருங்கள். இறுதி நாள் 25.02.2012

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 0212219016

மு.ப 9 - பி.ப 5.30 வரை. 0212219016

கிளை: 115ஏ, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி.0214914527

மெல்பேர்ண் ஆஸ்திரேலியா : 0061412479209.

bcs The Chartered Institute for IT

Certificate in IT
Diploma in IT
PGD in IT



New Batch Start on 03.03.2012 (10.00 a.m.)

சர்வதேச தரம் வாய்ந்த கணனி பட்ட/பட்டயக் கல்வியை குறைந்த செலவுடன் IIS இல் பயிலும் அரிய வாய்ப்பை தவறவிடாதீர்கள்

வட இலங்கையிலே BCS இன் நேரடியான அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு நிறுவனம்

IIS CITY CAMPUS

200,Sivan Pannai Road, Jaffna
Tel:-021 222 8060 Fax:-021 222 6933
Web:- iis.edu.lk

## அமெரிக்காவின் கோரிக்கையை இலங்கை தட்டிவிட முடியாது

»1 கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் இன்று ஜனநாயக ரீதியாக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கமுடியாத சூழ்நிலையே ஏற்பட்டுள்ளது. வீதியில் இறங்கிப் போராடினால் சுட்டுப் படுகொலை செய்யும் ஜனநாயகமே நாட்டில் உள்ளது.

தமிழ் மக்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்று குவித்த அரசுக்கு இதெல்லாம் சர்வ சாதாரணமான செயல். புலிகளை அழிக்கின்றோம் எனக் கூறி சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மக்களைப் படுகொலை செய்தது அரசு.

அன்று புலிகளில் ஆரம்பித்த கொலைவெறி, இன்று நாட்டு மக்களைச் சுட்டு வீழ்த்தும் நிலைக்கு வந்துவிட்டது. இவற்றைப்பற்றி நான் பேசுவதால் என்னையும் கடத்திச் சென்று படுகொலை செய்துவிடக்கூடும். ஏனெனில், அராஜகமான ஆட்சி முறையே நாட்டில் உள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துமாறு நாம் அரசை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம். அதிகாரப்பரவலாக்கல் என்ற விடயம் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைத்தான் அரசு முதலில் செய்யவேண்டும். இதனை விடுத்து இராணுவ நீதிமன்றம் என்ற போலி நாடகத்தை ஆரம்பித்துள்ளது அரசு.

போர்க்குற்ற விசாரணைக்கு மஹிந்த அரசு இணங்கும் என்ற நம்பிக்கை எமக்கு கடுகளவேனும் இல்லை. இவையெல்லாம் உலகை ஏமாற்றுவதற்கு அரங்கேற்றப்படும் போலி நாடகமாகும்.

ஜெனிவா மாநாட்டை இலக்கு வைத்தே அரசு இந்த அவசர மாற்றங்களைத் துரிதமாக முன்னெடுக்கின்றது - என்றார்.

(ஒ-சி)

**மணல் விற்பனைக்குண்டு**

நாற்பது வருடங்களாக கட்டிட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.

4 டிரக்டர் - 24000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 -38/-)

தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

## ஜனாதிபதி சிவராத்திரி வாழ்த்துச் செய்தி

»1 பிட்டிருப்பவை வருமாறு:-

சிவபெருமானைப் போற்றி அனுஷ்டிக்கப்படும் மகா சிவராத்திரி பண்டிகையை முன்னிட்டு இலங்கைவாழ் இந்துக்களுக்கு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

விரதம் அனுஷ்டித்தல், கோயில்களில் இரவில் விழித்திருத்தல், விளக்கேற்றல், சிவபெருமானைப் போற்றித் தேவாரம் பாடுதல் ஆகிய கிரியைகளின் மூலம் உலகெங்கிலும் வாழும் இந்துக்கள் இப்புனித தினத்தைக் கொண்டாடுகின்றனர். அறியாமை இருளகற்றி அறிவு தீபத்தை ஏற்றிவைப்பதற்கும், தமது சொந்த, சமூக வாழ்க்கையில் ஐக்கியத்தையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்துவதற்கான மனித முயற்சிகளை மகா சிவராத்திரி அடையாளப்படுத்தி நிற்கின்றது.

இலங்கைவாழ் இந்துக்கள் பல நூற்றாண்டுகளாக ஏனைய சமூகங்களைச் சேர்ந்த மக்களுடன் சகோதரத்துவத்துடனும், சுபீட்சத்துடனும் நல்லிணக்கமாக வாழ்ந்துவருகின்றனர். நாடெங்கிலும் தற்போது நிலவுகின்ற அமைதியான சூழலில் இந்த முக்கியத்துவம் வாய்ந்த சமய நிகழ்வை அவர்கள் உண்மையான சகோதரத்துவ உணர்வுடனும், பயபக்தியுடனும் கொண்டாடுகின்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மகா சிவராத்திரி தினத்தில் அவர்கள் செய்யும் பிரார்த்தனைகள் அவர்களது நல்வாழ்வுக்குப் பலமாக அமையும் அதேநேரம், நாட்டி லுள்ள எல்லா சமூகங்கள் மத்தியிலும் ஐக்கியத்தையும் சகவாழ்வையும் கட்டியெழுப்பவும் உதவவேண்டும் என நான் பிரார்த்திக்கின்றேன்.

இலங்கைவாழ் இந்துக்களுக்கு மகிழ்ச்சி நிறைந்த மகா சிவராத்திரி வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். வளமானதோர் எதிர்காலத்திற்கான அவர்களது எதிர்பார்ப்புகள் நிறைவேற எனது வாழ்த்துகள்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-சி)

## ஜெனிவாவில் இலங்கையைச் சிக்கவைக்க உள்நாட்டிலும் சூத்திரதாரிகள் சதி முயற்சி

»1 தொடர்பில் தவறான கருத்துகளை இவர்கள் பரப்புவதற்கு முயற்சிக்கின்றனர்.

சூழ்ச்சிக்காரர்கள், அரச சார்பற்ற அமைப்பினர் வெளிநாட்டிலுள்ள சிலர் ஆகியோர் உள்நாட்டில் அசாதாரணமான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு முயற்சிக்கின்றனர். ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரின்போது, இலங்கைக்கு அசௌகரியமான நிலைமையை ஏற்படுத்துவதே இவர்களின் நோக்கம்.

மஹிந்த சிந்தனையில் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் உரிய வகையில் நிறைவேற்றப்படும் என நான் பூரணமாக நம்புகின்றேன் - என்றார். (ஒ-சி)

## ஜெனிவாவில் மண்டியிடோம்: வெற்றிக்கான போராட்டம் தொடரும்

»1 வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தச்செவ்வியில்அமைச்சர் முக்கியமாகத் தெரிவித்துள்ள சில கருத்துகள் வருமாறு:-

தென்னாபிரிக்காவில் கற்றறிந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எட்டு வருடங்கள் எடுத்தன. நாம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையைப் பகிரங்கப்படுத்தி இரண்டு மாதங்கள்தான் கடந்துள்ளன. அதற்குள் இவற்றைச் செய்துமுடிக்க முடியுமா?

தென்னாபிரிக்கா அனைத்துவித பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்தியதா என நாம் ஜெனிவாத் தொடரில் கேள்வி எழுப்புவோம். அத்துடன், அவ்வாறு செய்ய முடியுமா என்றும் நாம் கேட்போம்.

பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கைக்கு கால அவகாசம் தேவையல்லவா? கொத்துரொட்டியொன்றைத் தயாரித்து வழங்குவதுபோல் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியாது.

அனைத்து மக்களுக்கும் உரித்தான வகையிலேயே அரசியல் தீர்வு வடிவமைக்கப்படவேண்டும். நாட்டுக்காக உயிரைத் தியாகம்செய்த இராணுவத்தினரைக் காட்டிக் கொடுக்க முடியுமா? இந்த விடயத்திலும் எமக்கென்று சில கடப்பாடுகள் உள்ளன. சர்வதேசத்தின் தாளத்திற்கேற்ப எம்மால் ஆடமுடியாது. எமது சுயாதீனத்தன்மை, இறையாண்மை ஆகியவற்றை சர்வதேசத்திடம் தாரைவார்ப்பதற்கு நாம் தயாரில்லை. - என்றார்.

(ஒ-சி)

NALIN in மெகா அதிரடி

NALIN
HP AUTHORIZED DEALER

hp



இன்றைய கணணி விலையின் அதிகரிப்பின் மத்தியில் (Assembled கணணியை விட குறைந்த விலையில்) ஒரு புத்தம்புதிய Hp Compaq Branded Pc யினை மிக மலிவான விலையில் பெற்றுக்கொள்ளுங்கள்.**

(Dual Core,i3 i5) 20" LCD Monitor உடன்

Luxan Plaza, Kasthuriyar Road , Jaffna. Ph : 0777667975, 2220838.

195/2, Parameswara Junction, Jaffna. Ph : 0777667974, 2221121 ,2221166

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.